
தமிழரசு
1·8·1978

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித் தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப் பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை உலகத்தில் எங்குமே இருந்ததில்லை என்று சொல்லத் தோன்றுகிறது."

— அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை ஒழிக்கப் பாடுபடுவதே அண்ணல் காந்தியடிகளுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்!

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

# நற்பணி ஆற்றுவதே நமது இலட்சியம்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பதவி ஏற்று ஓராண்டு முடிந்திருக்கிறது. இந்த ஓராண்டில் அரசு நிறைவேற்றிய பணிகள் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்களை அவர் அனுமதியுடன் உங்கள் முன் வைக்கிறேன்.

பதவி ஏற்ற 77ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முப்பதாம் நாள் இலட்சோப இலட்சம் மக்கள் முன்னிலையில், அமரர் பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலையின் முன்னே, நின்று, தமிழக மக்களுக்கு, அமைச்சரவையின் சார்பில், மாண்புமிகு முதல்வர் ஓர் உறுதி அளித்தார்கள்.

''இலஞ்ச லாவண்யம் இல்லாத—ஊழலற்ற—நீதித் துறையில் நிர்வாகம் தலையிடாத—அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம். | எங்களின் வாழ்வு, வசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் தகர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம்.| இதனை அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்''.

இந்த உறுதி மொழியை மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை உறுதியோடும், அதேநேரத்தில் பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## முதல்வரின் கருத்துக்கள்

ஒரு புதிய அரசு பொறுப்பு ஏற்ற ஓராண்டுக் காலத்தில் ஆற்றிய பணிகளை -சாதனை' என்ற பெயரால் அழைக்க நமது முதல்வர் விரும்பவில்லை. ஆனால்-ஆற்ற வேண்டிய பணிகளுக்கு அடித்தளம் அமைத்திருக்கிறோம். . . நிகழ்த்த வேண்டிய சாதனைகளுக்கு வடிவம் கொடுத்திருக்கிறோம். . . நடைபெற்று வந்த நல்ல காரியங்களைத் தொடர்ந்திருக்கிறோம். . . . தடைப்பட்ட சிறந்த திட்டங்களைப் புதுப்பித்து இருக்கிறோம்.

எதிரிப் படைகளால் வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட பாலங்களையும், பாதைகளையும் மீண்டும் புதிதாக அமைத்துக் கொண்டே முன்னேறும் போர்க்கள ராணுவத்தைப் போல் எங்களுடைய பணி இந்த ஓராண்டில் அமைந்தது; இந்த உண்மையை நியாய உணர்வு படைத்த யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஏனெனில், கடந்த காலத்திலே ஆட்சி செய்தவர்கள்—இடைக் காலத்திலே நிர்வாகப் பொறுப்பை ஏற்றவர்கள் —இவர்களெல்லாம் நிறைவேற்றத் தவறிய அல்லது நிறைவேற்ற மறுத்த, பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளையும் ஏற்றுத் தீர வேண்டிய பொறுப்பு எங்கள் மீது சுமத்தப் பட்டது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், பொதுத் தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற சமூகத்தின் எல்லாத் தரப்பிலும், நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடந்த பிரச்சினைகள் போராட்டங்களாக வெடித்தன. இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே இருந்தவர்கள் அன்றைக்கு நிறைவேற்றாததோடு இன்று இந்தக் கிளர்ச்சிகளுக்குத் தூபமிடும் செயலில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்கிறேன். . .

விவசாயிகள் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று 72ஆம் ஆண்டிலே கிளர்ச்சி செய்தார்கள். அந்தக் கிளர்ச்சியிலே கூட, இன்று தலைகாட்டிய வன்முறைச் சம்பவங்கள் நிகழவில்லை. அந்தக் கிளர்ச்சியை ஒடுக்க அன்றைக்கு இருந்த அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்து, 20க்கும் மேற்பட்டவர்களை பலி வாங்கியது. இந்தக் கொடுமை போதாது என்று, அவசர நிலை அமலாக்கப்பட்டவுடன், அதைப் பயன்படுத்திக் கொண்டு, 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், தி.மு.கழக அரசு 12 காசாக இருந்த மின் கட்டணத்தை 16 காசாக உயர்த்தியது. ஆனால் இந்த அரசு 16 காசாக இருந்த மின் கட்டணத்தை, பெரிய விவசாயிகளுக்கு 14 காசாகவும், சிறிய விவசாயிகளுக்கு 12 காசாகவும் குறைத்துள்ளது. இது போக, கடன்களுக்கு வட்டிக் குறைப்பு, சலுகை விலையில் உரம்—பூச்சி மருந்து, நிலவரியில் தள்ளுபடி, கடன் வசூல் ஒத்திவைப்பு என்று பல முறைகளால் ஏறத்தாழ ரூ. 10 கோடிக்கு மேல் சலுகைகள் வழங்கியுள்ளது.

இதைப் போலவே அன்றைய ஆட்சியினரால் அரசு அலுவலர் கோரிக்கைகள் ஏற்கப்படாமல் மிரட்டப்பட்டு வந்தனர். அவர்களின் கோரிக்கைகளையும் இந்த ஆட்சிதான் நிறைவேற்றியது. போக்குவரத்துத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டங்கள் 1973, 1975 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் கடுமையான அடக்கு முறைகளால் முறியடிக்கப்பட்டன. தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டனர். அப்படிப் பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 98 பேர்களுக்கு இந்த அரசு நிவாரணம் அளித்தது. இப்படி, கடந்த காலத்தில் பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளும், ஏற்கப்படாமல் அடக்கி ஒடுக்கி வைத்ததன் காரணமாகப் பிரச்சினைகள் வெடித்துக் கிளம்பின.

செயற்கையாகத் தோன்றிய இந்தத் தொல்லைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போதே, இயற்கையின் சீற்றம் என்றும் இல்லாத அளவு தமிழகத்தைத் தாக்கியது.

கோடிக் கணக்கில் சொத்துக்களுக்குச் சேதம் — பல்லாயிரக் கணக்கான வீடுகள் நாசமடைந்தன—நூற்றுக் கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன. இவ்வளவு இழப்புக்களும் இந்த அரசு பதவி ஏற்று நான்கு மாதங்களே ஆன நிலையில் நிகழ்ந்து விட்டன. இந்தச் சோதனையையும் இந்த அரசு உறுதியுடன் நின்று சமாளித்தது.

## முகப்பில்

இப்பொழுது குற்றாலத்தில் சாரல் திருவிழா. அருவிகள் நிரம்பி வழிகின்றன.

''இந் நானிலத்தில் உள்ள நன்னீர் அருவிகளுள் தலைசிறந்தது குற்றால அருவி'' எனத் தமிழின் தொன்மையையும் செம்மையையும் உலகறியக் காட்டிய கால்டுவெல் பெருமகனார் பாராட்டியுள்ள குற்றால அருவிகளுள் சிறப்புமிக்க ஐந்தருவியின் எழில்மிகு தோற்றத்தை மேலட்டையில் காணலாம்.

அழிந்துவிட்ட குடிசைகள் ஆக்கப்பட்டன — குடிசை ஒன்றுக்கு இருநூறு ரூபாய் தரப்பட்டது — இது வரை முன்னால் இருந்த அரசு கொடுத்த தொகை 80 ரூபாய்தான். மண் மூடிவிட்ட வயல்வெளிகள் சீராக்கப்பட்டன. போர்க் கால வேகத்தில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட அழிவிற்குப் பிறகும் அரிசி உற்பத்தி சென்ற ஆண்டில் 63 இலட்சம் டன்னாக உயர்ந்தது. அதற்கு முந்திய ஆண்டு உற்பத்தி 53 இலட்சம் டன்தான். அரிசி உற்பத்தி அதிகமானதால் நடமாட்டத்தடை அகற்றப்பட்டது. மாவட்டங்களுக்கிடையே எல்லைச் சாவடிகள் எடுக்கப்பட்டன. மக்கள் சுயமாக தட்டுப்பாடின்றி அரிசி வாங்க முடிகிறது. கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதால், விலை குறைந்துவிட்டது. 1975-ஆம் ஆண்டில் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை ஒரு கிலோ மூன்று ரூபாயிலிருந்து நான்கு வரை இருந்தது. இந்த ஆண்டு இவ்வளவு புயல், வெள்ளச் சேதத்திற்குப் பின் ரூ. 1.50முதல் 1.80 வரை தான் விற்பனை ஆகிறது. கடந்த 5 ஆண்டுகளில் இந்த அளவு குறைந்த விலையில் அரிசி விற்றதில்லை.

ஆனால் அதே நேரத்தில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் குவிண்டாலுக்கு 90—95 ரூபாய் என்ற விலைகளில் அரசே நெல்லைக் கொள்முதல் செய்தது. இதைப் போலவே, எண்ணெய், மிளகாய் தனியா—போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் பெரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளன.

பதுக்கல்—நடுத் தரகர் — கொள்ளை இலாபம்—வர்த்தகச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்கள் ஒடுக்கப்பட்டு, நியாயமான வர்த்தகர்களின் சுதந்திரமும், வாங்குவோரின் நலனும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவைகளையெல்லாம் முந்திய ஆட்சியாளர்கள் சாதனை என்று பறை சாற்றுவார்கள். உதாரணமாக, குடி தண்ணீர் திட்டத்திற்காக எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் 53 கோடி ரூபாய் செலவு செய்தோம் என்று கணக்கைக் காட்டி எதிர்க் கட்சி வக்கணை விளம்பரம் வெளியிடுகிறது. இவர்கள் கணக்குச் சொன்னதற்குப் பிறகுதான், அடேயப்பா —53 கோடி செலவு செய்திருக்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது. இந்த 53 கோடிக்குள் தானே, வீராணம் திட்டத்தின் பேரால் 23 கோடி, பாலாற்றிலிருந்து பரங்கிமலைக்கும், பல்லாவரத்திற்கும், ஆலந்தூருக்கும் தண்ணீர் கொண்டு வருவதாகச் செலவு செய்த 2 கோடியும் அடங்கிக் கிடக்கிறது. இப்படி இன்னும் பல கோடிகள் திட்டங்களின் பெயரால் செலவழிக்கப்பட்ட கோடிகள் என்று எண்ணத் தோன்றுகிறது. என்ன பலன்? வக்கணை விளம்பரத்திலே தெரிவித்திருப்பது போல 'பூஜ்யம்' தான். கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தோமே, தவித்த வாய்க்குத் தண்ணீர் எங்கே? என்று கேட்கும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் இந்த அரசைக் கேலி செய்து வக்கணை விளம்பரம் வெளியிடுகிறார்களே இதுதான் வேதனைக்குரிய வேடிக்கை!

ஆனால் இந்த அரசு 1-7-'77 முதல், திட்டமிட்டு இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் கிடைக்காத 4,020 கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்கத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. நகர்ப்புற குடிநீர்த் திட்டத்திற்காக சுமார் 303 இலட்சத்தில் திட்டமிடப்பட்டு இதுவரை 275 இலட்சம் செலவிட்டு 13 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை தவிர கேரளத்தில் மேற்கே பாயும் நதி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடவும், ஆந்திரத்திலிருந்து சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வரவும், அந்தந்த அரசுகளோடு நட்புறவு முறையில் பேசி ஒப்புதல் பெறப்பட்டு, ஆய்வுப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இதை எல்லாம் சாதனையென்று நாங்கள் கூறமாட்டோம். ஏன் எனில், தமிழகத்தின் தலைநகராம் சென்னையில்—சைதைப் பகுதியில், ஒரு சிலையை நிறுத்தி அதன் கைகளிலே ஒரு குடத்தைக் கொடுத்து அதன் வழியாகத்தான் வீராணத்திலிருந்து காவிரி நீர் சென்னைக்கு வரப் போகிறது என்று நம்மையெல்லாம் நம்ப வைத்து ஆண்டுகள் 10 ஆகியும், ரூ. 23 கோடி செலவாகியும், வீராணத்தை விட்டே காவிரித் தாய் புறப்படாமல் இருக்கும்

விந்தையைச் செய்துள்ள அற்புதம் படைத்தவர்களுக்கே அந்த உரிமையை அளித்து விடுகிறோம். எப்படியாவது, நல்ல தண்ணீருக்காக காடு மேடெல்லாம் அலையும் கிராமப்புறத்துத் தாய்மார்களின் தவிப்பைத் தீர்த்து, கண்ணீரைத் துடைத்த பிறகுதான், 'சாதனை' என்று நாங்கள் கூறுவோம்.

சாதனை மன்னர்களின் ஆட்சியிலே, 1972 முதல் திரும்பத் திரும்ப மின் வெட்டு அமல்படுத்தப்பட்டு வந்ததைத் தமிழகம் மறக்க முடியாது. அது மட்டுமின்றி, மின் வெட்டை அறிவிப்பது; அதையொட்டி மின் சக்தி வழங்குவதில் பேரங்கள் — வியாபாரங்கள். இப்படி ஊழலுக்கு உறைவிடமாக விளங்கி வந்த மின் வெட்டை இந்த அரசு பதவியேற்ற முதல் நாளே நீக்கியது. இதுவரை மின் வெட்டு இல்லை; கடந்த 12 மாதங்களில் 938 கோடி யூனிட் மின் சக்தி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித் துறைக்காக இந்த ஆண்டு 196 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1975—76ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 123 கோடிதான். கடந்த ஆண்டில் 1,100 ஆசிரியர்கள் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. இந்த ஆண்டு 1,400 ஆசிரியர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் பல்வேறு வகையான பள்ளிகள் 109—புதிதாகத் துவக்கப்பட்டன. கல்லூரிக் கல்விக்காக 1975—76ல் 10 கோடி ரூபாய் — இந்த ஆண்டில் 21 கோடி ரூபாய் ; 2 மடங்காக இந்த அரசு உயர்த்தியுள்ளது.

74ஆம் ஆண்டிலேயே, பல்கலைக் கழக மான்யக் குழுவின் பரிந்துரையின்படி கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதத்தை ஏற்றுக் கொள்ளாமல், அன்றைய அரசு, கல்லூரி ஆசிரியர்களின் பால் மிகுந்த கருணை காட்டி, அவர்களைச் சிறையில் அடைத்தது. மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கப்பட்டது. ஆனாலும் சம்பள விகிதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்த அரசுதான் 1—1—74ல் இருந்தே கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் வகையில் உத்தரவிட்டது.

பி.யு.சி. வகுப்புக்கு மேல் படிக்கும் அரிசன, பழங்குடி மாணவர்கட்கு, பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால்தான் கல்லூரிப் படிப்புக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு வருமான வரம்பே இல்லாமல் எல்லா அரிசன—பழங்குடி மாணவர்கட்கும் கல்லூரிப் படிப்பை இலவசமாக்கியுள்ளது.

மேலும் பள்ளி இறுதித் தேர்வில் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி, தேர்வு பெற்றால் கல்லூரியில் சேரலாம் என்று ஆணை பிறப்பித்ததால் இன்று தாழ்த்தப்பட்ட — பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சுலபமாகக் கல்லூரிகளில் சேர வாய்க்குக் கிடைத்தது.

எந்த ஆண்டையும் விடச் சென்ற ஆண்டுதான், மருத்துவக் கல்லூரியில் தாழ்த்தப்புட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக இடம் பெற்றனர். ஏழை அரிசனங்களில் எவரேனும் இறந்துவிட்டால், அவரது ஈமக் கடன்களை நிறைவேற்ற அரசு உடனே, 50 ரூபாய் நிதியுதவி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் திட்டத்தில் ஊழலைப் போக்கி, ஒழுகாத வீடுகள் அமைக்க, அதிகமாக வீடு ஒன்றிற்கு இரண்டாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு உள்ளது. இப்படி இன்னும் எத்தனையோ சலுகைகள். . . .

போக்குவரத்துத் துறையில், எக்ஸ்பிரஸ் பஸ்களின் கட்டணத்தை 6 காசுகளிலிருந்து 5 காசாகக் குறைத்திருக்கிறோம். கிராமப் புறங்களில் 221 புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டு, 446 கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 5 கோடிக்கு மேல் செலவு ஏற்படும் அளவில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அதற்காக ஆத்திரம் அடையாமல், தொழிலாளர்கட்கு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

மூடிக் கிடந்த 8 ஆலைகளில் இந்த அரசின் முயற்சியால், 5 ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன. 1,740 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 1974 முதல் மூடிக் கிடந்த இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் இந்த அரசின் முயற்சியால் திறக்கப்பட்டது. 436 பேர் மீண்டும் வேலை பெற்றனர். கடந்த ஓராண்டில் சிறு தொழில்கள் மூலம் 35,388 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

மேலும், கிராமத் தொழிலுக்கென்று, தனி அமைச்சரும், நெசவுத் துறைக்கெனத் தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டு, அந்தந்தத் துறைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.


மீனவர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், கிணறு வெட்டுவோர் ஆகியோர் தொழிலில் ஈடுபடும்போது மரணம் அடைந்தால், ஆளுக்கு ரூ. 5,000 என்று உதவுவது போன்ற திட்டங்களிலிருந்து, வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்கட்கு மாதந்தோறும் 100 ரூபாய் — ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது 10,000 ரூபாய் என்று இப்படிப் பல்வேறு உதவித் திட்டங்கள் வரை எடுத்துச் சொன்னால், பெருகும்.

அதனால்தான் குறுகிய நேரத்திற்குள் சிலவற்றை மட்டுமே சொல்லியிருக்கிறோம். தமிழக முதல்வரைப் பொறுத்த வரை, அமைதியோடு, ஆனால் உறுதியோடு, எதிர்ப்புகளை புறந்தள்ளி, நல்லோர் ஆதரவுடன்— ஏழை எளிய மக்களின் இதய வாழ்த்துக்களுடன் நாட்டு மக்களுக்கு நற்பணி ஆற்றுவதுதான் இலட்சியம். மக்கள் நம்பிக்கையோடு அளிக்கும் வரிப் பணத்தை மோசம் செய்யாமல், ஒவ்வொரு காசும், உழைப்பின் சின்னம் என்பதை உணர்ந்து, முழுத் தொகையும், சிந்தாமல் சிதறாமல், மக்களுக்கே பயன்படும் வகையில் திட்டங்கள் தீட்டி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் மாண்பு மிகு புரட்சித் தலைவரின் இலட்சியம். அதுதான் அமரர் அண்ணா எங்களுக்குக் கற்றுத் தந்த வழி. அந்த வழியில் செயலாற்றியதால்தான் நபர் வாரித் திட்ட மூதலீடு 76-77ஆம் ஆண்டில் 59 ரூபாயாக இருந்ததை, 77-78ஆம் ஆண்டில் 73 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். இந்தப் பணியைத் தொடர்வோம்.

இதற்குத் தமிழ்மக்கள் நல்லாதரவு நல்க வேண்டுகிறோம். ''ஊழல் இல்லை-இலஞ்சம் இல்லை —நிர்வாகத்தில் குறுக்கீடு இல்லை —நீதியில் தலையீடு இல்லை'' என்று நல்லோர் அனைவரும் பாராட்டுவதை ஒரு சாதனை என்றால் அதை நான் மனநிறைவோடு ஏற்றுக்கொள்கிறேன் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் என் மூலம் நாட்டிற்கு வழங்கும் செய்தி.

அண்ணாவின் அரசு வாழ்க! வெல்க!

**—தமிழக அரசு ஓராண்டில் நிறைவேற்றிய பணிகள் குறித்து மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களின் சார்பில், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் 22-7-'78 அன்று வானொலியில் ஆற்றிய உரை.**




தென் மாநில முதலமைச்சர்கள்
மாநாடு 16-7-78 அன்று
சென்னையில் நடைபெற்றது.
மாநாட்டில் கலந்துகொண்ட
மாண்புமிகு ஆந்திர முதல்வர்
திரு சென்னா ரெட்டி அவர்கள்,
மாண்புமிகு கருநாடக முதல்வர்
திரு தேவராஜ் அர்ஸ் அவர்கள்,
மாண்புமிகு தமிழக முதல்வர்
திரு எம். ஜி. ஆர். அவர்கள்,
மாண்புமிகு கேரள முதல்வர்
திரு ஏ.கே. அந்தோணி அவர்கள்,
மாண்புமிகு புதுவை முதல்வர்
திரு எஸ். ராமசாமி அவர்கள்.

# கற்க, கசடறக் கற்க!

இரண்டாண்டுக் காலத்துக்கு முன் தமிழ்நாட்டில் சுமார் 5,000 பள்ளிகளில் மட்டுமே வானொலிப் பெட்டிகள் இருந்தன. ஆனால், இன்றோ 30,000க்கும் மேற்பட்ட பள்ளிகளில் வானொலிப்பெட்டிகள் உள்ளன. நம் மாநிலம் முழுவதும் மிகப் பெரும்பாலான மாணவர்கள் வானொலி நிலையத்தாரால் நடத்தப்பெறும் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

நம் மாணவர் அனைவரும் வானொலி நிலையத்தார் அளிக்கும் இவ்வரிய வாய்ப்பை முழுதும் பயன்படுத்தி அதன்மூலம் சிறந்த பலனைப் பெறவேண்டும்.

கல்வி என்பது ஒரு சில விவரங்களை மட்டுமே தெரிந்து கொள்ளுகிற முயற்சியாகவே கருதப்பட்டது ஒரு காலத்தில். நல்ல முறையில் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் திறமையை அறிவுக்குச் சமமாக மதித்து எடைபோட்டோம். ஆனால் உண்மையான கல்வியின் நோக்கம் அது அல்ல.



மாண்புமிகு கல்வியமைச்சர்
திரு செ. அரங்கநாயகம்

ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாகவே அறிவும், ஆற்றலும், திறமையும் உண்டு. இவற்றிற்குச் சாதிப் பாகுபாடுகளோ, வாழ்க்கை வசதிகளோ அடிப்படைகளாக அமைவதில்லை. ஏழைக் குடும்பத்திலே பிறந்த குழந்தைகூட நல்லமுறையில் கல்வி பெற்றால் அறிவோடும், ஆற்றலோடும் விளங்க முடிகிறது.

எனவே, கல்வி என்பது, இயல்பாக உள்ள அறிவையும், ஆற்றலையும், திறமையையும் வளர்ப்பது தான். இப்பெரும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியப் பெருமக்கள், தம் பணி சிறக்கப் பல்வேறு உத்திகளைக் கையாளுகிறார்கள். ஆசிரியருக்குப் பக்க பலமாக விளங்கும் ஒரு சிறந்த சாதனம் வானொலியாகும். வானொலி நிகழ்ச்சிகள் மாணவர்கட்குக் கல்வி பெறுவதில் உள்ள ஆர்வத்தை அதிகப்படுத்த வேண்டும். மேலும், வானொலி விளக்கங்கள், அறிவுசிரிய முறையில் வளரும் வகையில் சிறப்பாக அமையவேண்டும்.

இவற்றைக் கருத்திற்கொண்டே தமிழக வானொலிக் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வகுப்பறையில் நடத்தும் பாடத்துக்கு உறுதுணையாக வானொலி நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். வகுப்பறையில் சொல்லித் தரப்பட்டவற்றையே திரும்பவும் வானொலி நிகழ்ச்சிகளாக அமைத்துவிடக் கூடாது. வகுப்பறையில் சொல்லித் தரப்படுவதற்கும் மேலாக, கூடுதலாக உயரிய ஆக்கம் தேடும் வகையில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட வேண்டும். நமது வானொலி நிகழ்ச்சிகள் மாணவர்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம், நல்ல முறையில் ஆலோசனை செய்து திட்டமிடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் வகுப்பறையில் சொல்லித் தருவதற்கு மேலும் நல்ல விளக்கம் தரக்கூடியவையாக இந் நிகழ்ச்சிகள் பயன்படுகின்றன.

நமது பள்ளிகள் இந்நிகழ்ச்சிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவற்றை முழுமையாகப் பள்ளிகள் பயன்படுத்திக் கொள்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள, மதிப்பீடுமுறை ஒன்றை வானொலி நிலையம் பின்பற்றுகிறது.

இம்முயற்சிக்குத் தமிழகத்திலுள்ள, அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தமது ஒத்துழைப்பை அளிக்கவேண்டும். வானொலி நிலையம் நடத்தும் போட்டிகளிலும் அனைத்துப் பள்ளிகளும் பங்கு கொண்டு பரிசு பெற முயல வேண்டும். வானொலி நிலையத்தாரின் கல்விச் சேவையை அனைத்துப் பள்ளிகளிலும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது ஆசிரியர் பெருமக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

நம்முடைய நோக்கம் வள்ளுவப் பெருமான், ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்றபடி, சிறந்ததாக இருக்க வேண்டும். எப்படியாவது தேர்வில் தேற வேண்டும் என்பது மட்டும் நம் நோக்கமல்ல. தேறுவதற்கு 35 எண்கள் எடுத்தாலே போதும். அதற்காக அந்த அளவிற்கு மட்டும் நம் படிப்பு அமைந்தால் போதுமா? 'படிப்புக்கு, நாம் ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. அனைவரும், தமிழக மாணவ மணிகள் யாவரும், 100-க்கு 100 மதிப்பு எண்கள் வாங்க வேண்டும். கற்கின்ற, அனைத்தையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இதுவே நமது நோக்கமாக இருக்க வேண்டும். நமது கல்வி, வள்ளுவப் பெருந்தகை கூறிய படி, 'கற்க கசடறக் கற்க' என்ற முறையில் அமைய வேண்டும்.

சமுதாயத்தில், எவரும் மேல் நிலையடையச் சிறந்த கருவி, கல்விதான். அதை அனைத்து மாணவரும் நன்கு பயன்படுத்தி, நாடும், வீடும் உயர வழி வகுக்க வேண்டும். ஒருவருடைய முன்னேற்றம் இன்னொருவர் வளர்ச்சிக்குத் தடையல்ல.

எல்லோரும் படிக்க வேண்டும். எல்லோரும் நன்கு படிக்க வேண்டும். இந்தப் பெருமுயற்சியில் வானொலி கல்வி ஒலிபரப்பு நமக்குக் கிடைத்துள்ள நல்ல கருவி. இக்கருவியை நன்கு பயன்படுத்தி நம் கல்வி நிலை வளரப் பாடுபடுவோமாக.

—(17-7-'78 அன்று சென்னை வானொலியில் ஆற்றப்பட்ட இவ்வாண்டு கல்வி ஒலிபரப்புத் தொடக்க உரை.)

# கதர்- கைத்தறித் தொழில் வளர்ப்போம்

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்**

"மேல் நாடுகளில் தொழிற் புரட்சிக்குப் பின்தான் அமைதி காணப்பட்டு அங்கு தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு நாடு முன்னேற, தொழில் வளர்ச்சி மிக அவசியம். தொழில் வளர்ந்தால்தான் நாடு முன்னேறும், அந்த நிலையிலே நம் தமிழகத்தை நோக்கினால் பல தொழில்களில் தமிழகம் முன்னேற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். அந்த வரிசையில் கைத்தறி நெசவுத் தொழிலும் காதி உற்பத்தித் தொழிலும் இந்த ஓராண்டில் தலைசிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது.

''கிராமப்புற மக்கள் முன்னேற, காதி கிராமத் தொழிலும் குடிசைத் தொழிலும்தான் முக்கியக் காரணம். கிராமங்கள் உயர்ந்தால் நம் நாடு முன்னேறும்'' என்று காந்திஜி கூறிய பொன்மொழியை மனத்திலே கொண்டு கதர்த் தொழிலில் தமிழகம் அக்கறை காட்டி வருகிறது.

கடந்த ஆண்டு தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக 90 நாட்களுக்குக் கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் விற்பனை செய்யும் எல்லா வகைக் கதர்த் துணி விற்பனைக்கும் தமிழக அரசு 5 சதவிகிதம் சிறப்பு விழுக்காடு தள்ளுபடி அளித்தது.

மேலும், வாரியத்திற்கு கூடுதலாக 5 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி, குறித்த காலத்திற்கு வழங்க அனுமதி அளித்தது. முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு அமரர் பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் அவர் பிறந்த நாள் விழாவையொட்டிக் கதர் விற்பனைக்குச் சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவிகிதம் வழங்கியுள்ளது, இந்த அரசின் அரிய சாதனையாகும். இந்தத் தள்ளுபடி இவ்வாண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 முதல் 15 வரை பதினைந்து நாட்களுக்கு வழங்கப்படும். இந்தச் செயல் இந்த அரசு கர்ம வீரர் காமராசர் மேல் கொண்டுள்ள நல்ல எண்ணத்தையும் மதிப்பையும் எடுத்துக் காட்டுவதாகும்.

மாண்புமிகு முதல்வர் விடுத்த வேண்டுகோளினால் இந்த ஆண்டு கதர் அதிகமாக விற்பனையாகியுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 405.55 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனையானதற்கு மாறாக இவ்வாண்டு ரூ. 607.67 இலட்சத்திற்கு விற்றது, அரும்பெரும் சாதனையாகும்.

மேலும், கதர் வாரியம் 3,36,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது. கதர் வாரியம் இந்த ஆண்டு இத்தாலிய நாட்டிற்கு, கைவினைப்பொருள், கைத்தறி ஏற்றுமதிக் கழகத்தின் சென்னைக் கிளை மூலம் ரூ. 26.31 இலட்சம் மதிப்புள்ள 3.85 இலட்சம் மீட்டர் கதர்த் துணியை ஏற்றுமதி செய்து பலரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

திக்கற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும் மறு வாழ்வுத் திட்டத்தின் கீழும் கிராமிய நூற்புக்கூட ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின்கீழ் 26,856 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டில் (1977-78) 290.87 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து ரூ. 68.80 இலட்சம் ரூபாய் ஊதியமாகப் பெற்றனர்.



இவ்வாண்டில் மேலும் 160 கிராமிய நூற்புக் கூடங்கள் புதியதாகத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் 5,400 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

வாரியம் தனது உற்பத்தி அலகுகள் மூலம் 61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர்ப்பட்டை சென்ற ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப்பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் வரும் ஆண்டில் 110 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டுத் துணி உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. வாரியத்திற்கு வேண்டிய பட்டு நூல் உற்பத்தி செய்ய, கோவையில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கத்தை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான மற்றும் சமமான நூல் உற்பத்திக்குச் சரியான முறையில் பஞ்சை அடித்துப் பட்டை போட வேண்டும். இது காறும் இது கையினாலேயே பெரும்பாலும் செய்து வரப்பட்டது. இயந்திரத்தினால் பஞ்சை உடைத்துப் பட்டை போடும் அலகுகளைத் துவக்கத் தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது. இவ்வலகுகள் விரைவில் துவக்கப்படவுள்ளன. இதன் மூலம் நூற்போர், நெய்வோரின் வருவாய் கணிசமாக உயரும்; நூலின் தரமும் துணியின் தரமும் உயரும்.

கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களையும் ஆட்களையும் கொண்டு கிராமிய நுகர்வோரது தேவைக்கேற்ற பொருட்களை உற்பத்தி செய்ய ஏதுவாக கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய கிராமத் தொழில்கள் மூலம் சற்றேறக் குறைய இருபது கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருபத்திரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இப்பணியில் மூன்று இலட்சம் பேர் வேலைவாய்ப்பினைப் பெற்று, எட்டுக்கோடி ரூபாயை ஊதியமாகப் பெற்றனர்.

இவ்வரசு எடுத்து வருகின்ற சிறப்பு முயற்சிகளினால் விரைவில் நாடெங்கும் பனஞ்சினியிலிருந்து தயாரிக்கப்படும் 'பாம்கோலா' எளிதில் கிடைக்கும். இதன் உற்பத்தி நிலையம் டெல்லியிலும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலும் துவக்கப்பட உள்ளன. பனைச் செல்வம் ஒரு கற்பகத் தரு என்ற முதுமொழிக்கொப்ப பனை நார், தும்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன.

கைக்காகிதங்களின் மூலம் முட்டை நிறைப்பான்களும் தயாரிக்கப்படும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

பழங்குடியினர் வாழும் பகுதிகளைத் தீவிரமாக மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் தேன் கூடுகளை அரசு மான்யத்துடன் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்களைத் துவக்க, தனி நபர்களுக்கு நிதி, மற்ற உதவிகள் வாரியம் அளிக்கும். ஏற்கெனவேயுள்ள இருபத்திரண்டு கிராமத் தொழில்களுடன் கூடுதலாக நாற்பத்து மூன்று இனங்களைக் கிராமத் தொழில் என வகைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனைப் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிகோலப்படும். கதர் கிராமத் தொழில் திட்டம் 'உழைத்து வாழும் உணர்வைப் போதிக்கிறது. எனவே, இத்திட்டம் நிலவிவரும் வேலையின்மையைப் போக்கக் கூடிய தன்மையுடையதாகும்.

இவ்வரசு பதவி ஏற்றவுடன் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலவிவரும் வேலையின்மைப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண விரும்பியது. கடந்த ஓர் ஆண்டில் ஒன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து நான்கு நபர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கதர் கிராமத் தொழிலின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமத் தொழில்களை ஊக்குவித்து, வறட்சி நிலையை மாற்றுவதற்கு 19.39 இலட்சம் ரூபாய் அரசு மான்யமாகவும், கடனாகவும் நிதி உதவி அளித்துள்ளது.

இதுவன்றி இதே காரியத்திற்காக அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 16.90 இலட்சம் ரூபாய் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கைவினைஞர்களின் துயரைத் துடைப்பதற்காக 9.74 இலட்சம் கடனை வழங்கியது. இதைத் தவிர கதர் கிராமத் தொழில்களில் சிறந்த ஆராய்ச்சிகள் நடத்தி நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகளின் மூலமும், அரசு நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்ட தொழில்கள் அனைத்தையும் ஒரே துறையின் கீழோ நிறுவனத்தின் கீழோ கொண்டு வரவேண்டுமென்ற நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையை இவ்வரசு ஏற்று, இரு நூற்றுக்கு மேற்பட்ட தொழிற் கூட்டுறவு அலகுகளை கதர்க் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது.

கதர் உள்ளிட்ட கிராமத் தொழில்கள் மூலம் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் கிராம மக்கள் இன்று தமிழகத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். இத்தொழில்கள் மூலம் பல இலட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்திய முன்னேற்றத்தினாலும், நகர்ப்புற நாகரிகத்தினாலும் கவரப்பட்டு கிராம மக்கள் மெல்ல மெல்ல நகரங்கட்குக் குடியேறுவதைத் தடுத்து, அவர்கட்குக் கிராமங்களிலேயே வேலை வாய்ப்பு உண்டு, வாழ்வு உண்டு, வளமும் உண்டு என்று கதர் கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் எடுத்துக் காட்டி கிராமிய பொருளாதாரத்தைச் சீர்குலையாமல் காத்து, வளர்த்து வரும் பெரும் பொறுப்பைத் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் ஏற்று நடத்தி வருகிறது. இவ்வகையில் அது ஆண்டுக்காண்டு கணிசமான முன்னேற்றத்தையும் கண்டு வருகிறது. பனஞ்சினியிலிருந்து தயாரிக்கப்படும் பாம்கோலா நமக்கெல்லாம் வாய்க்கும் மனத்திற்கும் இனிக்கும் செய்தியாகும். இந்தத் தித்திக்கும் செய்தியுடன் கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்தைப்பற்றி நோக்கலாம்.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய தொழிலாக— பெரும்பான்மையான மக்களுக்கு வாழ்வு அளிக்கும் தொழிலாக-நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற தொழிலாக விளங்கும் கைத்தறிக்கு நல்வாழ்வு அளிக்கவும் முதல்வர் கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டின் பயனே, கைத்தறித் துறைக்கு என்று தனி அமைச்சர் முதல் முறையாக நியமிக்கப்பட்டிருப்பதாகும்.

மூடப்பட்டுக் கிடந்த நூல் ஆலைகளுக்குப் புத்துயிர் ஊட்டி நல்ல செயல்திறத்துடன், பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துள்ளது இந்தத் தமிழக அரசின் ஓராண்டுச் சாதனையாகும்.

தமிழ்நாட்டில் உழைக்கும் தொழிலாளர்களில் 6 சதவிகிதத்தினர் கைத்தறித் தொழிலில் நேரிடையாகவோ அல்லது கண்டு சுற்றுதல், பாவு ஓட்டுதல் போன்ற உபதொழில்களிலோ ஈடுபட்டுள்ளனர். இம்மாநிலத்தின் பொருளாதாரத்தில் கைத்தறித் தொழில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. தற்பொழுது மாநிலத்திலுள்ள சுமார் 5.5 இலட்சம் கைத்தறிகளில் 2 இலட்சத்திற்குமேல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகின்றன. எஞ்சியுள்ள சுமார் 3.5 இலட்சம் கைத்தறிகள் தனியார் துறையில் செயல்படுகின்றன.

இத்துறையில் கைத்தறி நெசவாளர்கள் குறைந்த கூலி, அடிக்கடி வேலை குறைப்பு, நிரந்தரமான முழு நேர வேலையில்லாமை போன்ற இன்னல்களுக்கிடையே நெசவு செய்து வருகின்றனர். தவிர, நெசவாளர்களில் பலர் சொந்தத் தறியில்லாமல் மாஸ்டர் வீவர்களுக்குச் சொந்தமான தறிகளில் சொற்பக் கூலிக்கு வேலை செய்து மிகவும் மோசமான வாழ்க்கை நிலையில் உள்ளனர். இப்படிப்பட்ட நெசவாளர்களுக்கு நிரந்தர-முழுநேர வேலையும் நியாயமான கூலியும் இதர வசதிகளும் கிடைக்கச் செய்ய அவர்களைப் புதுக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தலும் தற்சமயம் செயல்படும் நலிந்த சங்கங்களை வலுப்படுத்தியும் தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களில் 60 சதவிகிதத்தினரைக் கூட்டுறவுத் துறையின்கீழ்க் கொண்டு வர ரூ. 16.05 கோடி செலவில் ஒரு மாபெரும் திட்டம் தீட்டப்பட்டு, மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

## அரிசனங்களுக்கு படிப்பு உதவி வழங்கும் திட்டம்

1976-77ஆம் ஆண்டு முடிவு வரை அரிசன ஆதிவாசிகள் நலத் துறையால் மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு படிப்பு உதவித் தொகை பணமாகவே வழங்கப்பட்டு வந்தது. 1977-78ஆம் ஆண்டு இம்முறை மாற்றப்பட்டு, புத்தகங்களாகவே வழங்கப்படுவதுடன், இச்சலுகையை பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு ரூ. 3,000/- என்பதையும் நீக்கி எல்லா மாணவ மாணவியருக்கும் அவர்கள் பெற்றோரின் வருமானத்தைப் பாராமல் எல்லாப் புத்தகங்களும் வழங்கப்படுவதுடன், சிறப்புக் கட்டணமும் பள்ளிகளுக்குத் தேர்வுக் கட்டணமும் அரசுத் தேர்வு இயக்குநருக்கு நேரடியாகவும் செலுத்தப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சென்ற இரண்டு ஆண்டுகளில் 201 புது நெசவாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, தனியார் துறையில் வேலை செய்துவந்த சுமார் 60,000 நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். சொந்தத் தறியில்லாத 1,300 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 12 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது 2.07 இலட்சம் நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாட்டில் 946 பிரதம நெசவாளர்கள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை ஆண்டுக்குச் சுமார் ரூ. 45 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணியை உற்பத்தி செய்கின்றன. 6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் சுமார் 20 இலட்சம் தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்படுவர். இவர்களில் சுமார் 40,000 தறியில்லா நெசவாளர்கள் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் சேர்க்கப்படுவார்கள்.

கவர்ச்சிகரமான, கெட்டிச் சாயமுடன் துணி உற்பத்தி செய்ய உதவ தமிழ்நாட்டில் சேலம், கோவை, மதுரை திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் ஐந்து பெரிய நவீன சாயச்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. அதோடு தமிழ்நாடு கூட்டுறவுப் பதனிடும் ஆலையில் துணிக்கு மெருகிடுதல், முன் கூட்டிச் சுருக்குதல், அச்சிடுதல் ஆகிய பதனிடும் வசதிகளை ரூ. 22.50 இலட்சம் செலவில் விஸ்தரிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் விருப்பத்திற்கேற்றவாறு புதிய டிசைன்களில் கவர்ச்சிகரமான முறையில் உற்பத்தியை மாற்றி அமைக்கவும் பாலியெஸ்டர், ரேயான் போன்ற வகைகள் புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்பொழுது எல்லாத் தரப்பட்ட மக்களுக்கும் தேவையான சேலைகள், வேட்டிகள், லுங்கிகள், சட்டைத் துணிகள், 2/2 வாயில்ஸ், பள்ளிக் கூடச் சீருடை, காக்கி ட்ரில், அலங்கார விரிப்புகள் போன்ற எல்லா ரகங்களும் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாவது குறிப்பிடத்தக்க அம்சம்.

மத்திய அரசு, எளிய மக்களுக்கு மலிவு விலை ஜனதா ரகத் துணி உற்பத்தியைக் கைத்தறிகளில் செய்து விநியோகிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததன் பேரில் சென்ற 1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சுமார் 13 மில்லியன் மீட்டர் ஜனதா புடவை, வேட்டி லுங்கி ரகங்கள் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 42 மில்லியன் மீட்டர் ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற உள்நாட்டு விற்பனையைப் பெருக்கும் முயற்சிகள் தவிர கைத்தறித் துணி ஏற்றுமதியையும் அதிகரிக்க கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி வர்த்தகக் கழகம் ஆகிய நிறுவனங்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றன. இவ்விரு நிறுவனங்களும் சுமார் 2 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணியை ஆஸ்திரேலியா, ஃபிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளன,

கூட்டுறவுத் துறை மூலம் இலாபகரமான முறையில் கைத்தறித் தொழிலை வளர்க்க இது வரை விவரித்த பல திட்டங்கள் தவிர நெசவாளர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்தவும் பல திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. முக்கியமான மத்திய மாநில அரசுகள் மற்றும் ''HUDCO'' ஆகியவைகளிடமிருந்து நிதி உதவி பெற்று நெசவாளர்களுக்குச் சுமார் 2,000 வீடுகள் கட்டும் திட்டம், நெசவாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பு மற்ற சலுகைகளை உறுதி செய்ய சட்டம் இயற்றுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர பெரிய அளவில் எல்லா நவீன சாதனங்களுடன் நெசவாளர்களுக்கு முழுவேலை கொடுக்க கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு இடங்களில் ஏற்றுமதி ரக உற்பத்தி நிறுவனங்களும், காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், தீவிர கைத்தறி வளர்ச்சி நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது சுமார் 4,500 நெசவாளர்களுக்கு, நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக நெசவாளர்களின் எண்ணிக்கை 22,000 ஆக உயர்த்தப்படும்.

தமிழ்நாட்டில் இயங்கும் பிரதம சங்கங்களில் உற்பத்தி செய்யும் பணிகளை விற்பனை செய்து கொடுக்கும் மாநில சங்கமாகிய 'கோ-ஆப்டெக்ஸ்' தமிழ்நாட்டிலும், இந்தியாவில் இதர மாநிலங்களிலும் 340 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இச்சங்கம் பிரதம நெசவாளர் சங்கங்களிடமிருந்து அவற்றின் உற்பத்தியில் பாதி அளவு கொள்முதல் செய்து ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 23 கோடி பெறுமான துணி விற்பனை செய்து வருகிறது. நூதன டிசைன்களைக் கண்டறிந்து நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்ய உதவ மதுரையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் ஒரு 'டிசைன் சென்டர்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோல் சேலம், கோவை போன்ற மாவட்டங்களிலும் 'டிசைன் சென்டர்கள்' அமைக்கதிட்டமிடப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான பணிகளால் தமிழகத்தில் கைத்தறித் தொழிலில் சிறந்த முன்னேற்றம் காணப்படும்; ஏறத்தாழ 4,500 நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் தமிழக மக்கள் இந்தத் தொழிலுக்கு நல்ல ஆதரவு அளிப்பதன் மூலம் குறிப்பாக, தாய்க்குலம் தங்களின் நல்லாதரவை அளிப்பதன் மூலமும் இன்னும் அதிகப்படியான நெசவாளர்களுக்கு வேலைதர வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

நாலரைக்கோடி மக்களில் ஏறத்தாழ ஒரு கோடி மக்களுக்கு அதிகமானோர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பெரியவர்கள் மட்டுமல்ல, அந்தக் குடும்பங்களிலுள்ள சின்னஞ்சிறு குழந்தைகளும் அந்தக் குடும்பத்தின் வறுமையின் காரணமாகப் பாடுபட வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட இந்தக் குடும்பங்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்தால்தான் அவர்கள் ஒருநேர சோற்றுக்காவது நாம் வழிசெய்தோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படும்.

பெரியார் போற்றிய தொழில், அமரர் அண்ணா ஆர்வமுடன் வளர்த்துப் போற்றிய கதர், கைத்தறித் தொழில், கரும வீரர் காமராசர் காத்துப் போற்றிய கதர் நெசவுத் தொழில், புரட்சித் தலைவர் ஆட்சியில் புத்துயிர் பெற்ற இந்தத் தொழில் நசிந்து விடாமல் காப்பது நமது தலை சிறந்த கடமையாகும்.

தேங்கிக்கிடக்கும் துணிகளைக் குறைக்க நம் நாட்டு மக்கள் எல்லோரும் கதர் கைத்தறித் துணிகளை உடைகளுக்காக மட்டுமல்ல, திரைச்சீலை, கொசுவலை, விரிப்புகள் போன்ற எல்லாவற்றிற்கும் உபயோகப்படுத்தினால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு நாம் ஓரளவாவது சேவை செய்தவர்களாவோம்.

எனவே, இந்த உன்னதமான கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள எண்ணற்ற மக்களின் கண்ணீரைத் துடைக்க தமிழக மக்கள் தங்களின் பங்கைத் தாரீர்! என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[சென்னை வானொலியில் 2-7-1978 அன்று ஆற்றிய உரை]

# மறைமலை நகரில் மோபெட் தொழிற்சாலை



தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் 'மயூரம்' மோபெட்களை உற்பத்தி செய்வதற்கென்றே தனித் தொழிற்சாலை ஒன்று சென்னை அருகே மறைமலை நகரில் வெகுவிரைவாக உருவாகி வருகிறது. இன்னும் மூன்று மாதங்களில் தொழிற்சாலை நிறுவும் பணிகள் முற்றுப் பெற்று அங்கு மோபெட் உற்பத்தி தொடங்கிவிடும்.

'குறைந்த விலையிலும் சிறந்த முறையிலும் பயன்படும் வாகனம் ஒன்றை உருவாக்கி, சாமானிய மக்களின் போக்குவரத்து வசதிக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் 'டான்சி' என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், மோபெட் தயாரிப்பில் முனைந்தது. இம்முயற்சி வெற்றி பெற்றதையடுத்து, டான்சியின் மோபெட் தயாரிப்புப் பிரிவு, தமிழ்நாடு மோபெட்ஸ் லிமிடெட் என்ற தனி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இதன் பிறகு தான் டான்சி மோபெட்டுக்கு 'மயூரம்' என்ற அழகான காவியப் பெயர் சூட்டப்பட்டது.

வடிவேல் முருகன் உலகை விரைவாய் வலம்வரத் துணை புரிந்தது மயில் வாகனம். முருகன் ஏறும் வாகனத்தின் மறுபெயரே மயூரம். இப்பெயருக்கு முற்றிலும் பொருத்தமாய் மயிலைப் போன்ற எழிலோடும், விரைவாகவும் எளிதாகவும் இயங்கக்கூடியதாகவும் விளங்குகிறது, தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனம் தயாரிக்கும் மயூரம் மோபெட்.

மயூரம் மோபெட்டை அதிக அளவிலும், வியாபார ரீதியிலும் உற்பத்தி செய்யும் பொருட்டு தனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழகம் சென்னைக்கு அருகில் எல்லா நவீன வசதிகளோடும் அமைத்து வரும் புறநகர்ப் பகுதிகளில் குறிப்பிடத்தக்கது, மறைமலை நகர். இங்கு ரூ. 130 லட்சம் செலவில் தமிழ்நாடு மோபெட்ஸ் நிறுவனத்தின் தொழிற்சாலை உருவாகி வருகிறது. இந்த ஆண்டு மொத்தம் 8,000 மோபெட்டுகள் உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 24 ஆயிரம் மோபெட்கள் தயாரிக்கும் திறன் வாய்ந்ததாக இத்தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இத்தொழிற்சாலையின் பயனாக சுமார் 500 பேருக்கு நேரடி வேலை கிடைக்கும். மேலும் மறைமுகமாக ஏராளமானோர் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

இளைய தலைமுறையினர் பெரிதும் விரும்பும் விதத்தில் மயூரம் மோபெட் காட்சியளிக்கிறது. சென்னையில் அதன் விலை ரூ. 2,800 தான். 'டீலக்ஸ் மயூரம்' எனப்படும் நவீன மாதிரி வண்டி சாதாரண மாதிரி வண்டியின் விலையைவிட ரூ. 150 மட்டுமே கூடுதலாகும். அவரவர் விருப்பப்படித் தேர்ந்தெடுத்து வாங்க அழகான ஐந்து வண்ணங்களில் மயூரம் மோபெட் கிடைக்கிறது. வங்கிகளின் மூலம் தவணை முறையில் சுலபமாக வாங்கிக் கொள்ளவும் வாய்ப்புள்ளது.

முற்றிலும் நம் நாட்டுத் தொழில்நுட்ப முறைகளையும், நம் நாட்டில் தயாராகும் பொருட்களையும் கொண்டே மயூரம் மொபெட் உற்பத்தி செய்யப்படுகிறது. டான்சி மோபெட் பிரிவைச் சேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களே இதனைத் திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 70 கிலோ மீட்டர் தொலைவு ஓடும் மயூரம் மோபெட், சிக்கனமானது, சீரானது, பராமரிப்பதற்கும் எளிதானது; நவநாகரிக வாழ்க்கைக்கு ஓர் அடையாளச் சின்னமாக அது விளங்குகிறது.

போக்கு வரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்நாளில், நகரப் பகுதியில் உள்ள மக்கள் இடநெருக்கடியையும், விலைவாசி உயர்வையும் கருதிப் புறநகர்ப் பகுதிகளில் பெருமளவில் குடியேறும் இன்றைய நிலையில் குறைந்த விலையில் எளிதான வாகன வசதிகள் அதிக அளவில் கிடைக்காதது ஒரு பெருங்குறையாக இருந்து வருகிறது.

மறைமலை நகரில் அதிக அளவில் மயூரம் மோபெட்களை உற்பத்தி செய்யும் தனித் தொழிற்சாலை தொடங்கப்படுவதன் மூலம் இக்குறை நீங்கும் என நம்பலாம்.

# இனிப்பான செய்தி தரும் இரையூர் சர்க்கரை ஆலை

இரையூர், திருச்சி மாவட்டம் பெரம்பலூரை அடுத்த சிறிய கிராமம்!

பசுமையே இல்லாத வறட்சியான பகுதி அது! செழுமையான மரங்களையோ, நீரோட்டங்களையோ கண்ணில் காணமுடியாத மண் அது!

கரிசல் மண்ணும், கற்களும், முட் புதர்களும், கற்றாழைகளும் இப்படி நெடுந்தூரம் வரை சாலையின் இரு மருங்கும் காணப்படும்.

இந்த வறண்ட பகுதியில்— பாலைவனத்தில் பசுஞ்சோலை போலக் காட்சி தருகிறது பண்டிதர் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை!

நேருவின் பிறந்தநாளில் அடிக்கல் நாட்டப்பட்டதால் இந்தப் பெயரினை அதற்குச் சூட்டியிருக்கிறார்கள். 1976-ல் அடிக்கல் நாட்டப் பெற்று 1978-பிப்ரவரியில் சர்க்கரை தயாரிக்கும் பணி துவங்கி விட்டது.

அரசின் ஆலையான இது, இன்று அகில இந்திய அளவில் பல்வேறு சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது.

துவங்கி 98 நாட்களில் ஒரு இலட்சம் டன் கரும்பில் சர்க்கரை பிழியப்பட்டுள்ளது; ஒரு இலட்சம் மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில், 17-5-'78 அன்று மட்டும் 1,850 டன் கரும்பு பிழியப்பட்டுள்ளது.

இந்த அளவில், இவ்வளவு குறுகிய காலத்தில், எந்தச் சர்க்கரை ஆலையும் இந்தச் சாதனைகளை எட்டியதில்லை.



வயல் வெளிகளிலிருந்து கொண்டுவரப்படும் கரும்புகள் கட்டுக் கட்டாக லாரியில் வருகின்றன. அவை ஆலையின் முதல் பகுதியில் கொட்டப்படுகின்றன. இயந்திரத்தின் உதவியால் கரும்புகள் துண்டு துண்டாக ஆக்கப்பட்டு, நசுக்கிப் பிழியப்பட்டுப் பல்வேறு இயந்திரங்களின் மூலமாகச் சாறாகி, கொதிக்க வைக்கப்படுகிறது. இறுதியில் சர்க்கரையாக ஆலையின் கடைசிப் பகுதியில் வந்தடைகின்றன. அங்கு அவை கோணிப்பைகளில் நூறு கிலோ என்ற அளவில் நிரப்பப்பட்டு, எடை போடப்பட்டுக் கிடங்கிற்கு அனுப்பப்படுகின்றன.

இந்தப் பகுதி வறண்ட இடமாகத் தெரிகிறதே! இதனை எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்?

இந்தப் பகுதியில் கரும்பு விளையாவிட்டாலும், சுற்றுப் பகுதிக்ளில் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள லெப்பைக் குடிக்காடு என்ற பகுதியில் கரும்பு பயிரிடப்படுகிறது. பொதுவாக ஒரு கரும்பாலை ஏற்படுத்த வேண்டுமெனில் சுமார் 8 ஆயிரம் அல்லது 9 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட வேண்டும். கோத்தாரி சர்க்கரை ஆலை வெகு தொலைவிலிருந்தபடியாலும், இந்த வட்டாரத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்டு வந்ததாலும், இங்காவது, முசிறிப் பகுதியிலாவது கரும்பாலை ஒன்று நிறுவலாம் எனத் திட்டமிடப்பட்டது.

இந்தக் கரும்பாலைக்கு ஒரு நாளைக்கு 1,400 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இங்குத் தண்ணீர் வசதியில்லாததால், 12 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

கரும்புகள் லெப்பைக் குடிக்காடு பகுதியிலிருந்தும், செந்துறை, மாத்தூர் என்ற ஊர்களிலிருந்தும் போதுமான அளவு கிடைக்கிறது.

இங்கு ஒரு நாளைக்குச் சராசரி 1,000 டன் கரும்பு அரைக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 1,071 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது இந்த ஆலையில் கரும்பிலிருந்து சர்க்கரை அதிக அளவில் (சுமார் 11 சதவிகிதம்) கிடைக்கிறது. இது, இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கும் மராட்டிய ஆலைகளுடன் ஒப்பிடும் அளவில் உள்ளது. அதுவும் ஆரம்பக் கட்டத்தில் இவ்வளவு அதிக உற்பத்தி எந்த ஆலையிலும் இருந்ததில்லை. இன்னும் மூன்று ஆண்டுக்குள் நாளொன்றுக்கு 1,500 டன் கரும்பு அரைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆலைக்கு 13 முக்கிய இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. என்றாலும், தற்போது 11 இயந்திரங்களே இயங்கி வருகின்றன. இதனால் இவ்வாலைக்கு இலாபம் அல்லது சேமிப்பு 5.6 இலட்சம் ரூபாயாகும்.

இங்கு, மேலும் ஓர் இயந்திரத்தை நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்போது 1,500 டன் கரும்பு சுலபமாக அரைக்க முடியும்.

ஆண்டு முழுவதும் அரைவைக்குக் கரும்பு கிடைக்கிறதா?

சாதாரணமாக மே, ஜூன் மாதங்களில் அரைவை இருக்காது. இந்த ஆண்டு பல இடங்களில் கரும்பு இருந்ததால், அரசு இந்த மாதத்திலும் அரைத்தல் வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. மற்றப்படி கரும்பு இல்லாத காலங்களில் அரைவை இருக்காது.

உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கப் பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. விரைவாகப் பணம் பட்டுவாடா செய்தல்; கரும்பு தந்த ஒரு வாரத்திற்குள் விவசாயிகளுக்குப் பணம் தந்து விடுதல்; பதிவு செய்த விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு

ரூ. 115 வழங்குதல் (மற்றவர்களுக்கு ரூ. 100) முதலியன.

கரும்பை முன்னதாகப் பயிரிடுபவர்களுக்குப் பண உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒரு ஏக்கருக்கு ரூ. 300 வழங்கப்படுகிறது.


60 கிலோ மீட்டருக்கு அதிகத் தொலைவிலிருந்து கரும்புகொண்டு வருபவர்களுக்குப் போக்குவரத்துப் படி தரப்படுகிறது.

வீரிய வகைக் கரும்பைப் பயிரிடுபவர்களுக்கு ரூ. 250 உதவித் தொகை வழங்கப்படுகிறது. வீரிய வகைக் கரும்பிற்காக ஒரு ஏக்கர் அளவில் ஒரு விதைப் பண்ணையும் உள்ளது.

இவ்வாலையில் வேலை செய்கிறவர்களில் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள், 100 பேர். முக்கிய தொழில் நுணுக்கப் பணிகள் தவிர, பிற வேலைகளில் இப்பகுதியிலுள்ளவர்களே உள்ளனர்.

கிராமப்புறத் தொழில் வளர்ச்சியில் அரசு காட்டிவரும் அக்கறைக்கேற்ப இந்தச் சர்க்கரை ஆலை, கிராமப்புறத்திலேயே தோன்றி வெற்றி நடைபோடுவது இனிப்பான செய்தியாகும்!

—கே. நடராஜன்



சர்க்கரைப் பாகைக் குளிர வைக்கும் நீர்த் தொட்டிகள்

# நாகையில் புயல் பாதுகாப்புப் புகலிடம்

**1977**-நவம்பர் திங்களில் வீசிய கொடிய புயலால் பேரழிவுக்கும் பெரும் சேதத்துக்கும் உட்பட்ட நாகப்பட்டினம் நகரமும் அதன் சுற்றுவட்டாரமும் புதுவாழ்வு பெற்று வருகின்றன.

புயலின் சீற்றத்தால் சின்னபின்னமான நிலையை அடைந்த இடங்கள் நமது அரசின் போர்க்கால நடவடிக்கைகள் போன்ற நிவாரணப் பணிகளால் இன்று புத்துருவம் பெற்று வருகின்றன.

ஆறு மாதங்களுக்கு முன்பு வீசிய புயலால் உருமாறிப் போயிருந்த ஊர்கள் புதுவாழ்வுடன் மட்டுமல்ல, புதிய பொலிவும் பெற்று வருகின்றன.

நாகப்பட்டினத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருப்பது அக்கரைப் பேட்டை. மீனவர் குடியிருப்புகள் உள்ள இப்பகுதியில் புதிய குடிசைகளும் புதிய கிணறுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

'கேர்' நிறுவனம் அக்கரைப்பட்டி செருதூர், பிரதாபராமபுரம், கல்லல், வடக்கு பொய்கை நல்லூர், நம்பியார் நகர் ஆகிய இடங்களில் 800 குடிசைகள் அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற பல்வேறு வசதிகளை மாநில அரசு செய்துள்ளது. இந்தக் குடியிருப்புகளில் இரண்டு தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள்; ஏனையவை மீனவர் குடியிருப்புகளாகும்.

இதுபோன்று புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் உதவிப் பணிகள் நடைபெற்றுள்ளன.


தஞ்சை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் மாநில அரசு, அனைத்து நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் பத்து இடங்களில் 'புயல் பாதுகாப்புப் புகலிடம்' அமைத்திடத் திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு புயல் பாதுகாப்புப் புகலிடத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும். இப்பொழுது அக்கரைப்பேட்டையில் புயல் பாதுகாப்புப் புகலிடம் கட்டப்பட்டு வருகிறது.


ஏனைய புயல் பாதுகாப்புப் புகலிடங்கள் நாகப்பட்டினம் வட்டத்தில் நம்பியார் நகர், பிரதாபராமபுரம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் நாலுவேடபாடி, கோடிக்கரை, பட்டுக்கோட்டை வட்டத்தில் அந்தோணிபுரம், மல்லிப்பட்டினம், சீர்காழி வட்டத்தில் ஆலங்குடி, மாயூரம் வட்டத்தில் கலம்நல்லூர் ஆகிய ஊர்களில் கட்டப்படும்.

புயல் பாதுகாப்புப் புகலிடம் இரண்டு மாடிக் கட்டடமாகும். அடித்தளத்தில் நான்கு அல்லது ஐந்து அறைகள் அமைந்திருக்கும். முதல் மாடியில் பெரும் கூடம் அமைந்திருக்கும்.


புயல் பாதுகாப்புப் புகலிடம் வெளிநாட்டுத் தொழில்நுட்பத் துணையுடன் மணிக்கு 250 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும்புயலைத் தாங்கிக் கொள்ளும் வகையில் கட்டப்பட்டு வருகிறது.




டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்




இயந்திரக் கருவிகள்




டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை, நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்


# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.




ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014



# புதுக்கோட்டை மாவட்டத்தி

புதுக்கோட்டை மாவட்டம் புதிய வலிவும் பொலிவும் பெறத் தக்க வகையில் பல திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது.

புதுக்கோட்டையிலுள்ள பனந் தும்பு தூரிகை (பிரஷ்) உற்பத்தி நிலையம் 14 பெண் ஊழியர்களுக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும் தந்து செவ்வனே நடந்து வருகிறது.

இந்நிலையத்தின் மூலம் மாத மொன்றுக்கு ரூ. 1,100 வீதம் மொத்தம் ரூ. 13,200 வரை பிரஷ்கள் உற்பத்தி செய்து ரூ. 10,798.95-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இங்குச் செய்யப்படும் பிரஷ்கள் நல்ல தரமானதாக இருப்பதால் உள்ளூரிலும், சென்னை, பம்பாய் முதலிய இடங்களிலும் இதற்கு நல்ல ஆதரவு பெருகி வருகிறது.

**ஆரம்பச் சுகாதார நிலையம்:**

கடியாப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையமொன்று கட்டப்பட்டுள்ளது. இதில் மருத்துவ அலுவலருக்கான அறை, மருந்தகம், மகப்பேறு பகுதி, 6 படுக்கைகளுடன், சுகாதார ஆய்வாளர் அறை, மகப்பேறு மேற்பார்வையாளர் அறை, சுகாதார வசதிகள் அறை, மகப்பேறு மேற்பார்வையாளர் அறை, சுகாதார வசதிகள், மற்றும் கட்டுக் கட்டுவதற்கான அறை ஆகியவைகள் உள்ளன. ரூ. 1.60 இலட்சம் செலவில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

**மருத்துவமனை:**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கிக் கோட்டம் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் 24 படுக்கை வசதி கொண்ட முழு அளவிலான மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. சுற்றிலும் தென்னை மரங்களும், மா, பலா மரங்களைக் கொண்டும், முன்புறம் காவிரியின் கிளை வாய்க்காலான அம்மணி சத்திரம் வாய்க்காலின் வடபுறம் குளிர்ச்சியான சூழ்நிலையிலும் இம்மருத்துவமனை அமைந்துள்ளது.

இம்மருத்துவமனை 24 உள் நோயாளிகளுக்கான வசதி, மகப்பேறு, அறுவைச் சிகிச்சை, அரங்கம், அவசரச் சிகிச்சைப் பகுதி மற்றும் ஆய்வகம் கொண்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 24 படுக்கை மருத்துவமனைக்கென மருத்துவர், செவிலியர் மற்றும் பணியாளர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளது.

**துணைக் கட்டடம்:**

புதுக்கோட்டை அரசினர் மருத்துவமனை துணைக் கட்டடம் ஒன்று ரூ. 3.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் 100 படுக்கை வசதி உள்ளது. 1-6-'78-ல் கட்டட வேலை முடிக்கப்பட்டு மருத்துவத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பகுதியில் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான பகுதிகளும், தீவிர சிகிச்சைப் பகுதியும் அமைய உள்ளன. இதில் மருத்துவர், செவிலியர் மற்றும் பணியாளர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளது.

**சமுகப்பணி:**

புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரி தேசியப் பணித்திட்ட மாணவர்கள், அன்னவாசல் பேரூராட்சியில் 26-5-'78 முதல் 4-6-'78 வரை முகாம் செய்து குளத்திற்குத் தூர் எடுத்தல், தெருக்களைச் செப்பனிடுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டனர். மாணவர்கள் செய்த பணியின் மதிப்பு ரூ. 5,000 ஆகும்.

வெட்டன் விடுதி கிராமத்தில் அரிசன மாணவர்களுக்கான விடுதி ரூ. 2,18,000 செலவில்

புதுக்கோட்டை அரசினர் மருத்துவமனை துணைக் கட்டடம்



கட்டப்பட்டுள்ளது. இதில் 45 மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர்.

**பள்ளிக் கட்டடம் :**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், இரத்தினக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த வைரவயல் கிராமத்தில் ரூ. 29,500 மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டடம் 14-5-'78 முதல் செயல்பட்டு வருகிறது. மூன்று ஆசிரியர்கள் பணி செய்யும் இப்பள்ளியில் 68 மாணவர்களும், 28 மாணவிகளும் பயின்று வருகின்றனர்.


**மாணவியர் விடுதி :**

புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் விடுதி ரூ. 328 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 35 பேர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 35 பேர், மற்றும் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் 5 பேர், ஆக 75 மாணவிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது.

**வீடுகள் :**

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வல்லத்திராக்கோட்டை கிராமத்தில் 'கேர்' நிறுவனத்தினர் உதவியுடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட 100 வீடுகளில், 12-2-1978 முதல் தாழ்வான பகுதியிலிருந்து குடிபெயர்ந்த மக்கள், வசித்து வருகின்றனர்.

இவ்வாறு இம்மாவட்டத்தில் நாளும் பல நற்பணிகள் நடந்து வருகின்றன.



## ஊருணி அமைக்க ஊரே கூடியது!

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. எந்த ஒரு காரியத்தையும் ஒன்று கூடிச் செய்தால், அதை எளிதாக முடிக்க முடியும்.

ஊருணி ஒன்று அமைக்க வேண்டும். அதற்கு ஊரே ஒன்று கூடி வேலை செய்தது!

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு மாதமும் 30-ஆம் தேதியன்று, கிராம மக்கள் சக்தியைச் சிரமதானப் பணியில் ஈடுபடுத்தும் ஒரு நல்ல திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். அதன்படி திருவில்லிபுத்தூர் வட்டாரம், புது ராமச்சந்திராபுரம் கிராமத்தில் உள்ள ஊருணியைக் கடந்த மே மாதம் 30-ஆம் தேதி முந்நூறுக்கு மேற்பட்ட கிராம மக்கள், இலவச உழைப்பு முகாம் நடத்தி வேலை செய்தனர். ரூ. 3,000 மதிப்புள்ள வேலையை அவர்கள் செய்து முடித்தனர். பிறகு அவர்கள் குளத்தைத் தூர்வாரி, வாய்க்காலும் வெட்டினர். பொதுமக்களுக்கு உற்சாகம் தாங்கவில்லை.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர், மற்றும் அரசு அலுவலர்கள் முதலானோர் மண்வெட்டும் பணியில் ஈடுபட்டது குறிப்பிடத் தக்கது.

## 'ஜவான் பவன்!'

கோவை மாநகரில் 'ஜவான் பவன்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உபரியாக உள்ள நிலத்தில் கட்டடங்களைக் கட்டி வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயை முன்னாள் இராணுவத்தினர், அவரைச் சார்ந்தோர்கள் நலனுக்காகச் செயல்படுத்தும் திட்டங்கட்குப் பயன்படுத்துதல்; இத்தொகையினை ஒவ்வொரு ஆண்டும் கொடி நாளன்று வசூலிக்கும் நிதியுடன் சேர்க்கப்பட்டு, நலத் திட்டங்களை அதிகமாகச் செயல்படுத்த உதவுதல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

'ஜவான் பவன்' இரண்டு அடுக்குகள் கொண்ட மாடிக் கட்டடமாகும். மேலும், மூன்றாவது மாடி கட்டுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கீழ்த்தளத்தில் மொத்தம் கட்டப்பட்டுள்ள கடைகள் 22. ஒவ்வொரு கடையும் 158.08 சதுர அடி பரப்புள்ளது.

முதல் மாடியில் மொத்தம் கட்டப்பட்டுள்ள சிறிய அறைகள் 11. பரப்பு 151 சதுர அடி; பெரிய அறைகள் 6. பரப்பு 224 சதுர அடி.

கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட முன்னாள் இராணுவத்தினரே வியாபாரம் செய்தால், அவர்கட்குச் சிக்கன வாடகையில் 25% தள்ளுபடி சலுகை கொடுக்கப்படுகிறது.

கட்டடப் பராமரிப்பு, சொத்து வரி, நகர்ப்புற நிலவரி, நிர்வாகச் செலவுகள் மற்றும் திரும்பக் கட்ட வேண்டிய கடனைத் தவிர மீதி உள்ள தொகை முழுவதும் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. மேற்படி தொகை முன்னாள் இராணுவத்தினர் நலத் துறையின் அமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவரைச் சார்ந்தோர், ஊனமுற்றோர் ஆகியோர்க்கு மேற்படி நிதியிலிருந்து இவ்வாண்டில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன




தமிழில் தயாரிக்கப்படும் சிறந்த முழுநீளப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், செய்தி படங்கள், ஆகியவைகளுக்கும் சிறந்த நடிகர்கள், நடிகையர்கள், இயக்குநர்கள், ஆகியோருக்கும் ஆண்டுதோறும் பரிசு வழங்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.


கலைச்சிறப்பும் தொழில் நுணுக்கமும் மிக்க படத்தயாரிப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏற்கெனவே செயல்படுகின்ற ஒரு இலட்சம் ரூபாய் பணஉதவித் திட்டத்துடன்கூட இந்தப்பரிசுத் திட்டமும் கூடுதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

பரிசுகள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| • சிறந்த தமிழ்ப்படம் | ரூ. 50,000-ம் ஒரு பொற் பதக்கமும் |
| • இரண்டாவது சிறந்த தமிழ்ப்படம் | ரூ. 30,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும் |
| • மூன்றுவது சிறந்த தமிழ்ப்படம் | ரூ. 20,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும் |
| • சிறப்புப்பரிசு-ஒரு சிறப்புத்தகுதி பெற்ற தமிழ்ப்படம் | ரூ. 25,000-ம் ஒரு வெள்ளி பதக்கமும் |
| • சிறந்த நடிகர் | தங்கப்பதக்கம் |
| • சிறந்த நடிகை | தங்கப்பதக்கம் |
| • சிறந்த இயக்குநர் | தங்கப்பதக்கம் |
| • சிறந்த கதாசிரியர் | தங்கப்பதக்கம் |
| • சிறந்த வசனகர்த்தா | தங்கப்பதக்கம் |
| • சிறந்த இசை அமைப்பாளா | தங்கப்பதக்கம் |
| • சிறந்த ஒளிப்பதிவாளர் | தங்கப்பதக்கம் |
| • சிறந்த பின்னணிப் பாடகர் | தங்கப்பதக்கம் |
| • சிறந்த பின்னணிப் பாடகி | தங்கப்பதக்கம் |
| • சிறந்த பாடலாசிரியர் | தங்கப்பதக்கம் |
| • சிறப்பாக நடித்த நடிகர் | தங்கப்பதக்கம் |
| • சிறப்பாக நடித்த நடிகை | தங்கப்பதக்கம் |
| • குழந்தைகளுக்கான சிறந்த படம | ரூ. 25,000-ம் வெள்ளி பதக்கமும் |
| • சிறந்த செய்திப்படம் | ரூ. 5,000-ம் வெள்ளி பதக்கமும் |
| • ''ராஜா ஸாண்டோ நினைவு'' பரிசு | ரூ. 25,000-ம் பொற பதக்கமும் |

இந்தியாவில், இந்தியத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டு தணிக்கைக் குழுவால் 1977-78-ஆண்டு (1-4-77 முதல் 31.3.78 வரை) தணிக்கை செய்யப்பட்ட, எல்லாத் தமிழ் படங்களும் (மொழி மாற்றம் ஆக்கப்பட்டவை, மறுபதிப்பு செய்யப்பட்டவை, தழுவித் தயாரிக்கப்பட்டவை. நீங்கலாக போட்டியில் கலந்து கொள்ளலாம்



விண்ணப்பப் படிவங்கள், கீழ்க்கண்டவரிடம் பெற்று விண்ணப்பங்களுடன் நுழைவுக்கட்டணமாக ரூ. 100/- அனுப்ப வேண்டும். (காசாகவோ, அரசு வங்கிகளின் டிமான்ட் டிராப்ட ஆகவோ) செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சென்னை என்ற முகவரிக்கு, அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதி நாள் 14.8.1978

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்
தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்
கைகொடுத்து உதவிடும் !

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும் !

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)

379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.

(தொலைபேசி எண். 20367)

*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.
உங்கள் நலனே எங்கள் பணி.



## செங்கை மாவட்டத்தில்



# வேளாண்மை வளர்ச்சி

**செ**ங்கை மாவட்டம் நெல், கடலை, ராகி, கம்பு மற்றும் காய்கறிப் பயிர்களுக்குச் சிறந்து விளங்கும் மாவட்டம் ஆகும்.

சென்ற ஆண்டில் இம்மாவட்டத்தில் 1167 டன் சான்றிதழ் பெற்ற நெல் விதைகளும், 13 டன் கம்பு விதைகளும், 9 டன் ராகி விதையும், 312 டன் நிலக்கடலை விதையும் வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தியைப் பெருக்க அதிக விளைச்சலைத் தரக்கூடிய ஐ. ஆர். 20, பவானி, பொன்னி மற்றும் காஞ்சி, கண்ணகி ரகங்கள் 7 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன.

வீரிய ஒட்டுக் கம்பும், கோ 7 ராகியும் 75,000 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன.

உர உபயோகம் மற்றும் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளன. 32,000 டன் தழைச்சத்து உரங்களும் தலா 5,000 டன் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களும் சென்ற ஆண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தழை உர விதை விநியோகத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு, 100 டன் தழை உர விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 25,000 நுண் உயிர்க் குடுவைகளும் விவசாயிகளுக்கு வழங்கி மண்ணின் வளத்தைக் காக்கவும் மேம்படுத்தவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தரமான பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பெருமளவில் மழை பெய்து ஏற்பட்ட சேதத்தைத் தவிர்க்க அரசு ஆணையின்படி பூச்சிமருந்துகளுக்கு 25 சதவிகிதம் வரை தள்ளுபடி செய்து மார்ச் மாதம் முடிய விற்பனை செய்யப்பட்டது.

160 அனுசரணை ஆராய்ச்சி வயல்களும் 140 பெருவிரிவாக்கப் பண்ணைகளும் அமைக்கவும் விவசாயிகளுக்குப் புதிய தொழில் நுட்பமுறைகள் விளக்கப்பட்டன. உழவர் பயிற்சிகளும், மற்றும் சிறுவிவசாயி மேம்பாட்டுத் திட்டம் இவையும் வேளாண்மை முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டன.

கருத்துக் காட்சிகளும், கருத்தரங்கங்களும் நடத்தி வேளாண்மை வளர்ச்சி அடைய ஏற்பாடு செய்யப்பட்டன.

வருகிற ஆண்டில் வேளாண்மை முன்னேற்றத்திற்காகவும், வேளாண்மை இலாபகரமான ஒரு தொழிலாக மலர்வதற்கும் பல புதிய வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. அவற்றில் ஒரு சில:

(1) மானாவாரி சாகுபடிக்காகப் புதிய கருவி, நிலம் தயாரிக்கவும் உரமிடுதல் மற்றும் விதைத்தல் போன்ற வேலைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது.

(2) சத்தூட்டப்பட்ட தொழு உரம்.

(3) நஞ்சை நிலங்களுக்கு நீலப் பச்சைப்பாசி.

(4) பாய் நாற்றங்கால்.

(5) சூபர் நாற்றங்கள்.

வேளாண்மைத்துறை வேளாண்மை வளர்ச்சிக்காகவும் பல புதியரக வித்துக்களைப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளையும் மருந்துகளையும் தொடர்ந்து அளிப்பதுடன் வேளாண்மைப் பெருமக்களுக்குச் சிறந்த முறையில் தொடர்ந்து பணியாற்றி வர உறுதி பூண்டுள்ளது.

எனவே, உழவர் பெருமக்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி வேளாண்மைத் துறைப் பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு நமது மாநில மாநிலத்தில் வேளாண்மை செழிக்கவும், உற்பத்தித் திறன் உயரவும் வழிவகுக்க வேண்டும்.



## மதுராந்தகம் பெருவிளக்கப் பண்ணை சாதனை....

**செ**ங்கற்பட்டு மாவட்ட வேளாண்மைக் கோட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகம் கிராமத்தில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட பெருவிளக்கப்பண்ணையினால் 20 விவசாயிகள் கீழ்க்கண்ட நன்மைகள் பெற்றனர்.

இவ்விவசாயிகள் பயிரிட்டு வரும் 22 ஏக்கர் நிலப்பரப்பு துணைக்கால்வாய் ஒன்றின் மூலம் நீர்ப்பாசனம் பெற்று வந்தது. இத் துணைக்கால்வாய் பிரதான கால்வாயைக் கடக்க இவ் விவசாயிகள் நூறாண்டுக் காலமாக பனைமரத்துண்டுகளையும், மண் கால்வாய்களையும் பயன்படுத்தி வந்தனர். இதனால் சீரான நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டதுடன், நீர்ச் சேதமும் ஏற்பட்டது. இந் நிலப்பரப்பில் விவசாயத் துறையினரால் பெருவிளக்கப்பண்ணை அமைக்கப்பட்டு ரூ. 1129 செலவில் நிரந்தர மேல்கால்வாய் கட்டப்பட்டது. (இச்செலவுகள் அனைத்தும் விவசாயிகளாலேயே செலவிடப்பட்டது) இந்த மேல் கால்வாய் அமைக்கப்பட்டதால் விவசாயிகள் எவ்வித தொந்தரவும் இல்லாமல் நீர்வசதி பெறுவதுடன் நீர்ச் சேதமும் தடுக்கப்பட்டது.

2. விவசாயிகள் மற்ற ஆண்டுகளை விட கடந்த ஆண்டு 6.8 கிலோ தழைச்சத்து, 5.1 கிலோ மணிச்சத்து, 5.1 கிலோ சாம்பல்சத்தும் அதிக உரமிட்டதால் அதிக லாபம் பெற்றனர்.

3. தங்கள் கிராமத்திற்கு ஏற்ற பயிர்சுழற்சி சம்பா பருவத்தில் பொன்னி நெற்பயிரும், நவரைப் பருவத்தில் ஐ. ஆர். 20 நெற்பயிரும் என்பதை இப்பண்ணையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

4. இப்பண்ணை விவசாயிகள் விவசாயத் துறை சிபாரிசுப்படி புதிய முறைப்படி பயிரிட்டதால் கூடுதல் லாபமாக ரூ. 140 பெற்றனர்.

இதே போல் 28 பெருவிளக்கப் பண்ணைகள் செங்கற்பட்டு விவசாயக் கோட்டத்தில் அமைக்கப்பட்டன.

இவ்வருடமும் 28 பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

# மஞ்சள் சாகுபடிக் குறிப்புகள்

மஞ்சள் சாகுபடிக்கு மண் வளம், குறுமண்ணும் வண்டலும் கலந்த வடிகால் வசதியுடைய நிலம் மிகவும் ஏற்றது. வண்டல்மண், வண்டல் கலந்த மணல் மற்றும் குறைவான களியுடைய நிலங்களும் ஏற்றவை.

**நடும் பருவம் :** மே மாதம் முதல் ஜூன் கடைசி வரை.

**நிலம் தயாரிப்பு :** நிலத்தை நன்கு உழுது 1.5 அடி இடைவெளியில் பார் அமைக்க வேண்டும்.

**விதைக்கிழங்கு :** உருண்டையான தாய் மஞ்சளையும், விரல் மஞ்சளையும் உபயோகிக்கலாம். தாய் மஞ்சளானால் ஒரு ஏக்கர் நட 1,000 கிலோவும், விரல் மஞ்சளானால் 1,200 கிலோவும் தேவைப்படும்.

**நடவு :** விதைக்கிழங்குகளை ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் நனையும் செரசான் வீதம் கலந்து நீரில் நனைத்து பார்களின் ஒரு பகுதியில் 3/4 அடி இடைவெளி விட்டு நடவேண்டும்.

**உரம் :** ஒரு ஏக்கருக்குப் பத்து வண்டி தொழு உரத்துடன் 20 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசையும் அடி உரமாக இடவேண்டும். மேலுரமாக 20 கிலோ யூரியாவை நடவு செய்த 30, 60, 90, 120-வது நாட்களில் பார்களில் பயிருக்கும் சிறிது கீழே இடவேண்டும்.

**களையெடுப்பு :** நட்ட 45-வது 90-வது நாளில் களைகளை வெட்டி நீக்கியபின் மண் அணைக்கவும்.

**ஊடுபயிர் :** பார்களின் மறுபுறத்தில் வெண்டை, வெங்காயம், உளுந்து, துவரை, பாசிப்பயறு போன்றவற்றைப் பயிரிடலாம், **மக்காச் சோளம், ராகி பயிரிட்டால் மஞ்சளின் வளர்ச்சி குறைந்து விளைச்சலும் குறையும்.**

**நீர்ப்பாசனம் :** கிழங்கு நட்டவுடனும், நட்ட மூன்றும் நாளும் நீர்கட்ட வேண்டும். மஞ்சள் முளைக்கும் வரை வாரம் ஒரு முறையும் பின்னர் 10-12 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் எப்பொழுதும் தேங்கக்கூடாது.

**பயிர்ப் பாதுகாப்பு :** மஞ்சளை இலைப்புள்ளி மற்றும் தூர் அழுகல் நோயும் தாக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் டைத்தேன் எம். 45 மருந்தையும் கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

சாற்றை உறிஞ்சும் அசுவினி, இலைப்பேன் மற்றும் கண்ணாடி இறக்கைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி ரோகார் அல்லது மெட்டா சிஸ்டாக்ஸ் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 1 மில்லி லெபாசிட் அல்லது 2 கிராம் செவின் கலந்து தெளிக்க வேண்டும்.

கிழங்குகளின் சாற்றை உறிஞ்சும் செதிள் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீரில் 1.5 மில்லி ஜோலோன் அல்லது 0.5 மில்லி நுவான் கலந்து தெளிக்கலாம். நடுவதற்கு ஒருவாரம் முன் அதே மருந்துக் கலவையில் கிழங்குகளை 15 நிமிடம் நனைத்து எடுக்க வேண்டும்.

**விளைச்சல் :** ஏக்கருக்கு 7500-8000 கிலோ பச்சை மஞ்சள் கிடைக்கலாம். பக்குவப்படுத்தினால் 1500-1600 கிலோ காய்ந்த மஞ்சள் கிடைக்கலாம்.

**மஞ்சள் பக்குவப்படுத்தும் முறை**

மஞ்சளை அறுவடை செய்தபின் நன்றாகக் கழுவி மண்ணை நீக்கி, வேரை அகற்றிவிட்டு, தாய்க் கிழங்கு, விரல் கிழங்குகளைத் தனித்தனியே பிரித்து எடுக்க வேண்டும். விதைக்க வேண்டிய மஞ்சளைத் தனியாக எடுத்து வைத்துவிட்டு பக்குவப்படுத்தும் மஞ்சளைத் தாய்க்கிழங்கைத் தனியாகவும், கிழங்குகளைத் தனியாகவும் மண்பாண்டத்தில் அல்லது இரும்பு, தகரப் பாத்திரத்தில் முக்கால் பங்கு மஞ்சளை நிரப்பி அதற்குச் சமமான அளவு சாணம் கலந்த நீரை ஊற்றி, மஞ்சளும் நீரும் சரியாக இருக்கும் பக்குவத்தில் பாத்திரத்தை மூடி அல்லது சாக்குகளினால் கட்டி பின் வேகவைக்க வேண்டும். வெண்ணிற ஆவி வரும்வரை அல்லது ஒரு சிறிய குச்சி கொஞ்ச அழுத்தத்துடன் கிழங்கின் உள்ளே செல்லும் பக்குவத்தில் வேக வைப்பதை நிறுத்த வேண்டும். கிழங்குகளை எடுத்து விரல்களினால் அழுத்தினால் சிவப்பான உள்தோற்றமுடையதாக இருந்தால் நன்றாக வெந்துவிட்டது என்று பொருள்.

வேகவைத்த மஞ்சளை வெயிலில் நன்றாக 7 முதல் 10 நாட்கள் வரை உலர வைக்கவேண்டும். இரண்டு மூன்று முறை திருப்பிப் போட்டு ஒரே மாதிரியாகக் காய வைக்க வேண்டும். பின்னர் சாக்குகளில் கட்டியோ அல்லது கடினமான தரையிலோ போட்டு நன்றாகத் தேய்த்துப் பின்னர் தூசிகளை அகற்றிச் சுத்தப்படுத்த வேண்டும். இவற்றை 'மஞ்சள் பாலிஷர்' என்னும் கருவியில் போட்டு நன்றாகச் சுற்றினால் மஞ்சள் மெருகேற்றப்பட்ட நல்ல தோற்றமுடையதாகத் தோன்றும்.

**சேமித்து வைத்தல் :** இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட மஞ்சளை உடனடியாக விற்க இயலாவிட்டால் சாக்குகளில் கட்டி 15' 10' 7'அடி ஈரப்பதமற்ற குழிகளில் சாக்குகளோடு அடுக்கிச் சேமித்து வைக்கலாம். குழியின் அடிப்பகுதியிலும் ஓரப்பகுதிகளிலும் நன்றாகக் காய்ந்த வைக்கோல் அல்லது ஓலைப்பாய் போட்டு அதன்மேல் மூட்டைகளை அடுக்க வேண்டும்.

**விதைக்கிழங்குகளைச் சேமித்தல் :**

விதைக்கிழங்குகளை நிழல் தரும் மரக்கிளையினடியில் குவித்து மேலே காய்ந்த மஞ்சள் இலைகள் அல்லது தென்னை மட்டை போன்றவற்றைப் போட்டு மூடி வைக்க வேண்டும். இவை அடுத்த நடவு வரை பாதிக்கப்படாமலிருக்கும்.

**கே. சந்திரகாந்தன்**
**இரா. நேதாஜி சீதாராமன்**
**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம். கோவை.**

# ராகியின் தேமல் நோயும் தடுக்கும் முறைகளும்



ராகியில் தோன்றும் நோய்களுள் தேமல் நோய் மிக முக்கியமானது. இது நச்சுயிரியினால் ஏற்படுகிறது. இந்நோய் தமிழ் நாட்டில் தற்பொழுது கோவை மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. வடஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இந்நோய் சுமார் 74 சதம் வரை காணப்படுகிறது. இதனால் பயிரின் விளைச்சலும் 52 முதல் 78 சதம் வரை குறைந்து விடுகிறது. இந்நோய் மார்ச் முதல் ஜூன் வரை விதைக்கப்பட்ட பயிர்களில் அதிகம் காணப்படுகிறது. ஜூலை மாதத்திற்குப் பிறகு விதைக்கும் பயிர்களில் குறைவாகக் காணப்படும்.

**நோயின் அறிகுறிகள் :**

ராகியின் தேமல் நோய், விதைத்த 45 நாட்களுக்குப் பின்பே தெரிகிறது. 60 நாட்களுக்குப் பின் அறிகுறிகளை நன்கு காணலாம். நோயின் அறிகுறிகள் இளம் இலைகளில் முதலில் தோன்ற ஆரம்பிக்கும். இலைகள் முதலில் வெளிறிய மஞ்சள் நிறமாக இருக்கும். வெளிறிய சிறிய புள்ளிகளும், பசுமையான பாகங்களும் இடையிடையே காணப்படும். இவ்வறிகுறிகள் செடியின் மற்ற இலைகளுக்கும் பரவுகின்றன. நன்கு முதிர்ந்த பயிர்களின் இலைகள் மிகவும் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறி விரைவில் பழுத்து விடுகின்றன. நோய், இளஞ்செடிகளிலேயே தோன்றினால் கதிர்களில் மண் பிடிப்பதில்லை. முதிர்ந்த பயிர்களில் நோய் தோன்றினால் விளைச்சல் மிகவும் குறைந்து விடும்.

**நோய் பரவும் விதம் :**

ராகியின் தேமல் நோய் ஒரு வகைத் தத்துப்பூச்சிகளின் மூலம் பரவுகிறது. நோயுற்ற செடியின் சாற்றை உறிஞ்சிய பின்பு நோய் தாக்காத செடிகளில் சென்று இப்பூச்சிகள் சாற்றை உண்ணும் பொழுது நச்சுயிர்கள் பரவுகின்றன.

**தடுப்பு முறைகள் :**

ராகி நாற்றங்காலில் விதைத்த 15-வது நாளில் நுவக்ரான் 40. இ. சி. 0.05 சதமருந்தை (125 மில்லி மருந்தை 100 லிட்டர் நீர் என்ற அளவில்) கலந்து தெளிக்க வேண்டும். நாற்று எடுத்து நட்ட 15-வது நாட்களில் இருமுறை நுவக்ரான் 40 இ.சி. 0.05 சதம் (250 மில்லி 200 லிட்டர் நீரில்), அல்லது டிமக்ரான் 100-0.05 சதம் (100 மில்லி 200 லிட்டர் நீரில்), அல்லது மெடாசிஸ்டாக்ஸ் இ.சி. 50.0.05 சதம் (200 மில்லி 200 லிட்டர் நீரில்) அல்லது ரோகார் 30 இ. சி. 0.05 சதம் (200 மில்லி-200 லிட்டர் நீரில்) மருந்தைக் கைத்தெளிப்பான் மூலம் காலை வேளைகளில் தெளித்து இந்நோய் பரவாமல் சிறந்த முறையில் தடுக்கலாம். விசைத் தெளிப்பான் மூலம் தெளித்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

தகவல்:



**டாக்டர் டி. கே. கந்தசாமி,**
**பயிர் நோயியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.**


## பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில்...

மீனவர் வகுப்பில், கீழ்க்கண்ட ஆறு பிரிவுகளைச் சேர்ந்த கிறித்துவர்களும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தமிழக அரசு அறிவித்து உள்ளது.

(1) பரவர் (2) முக்குவர் (3) பர்வத இராஜகுலம் (4) பட்டனவர் (6) செம்படவர் (6) மீனவர்

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது. கல்வி நிலையங்களில், குறிப்பாக தொழிற்கல்வி அளிக்கும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது இவ்வாண்டிலிருந்து. இவ்வுத்தரவு வழுவாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அரசு அறிவித்துள்ளது.



# முசுக்கட்டை பயிர் செய்தல்

டாக்டர் டி. எஸ். முத்துக்கிருஷ்ணன்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

பட்டுத் தொழிலில் முசுக்கட்டைச் செடி பயிரிடுதல் முதல் இடத்தை வகிக்கிறது. ஏனெனில் முசுக்கட்டைப் பட்டுப் புழுக்கள், முசுக்கட்டை இலைகளைத் தவிர வேறு எந்த இலைகளையும் உணவாக உட்கொள்ளுவதில்லை. பட்டுப்புழுக்களுக்கு உயர்ந்த ரக முசுக்கட்டைச் செடி இலைகளை உணவாகக் கொடுத்து அதிகமாகப் பட்டு நூலைப் பெற முடியும். முசுக்கட்டை வகைகளிலே பல ரகங்கள் இருக்கின்றன. அதில் கள்ளா-2, என். ஆர். 2 எஸ். 54, எஸ். 30, எஸ். 36 என்கிற ரகங்கள் நன்றாக வளர்ந்து ஆண்டு முழுவதும் இலைகளைக் கொடுக்கும்.

முசுக்கட்டைப் பயிர், மணல் கலந்த மண், வண்டல்மண், செம்புரை மண், செம்மண் முதலிய நிலங்களில் நன்கு வளரும். அதிக அமிலத்தன்மையோ அல்லது களர் தன்மையோ உள்ள நிலங்களில் முசுக்கட்டைச் செடி பயிர் செய்தால் வளமாக வராது. முசுக்கட்டைப் பயிர் விதைகள் மூலமும் பயிர் செய்யலாம். ஒட்டுக்கட்டியும் செய்யலாம். பதியன் போட்டும் செய்யலாம். தண்டுகளை நட்டும் பயிர் செய்யலாம். இவற்றிலே தண்டுகளை நடும் முறை தான் நடைமுறையில் கையாளப் படுகிறது.

**தண்டு நடுதல் :**

பூச்சிகளாலும் நோயாலும் பாதிக்கப்படாத சுமார் ஓராண்டு வளர்ச்சியடைந்த முற்றிய தண்டுகள்தான் நடவிற்குச் சிறந்தவை. நல்ல பருமனாகவும், கணுக்கள் சிதையாமலும் மூன்று வகைக் கணுக்கள் உள்ள தண்டுகளைத் தான் நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். அவைகளை நேரிடையாகவும் நடலாம். அல்லது நாற்றங்கால்களில் நட்டு வேர்விட்ட பின் பெயர்த்தெடுத்துத் தோட்டங்களிலும் நடலாம்.

நாற்றங்கால்களுக்கு, நல்ல வடிகால் வசதியுள்ள, சற்று மேட்டுப்பாங்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நன்றாக ஆழமாக வெட்டி கற்கள், மற்றச் செடிகளின் வேர்களையும் கட்டைகளையும் களைந்தெறியலாம். எக்டருக்கு 20 டன் அளவு நன்கு மக்கிய தொழு உரம் போட வேண்டும். மண்ணைக் கிளறிச் சமன் செய்ய வேண்டும். சமன் செய்த இடத்தில் 1.5 மீட்டர் அகலத்தில் தேவையான அளவு நிலத்திலே மேட்டுப் பாத்திகளை அமைக்க வேண்டும். அப்படிச் செய்வதாலே பாத்தியின் நான்கு பக்கங்களிலும் வடிகால் வசதியோடு அமையும். முசுக்கட்டைத் துண்டுகளை 8.0 × 8.0 செ. மீ. இடைவெளி விட்டு, சற்றுச் சாய்த்தும் அடிப்பக்கக் கணு மண்ணில் நன்கு புதையுமாறும் இருக்கிறமாதிரி தண்ணீர் விட வேண்டும். நட்ட 15 நாட்களில் தண்டுகள் துளிர்விட ஆரம்பிக்கும். 2 மாதம் ஆன பிறகு அவற்றை வேருடன் எடுத்துத் தோட்டத்தில் நடலாம்.

**நிலத்தைப் பண்படுத்துதல் :**

முசுக்கட்டைச் செடி பல ஆண்டுகள் நீடித்து வளரக்கூடியது. ஆகவே வேர்கள் நன்றாக வளர நிலத்தை 30 முதல் 45 செ. மீ. வரை ஆழமாக 3 அல்லது 4 முறை உழவேண்டும். உழுத பின் களைகளையும், கற்களையும் அப்புறப்படுத்தித் தேவைக்குத் தக்கவாறு பாத்திகளாகப் பிரிக்க வேண்டும்.

**உரமிடுதல் :**

முசுக்கட்டைச் செடிக்கு உரமிடுதல் மிகவும் அவசியமாகும். தோட்டக்கால் நிலத்திற்கு ஓர் ஆண்டில் எக்டருக்கு 10 முதல் 20 டன் தொழு உரம் போட வேண்டும். நடுவதற்கு முன்பு அடி உரமாகவும் போட வேண்டும். மானாவாரி நிலமானால் ஒரு எக்டருக்கு 5 முதல் 10 டன் தொழு உரம் ஆண்டிற்கு ஒரு முறை போட வேண்டும்.

சத்துமிக்க முசுக்கட்டை இலைகளைப் பெற, இரசாயன உரமும் போட வேண்டும். நீர்ப்பாசன வசதியுள்ள தோட்டக்கால் நிலத்திற்கு, ஓர் ஆண்டில் ஒரு எக்டருக்கு 250 கிலோ தழைச்சத்துப் போட வேண்டும். 100 கிலோ மணிச்சத்து போட வேண்டும். 100 கிலோ சாம்பல் சத்துப் போட வேண்டும். இந்த அளவு போடும் போது 5 பகுதிகளாகப் பிரித்து 5 முறை போட வேண்டும். முதல் முறையாக குச்சிகள் நடுவதற்கு முன் அடியுரமாக 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும், 50 கிலோ சாம்பல் சத்தும் போட வேண்டும். அடுத்து இரண்டாம் தடவையாக 50 கிலோ தழைச்சத்தைக் குச்சிகள் நட்டு நான்காம் மாதத்தில் போட வேண்டும். அதாவது முதல் முறையாக இலை அறுவடையான பிறகு இட வேண்டும். 2-ம்முறை உரம் இட்டு 10 வாரங்கள் சென்ற பின் அதாவது 2-ம் முறை இலை அறுவடையான பிறகு 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும், 50 கிலோ சாம்பல் சத்தும் 3-ம் முறையாக இட வேண்டும். 3-ம் முறை உரம் போட்ட 10 வாரங்களுக்குப் பின்னாலே, அதாவது 3-வது தடவையாக தழை அறுவடையான பின் 50 கிலோ தழைச் சத்தை நான்காம் தடவையாகப் போட வேண்டும். அதன் பின் 10 வாரங்கள் சென்றபின், நான்காம் முறை இலை அறுவடையான பின் 50 கிலோ தழைச்சத்தை ஐந்தாம் முறையாக இட வேண்டும்.

மானாவாரி நிலத்திற்கு ஒரு எக்டருக்கு வருடத்தில் 100 கிலோ தழைச்சத்தையும், 50 கிலோ மணிச்சத்தையும், 50 கிலோ சாம்பல் சத்தையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து இடவேண்டும். முதல் முறை 50 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் 50 கிலோ சாம்பல் சத்தும் அடியுரமாக இடவேண்டும். இரண்டாம்முறை 50கிலோ தழைச்சத்து மட்டும் முதல் இலை அறுவடையான பிறகு போட வேண்டும்.

**நடவு முறைகள் :**

தண்டுகளைக் குழிகளிலும் நடலாம். பார்கட்டியும் நடலாம். கோலார் நடவு முறையிலும் நடவு செய்யலாம். குழிகளில் நடவு செய்யும் முறை மானாவாரி நிலங்களிலே கையாளப்படுகிறது. குழிகளை 30 செ. மீ. X 30 செ. மீ. X 3 செ.மீ. அளவுக்கு அமைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 75 செ. மீ. அளவு இடைவெளியும், குழிக்குக் குழி 75 செ. மீ. இடைவெளியும் இருக்க வேண்டும். தோண்டி, தண்டுகள் நடுதல் நன்று.

பார்கட்டி நடும் முறையானது நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களில்தான் கையாள முடியும். 45 செ. மீ. முதல் 60 செ. மீ. வரை இடைவெளியில் பார்களை அமைக்க வேண்டும். துண்டுகளை 15 செ. மீ. முதல் 23 செ. மீ. வரை இடைவெளி விட்டு நட வேண்டும்.

இவை தவிர கோலார் நடவு முறையிலேயே முற்றிய நீளக் குச்சிகளை பாரின் நீளவாக்கிலே படுக்கையாக 3-5 செ. மீ. ஆழத்திலே புதைத்துவிட வேண்டும். இம்முறை மூலம், பெரும்பாலான கணுக்களிலிருந்தும், துளிர்கள் தோன்றி அதிகமாகச் செடிகள் வளர வாய்ப்புண்டு.

**நடவு காலம் :**

ஜூலை முதல் ஜனவரி வரை அதாவது பருவமழைக் காலங்களில் நடவு செய்தால் செடிகள் விரைவில் வேர்பிடித்து, தழைத்து நன்கு வளரும்.

**நீர்பாய்ச்சுதல் :**

முசுக்கட்டைச் செடிக்கு வாரத்திற்கு ஒரு முறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். மணல் கலந்த நிலமாக இருந்தால் 7-10 நாட்களுக்கு ஒருமுறையும், களி மண் கலந்த நிலமாக இருந்தால் 15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

**செய்நேர்த்திகள் :**

**களையெடுத்தல் :**

களை எடுப்பது மண்ணின் ஈரத்தைப் பாதுகாப்பதற்கும், மண் நல்ல காற்றோட்டம் பெறவும், வேர்கள் நல்ல மண்ணில் ஊடுருவிச் செல்லவும் வசதி செய்கிறது. வருடத்தில் நான்கு அல்லது ஐந்து முறை, களை எடுக்க வேண்டும்.

**பார் கட்டுதல் :**

அவ்வப்போது அழிந்த பார்களைச் சரிசெய்ய வேண்டும். அப்போதுதான் தண்ணீர் உறிஞ்சப்பட்டு, மண்ணின் ஈரம் போகாமல் இருக்கும்.

**கட்டை வெட்டுதல் :**

முசுக்கட்டைச் செடிகளை வருடம் ஒரு முறை பூமி மட்டத்திலிருந்து 8—15 செ.மீ. விட்டு வெட்ட வேண்டும். தவிர வருடத்தின் இடையே, பட்டுப்புழு



வளர்ப்பு முடித்த பிறகு, செடிகளை மேல் மட்டத்திலாவது, அல்லது நடுவிலாவது தண்டுகளை வெட்டுதல் அவசியமாகும். இப்படிச் செய்தால்தான் இலைகள் அதிகமாக உற்பத்தியாகும்.

**தழை மடித்தல் :**

வெட்டப்பட்ட அல்லது உபயோகமற்ற இலைகளை, முசுக்கட்டைச் செடிகளுக்கு இடையில் போட்டு மக்கச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதாலே, மண்ணின் தரம் உயருகிறது.

**இலை அறுவடை :**

இலைகளை இரண்டு முறைகளில் அறுவடை செய்யலாம். ஒன்று இலைகளை மாத்திரம் பறித்தல், மற்றது தண்டுடன் இலைகளை அறுவடை செய்தல்.

**இலை பறிக்கும் முறையிலே :**

இலைகளை ஒவ்வொன்றாகப் பறிக்க வேண்டும். செடியின் நுனியிலிருந்து முதல் இரண்டு, இலைகளை விட்டு விட்டு மூன்றும், நான்காம், ஐந்தாம் இலைகளைப் பறித்து இளம் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்க வேண்டும். புழுக்கள் மூன்றும் முறை சட்டையுரிக்கும் சமயம், செடியின் நுனி பாகத்தை வெட்டிவிட வேண்டும். இதனால் அடி இலைகள் வளர்ந்து, நான்காம், ஐந்தாம் பருவப் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்க ஏற்ற வகையில் முற்றி விடும்.

**இலைகளைத் தண்டுடன் அறுவடை செய்தல் :**

நான்காம், ஐந்தாம் பருவத்தில் தண்டுடன் இலைகளைப் புழுக்களுக்கு உணவாகக் கொடுக்கலாம். இதற்கு நில மட்டத்திற்கு 8.15 செ. மீ. மேலே இலைகளோடு தண்டையும் சேர்த்து அறுவடை செய்ய வேண்டும். இம்முறையிலே இலைகள் தண்டுடன் இருப்பதால் சீக்கிரம் காய்ந்துவிடுவதில்லை. மேலும் அறுவடைச் செலவும் குறைவு. இது 'கோலார் முறை' என்றும் குறிப்பிடப்படும்

**இலை மகசூல் :**

இலை மகசூல், செடியின் வகை, மண்ணின் தரம், உரத்தின் அளவு நீர்ப்பாசன அளவு, திருந்திய சாகுபடி முறைகள் முதலியவற்றைப் பொறுத்து இருக்கிறது. மானாவாரி நிலத்திலே ஒரு எக்டரிலிருந்து ஒரு வருடத்தில் சுமார் 8,000 முதல் 9,000 கிலோ வரையும்நீர்ப்பாசனவசதியுள்ள தோட்டக்கால் நிலத்திலே 25,000 முதல் 30,000 கிலோ வரையும் மகசூல் கிடைக்கும்.

ஒரு விவசாயி ஒரு எக்டர் நிலத்தில் கிடைக்கும் இலைகளைக் கொண்டு, வருடம் ஒன்றிற்கு ஒரு தடவைக்கு 1000 முட்டைகள் வீதம் ஆறுமுறை அதாவது மொத்தத்தில் 6000 முட்டைகள் வீதம் முட்டைகளைப் பொரித்துப் புழுக்களை வளர்க்க முடியும். இதிலிருந்து குறைந்தது 1800 கிலோ கூடுகள் கிடைக்கும். அதனை (1800—30) குறைந்தது ரூ. 54,000த்திற்கு விற்பனை செய்யலாம். இதில் தோட்டப் பராமரிப்பு, புழுக்கள் வளர்க்கும் செலவு இவை இரண்டுக்கும் சேர்த்து ரூ. 21,250 செலவாகும் இந்தச் செலவு போக நிகர இலாபம் ரூ. 32,750 கிடைக்கும்.

முசுக்கட்டையில் முக்கியமாக செதில் பூச்சிகள், மாவுப்பூச்சிகள் இவை இரண்டும் தாக்கும். அவ்வப்போது தண்டு வெட்டுதல் மூலமாக இப்பூச்சிகளின் தாக்குதலிலிருந்து செடிகளை எளிதில் காப்பாற்றலாம்.



# கரும்பு சாகுபடிக் குறிப்புகள்

**மண் வளம் :**

**க**ரும்புச் சாகுபடிக்கு வடிகால் வசதியுடைய வண்டல்மண் மிகவும் ஏற்றது. கரிசல், செவ்வல் மற்றும் மணல் கலந்த பூமியிலும் சாகுபடி செய்யலாம்.

| பட்டங்கள் | | ஏற்ற ரகங்கள் ஆலைப்பகுதிக்கு | வெல்லம் தயாரிக்க |
|---|---|---|---|
| முன்பட்டம் (டிசம்பர்-ஜனவரி). | ... | கோ. 6806<br>கோ. 658<br>கோ. சி. 771 | கோ. 449 |
| மத்தியபட்டம் | ... | கோ. 419 | கோ. 449 |
| (பிப்ரவரி-மார்ச்). | | கோ. 449<br>கோ. 658<br>கோ. 6304 | கோ. 740<br>கோ. 6304<br>கோ. 650 |
| | | கோ. சி. 775, 776, 777 | |
| பின்பட்டம் | ... | கோ. 419 | கோ. 449 |
| (ஏப்ரல்-மே) | ... | கோ. 6304 | கோ. 740 |
| | | கோ. சி. 7710, 7711 | |
| ஆடிப்பட்டம் | ... | கோ. 658 | கோ. 449 |
| (ஜூலை-செப்டம்பர்) | | கோ. 853 | கோ. 740<br>கோ. 853 |

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை.**

**நிலம் தயாரிப்பு :** நிலத்தை 4-5 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். 2 —3 அடி இடைவெளியில் 18—20 அடி நீளத்திற்குப் பார்கள் அமைக்க வேண்டும்.

**விதைக்கரணைகள் :** ஒரு ஏக்கர் நடவு செய்ய சுமார் 30,000 இரு பருக் கரணைகளும் 20,000 முப்பருக் கரணைகளும் போதுமானது. நோயற்ற, பூச்சி தாக்காத 8 மாதப் பயிரிலிருந்து கரணைகள் எடுக்கலாம். மறுதாம்புப் பயிரில் கரணைகள் எடுக்கக்கூடாது. ஒரு ஏக்கரில் 60,000 பருக்கள் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும்.

**கரணை நடவு :**

**கரணை நடவு :** கரணைகளை 1 அங்குலத்திலிருந்து 3 அங்குல ஆழம் வரை நடவு செய்யலாம். நடும்பொழுது பருக்கள் பக்கவாட்டில் இருக்க வேண்டும். நடும்முன் 500 கிராம் அகலால் மருந்தை 100 லிட்டர் தண்ணீர் கலந்த கரைசலில் கரணைகளை முக்கி நடவேண்டும்.

**உரமிடல் :** ஏக்கருக்குப் பத்து வண்டி நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். அத்துடன் 150 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் அடியுரமாக இடவேண்டும்.

நடவு செய்த 45-வது 90-வது நாட்களில் சிபாரிசு செய்யப்பட்ட யூரியா மற்றும் 40 கிலோ

மூரியேட் ஆப்பொட்டாசையும் மேலுரமாக இட வேண்டும்.

**தழைச்சத்து இடவேண்டிய அளவு**

| மாவட்டங்கள் | 45-வதுநாள் | 90வது நாள் |
|---|---|---|
| | யூரியா (கிலோ) | யூரியா (கிலோ) |
| தென்ஆர்க்காடு, ... தஞ்சாவூர், திருச்சி | 120 | 120 |
| வடஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம், தருமபுரி, கோவை. | 100 | 100 |
| மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி | 75 | 75 |

**இலை மூலம் யூரியா தெளித்தல் :** இலைமூலம் தெளிப்பதற்கு 2.5 கிலோ யூரியாவை 100 லிட்டர் நீரில் கரைத்து நட்ட 45-வது நாளில் தெளிக்க் லாம். மேலுரமாகச் சிபாரிசு செய்யப்படும் யூரியா வில் முக்கால் பாகத்தை இவ்வாறு தெளித்தால் போதுமானது.

**நீர்ப்பாசனம் :** முதல் 45 நாட்களுக்கு 7 நாட்களுக்கு ஒருமுறையும், 45-90வது நாள்வரை 10 நாட்களுக்கு ஒருமுறையும் பின்னர் வளர்ச்சிப் பருவத்தில் 7 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் கட்ட வேண்டும். முதிர்ச்சிப் பருவத்தில் மாதம் இரு முறை நீர் கட்டினுல் போதுமானது.

**பின்செய் நேர்த்திகள் :** நடவு செய்த 40-வது 100-வது நாட்களில் மண்வெட்டி கொண்டு வெட் டிக் களையெடுக்க வேண்டும். நடவு செய்த 6 அல்லது 7-வது மாதத்தில் காய்ந்த சோகைகளைக் கழிக்க வேண்டும். இதனுல் பக்கக் கிளைகள் வராம லும் குருத்துப் பூச்சி காக்காமலும் தடுக்கப்படுகின் றது.

நடவு செய்த 8-வது மாதத்தில் இரண்டு வரிசைக் கரும்புகளை ஒன்ருகச் சேர்த்து பின்னி விட்டம் கட்ட வேண்டும். இதனுல் கரும்பு சாயா மல் பாதுகாக்கலாம்.

**ஊடுபயிர் செய்தல் :** கரும்பில் ஊடுபயிராகச் சிறிய வெங்காயம், உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களையும், சணப்பு எனும் பசுந்தாள் உரச் செடியையும் பயிர் செய்யலாம். சூரியகாந்தியை ஊடுபயிர் செய்தால் நல்ல பலன் பெறலாம்.

**பயிர்ப்பாதுகாப்பு முறைகள் :** தண்டு துளைப் பானையும் இடைக்கணுத்துளைப்பானையும் தடுக்க தையோடான் மருந்தை 1 லிட்டர் நீருக்கு 3 மில்லி வீதம் கலந்த பயிர் முளைத்தபின் 15 நாள் இடைவெளியில் 2.3 முறை தெளிக்க வேண்டும். அல்லது லிண்டேன் குருணை மருந்தை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இலைக் குருத்துக்களில் இடவேண்டும்.

கரையானைக் கட்டுப்படுத்த கருணை நடும் பொழுது ஏக்கருக்கு 10 கிலோ வீதம் காம்மா பி. எச். சி. மருந்தை நிலத்திலிட வேண்டும். வெண் புழுக்களைக் கட்டுப்படுத்த டாசினிட் குருணை மருந்தை ஏக்கருக்கு 15 கிலோ அளவில் ஜூன் மாதத்தில் நிலத்தில் பரவலாக இட வேண்டும்.

கரும்புப் பயிரைக் கரிபூட்டை நோய், வாடல் நோய், கருணை அழுகல் நோய் மற்றும் புல்தண்டு நோய் போன்றவைகள் தாக்கலாம். இந்நோய்களை மருந்தடித்துக் கட்டுப்படுத்த இயலாது. நடவு கருணைகளை நோயற்ற பயிர்களிலிருந்து எடுத்து நடுவதால் இந்நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம்.

## பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் பல நோக்கங்களைக் கொண்ட பல பள்ளத் தாக்குத் திட்டமாகும். இந்தியாவின் மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த ஆனைமலைச் சாரலில் உள்ள மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீர், மின் வளத்தை தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களின் பயனுக்காகப் பயன்படுத்த இத்திட்டம் விழைகிறது. தமிழ்நாடு, கேரளாவில் தற்போதுள்ள பாசன முறையின் 12,150 ஹெக்டேர் (30,000 ஏக்கர்) நிலங்களின் நீர்த் தேவையை நிலைப்படுத்துதல், பெருக்குதல், 185 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல் ஆகியவற்ருேடு தமிழ் நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர் மாவட்டத்தின் வறண்ட பகுதிகளில் சுமார் 97,200 ஹெக்டேர்களுக்கு (2,40,000 ஏக்கர்) பாசன வசதி அளிக்க இத்திட்டம் விழைகிறது. இத்திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டு பகுதி பெரும் பாலும் பாசனம் பெறும் புன்செய்ப் பகுதியாகும். மொத்த ஆயக்கட்டுப் பகுதியில் உயரளவு 20 சதவீதப் பகுதி தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதோடு கசிவு நீராலும் பாதிக்கப்படுகின்றன. இங்கு மட்டும்தான் நன்செய் சாகுபடி நடைபெறுகிறது. ஆனைமலையில் உள்ள 5 ஆறுகளையும் சமவெளியில் உள்ள இரண்டு ஆறுகளையும் ஆக மொத்தம் 7 ஆறுகளை அணை ஒன்று கட்டுவதன் மூலமும், திசை திருப்பிவிடும் பணிகளை நிறைவேற்றுவதன் மூலமும், குடைவரைகள் மூலமும் ஒருங்கிணைக்க இத்திட்டம் விழைகிறது. இந்த ஆறுகள், 3,009 அடி உயரத்திலும், + 1,050 அடி உயரத்திலும் பல்வேறு உயரங் களில் அமைந்துள்ளன. இதன் விளைவாக இவ்வாறுகளில் இருந்து விழும் நீரை புனல் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்த இயலுகிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 8,575.50 இலட்சம் ரூபாயாகும். பரஸ்பர உதவிக்காக பொது நீர் நிலைகளை மேம்படுத்தவும், மாநிலங்களுக்கு இடையேயுள்ள ஒத்துழைப்புக்கு இத் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

# கைவண்ணம் காப்போம் கைத்தறியைப் போற்றுவோம்



"கைத்தறித் துணிகளை மேலும் மேலும் ஆர்வத்துடன் ஆதரிக்கும்படி மக்களை - குறிப்பாக தாய்க்குலத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல இலட்சக் கணக்கானவர்களின் வாழ்க்கை இந்தத் தொழிலுடன் பின்னப்பட்டிருக்கிறது.

பன்னெடுங்காலமாக நாம் பெற்றுள்ள தொழில் நுட்பமும் நேர்த்தியும் இதனுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

கைவண்ணத்துக்கோர் எடுத்துக்காட்டு—கைத்தறித் துணி.

கைத்தறியாளர்களின் வாழ்வு செம்மையடைவது, நமது சமூகத்தில் ஒரு பகுதி செம்மையடைவதாகும்.

கைத்தறி ஆடை மக்களை ஒளி பொங்கச் செய்வதுபோல் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளி பொங்க செய்யவேண்டியது நம் கடமை. உழவுக்கு அடுத்த இடம், கைத்தறித் தொழில் பெற்றிருக்கிறது.

இதனை காத்திடுவது நமது கடமை."

—பேரறிஞர் அண்ணா



## நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் தன் பணியை ஆற்றுவதில் புதிய உயர்நிலையை எட்டுகிறது கோ-ஆப்டெக்ஸ்.

- நெசவாளர்களுக்கு மூலப்பொருள் வழங்கல்
- தொழில் நுணுக்க சேவை
- விற்பனை அமைப்புகள்
- உற்பத்தியில் பல்வேறு மாதிரிகள்
- புதிய உற்பத்தியில் அபிவிருத்தி
- கைத்தறியில் பாலியஸ்டர் துணி உற்பத்தியில் அபிவிருத்தி
- அரசாங்க கண்ட்ரோல்டு விலையில் ஜனதா துணிவகைகள் விற்பனை
- கைத்தறித் துணிகள் ஏற்றுமதி
- கூட்டுறவு நெசவாளர்களுக்கு வீடமைப்பு போன்ற நல்வாழ்வுத் திட்டங்கள்.

கடந்த ஆண்டில் வாடிக்கையாளர்கள் எங்கள் மீது அதிகப்படியான தொடர்ந்த நம்பிக்கையை வைத்துள்ளனர்.

எனினும், இன்னும் சிறந்த பணிக்காக — நல்ல பலன்களுக்காக — நாங்கள் தொடர்ந்து முயற்சிக்கிறோம்.

கூட்டுறவில் உள்ள நெசவாளர்களுக்காகவும், வாடிக்கையாளர்களுக்காகவும் என்றும் எங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

**கோ-ஆப்டெக்ஸ் — கைத்தறியில் இந்தியாவின் தலையாய மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் :**

# கோ-ஆப்டெக்ஸ்



# நெற்பயிருக்கு உரமும், குருணை மருந்தும் அளிப்பதற்குகந்த புதிய கருவி!

பொதுவாகப் பயிர்களுக்குத் தேவையான உரங்களையும், குருணை வடிவில் உள்ள மருந்துகளையும் பயிரின் வேருக்கு அருகாமையில் வைப்பதால், உரங்களும், மருந்துகளும் மிகச் சிறந்த முறையில் பயன் படுத்தப்படுகின்றன.

தற்போது நெற்பயிரில் உரமும், மருந்தும் இடுவதற்கென ஒரு புதிய கருவியைத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை வெளியிட்டுள்ளது. இக்கருவியின் மூலம் இடுவதனுல் நெற்பயிருக்குப் பரிந்துரைக்கப்படும் யூரியாவில் பாதியளவையும், குருணை மருந்தில் 75 சதவீதத்தையும் குறைத்துக் கொள்ளலாம்.

இக்கருவியைப் பயன்படுத்த வேண்டுமென்றல் பயிரை வரிசைக்கு வரிசை 20 செ.மீ. இடைவெளி இருக்குமாறு நடவு செய்தல் அவசியம். இக்கருவியில் சிறு கொழு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். முன்பக்கம் சிறு உருளையும், பின்புறம் சமன் செய்யும் பலகை ஒன்றும் இணைத்திருக்கும். கருவியை இழுத்துச் செல்லுவதற்கு வாய்ப்பாக முன்பக்கம் இரண்டு நீண்ட சட்டங்கள் பொருத்தப்பட்டிருக்கும். மேலும் பயிருக்கு இடுவதற்கான யூரியாவையோ அல்லது குருணை மருந்தையோ இடுவதற்கு ஏற்ப தகரத்தாலான கொள்கலன் ஒன்றும் அதிலிருந்து அவற்றை வெளிச் செலுத்தவும், நிறுத்தவும் ஏற்ற முறையில் கட்டை ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கும்.

போதுமான அளவு யூரியாவையோ அல்லது மணல் கலந்த குருணை மருந்தையோ தகரத்தாலான கொள்கலமிட்டு நிரவிக்கொள்ளுதல் வேண்டும். உரம் இடும்போது இரண்டு வரிசைக்கு அல்லது நான்கு வரிசைக்குத் தேவையான அளவு உரத்தை மட்டிலும், அந்த டப்பாவினுள் போட்டுக் கொள்ளுதல் வேண்டும். பின்னர் இந்தக் கருவியை பயிர் வரிசைகளுக்கு இடையே கைவண்டியைப் போல் இழுத்துச் செல்லுதல் வேண்டும். இழுத்துச் செல்லும்போது வலது கைப் பக்கத்திலுள்ள கைப்பிடியை முன்னும் பின்னுமாக அசைத்தால் தகர டப்பாவில் உள்ள மருந்துக் கலவை அல்லது யூரியாக் கலவை, கொழுவினல் ஏற்படும் பள்ளத்தில் விழும். கருவியினை ஒரு வரிசைவிட்டு ஒரு வரிசையில் இழுத்துச் செல்லுதல் வேண்டும்.


மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமான முறையிலும் உரமிடுவதற்கும் பயிர்ப் பாதுகாப்பு செய்வதற்கும் வாய்ப்பாகவும் மிக எளிமையான அமைப்பும், மிகவும் மலிவான விலையில் தயாரித்துக் கொள்ளுவதற்கும் ஏற்ற முறையில் அமைந்துள்ள இக்கருவி உழவர்களுக்கு மிகச் சிறந்த முறையில் பயன்படும் என்பது திண்ணம்.

ஆடுதுறையில் உள்ள வேளாண்மைப் பரிசோதனை நிலையத்தில் தயாரிக்கப்பட்ட இக்கருவி , அனைத்துத் தமிழக வேளாண் மக்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான விவரமான தகவல்களுக்குத் தங்கள் பகுதித் துணை வேளாண்மை இயக்குநரை அணுகுங்கள்!

## மனுப்படிவத்தில் புதிய முறை

மாநில அரசு வழங்கும் படிப்பு உதவித் தொகையைப் பெற மனுச்செய்யும் அச்சுப் படிவம் ஏழு பக்கங்களைக் கொண்டதாகவும் தேவையற்ற சிறு விவரங்கள் அடங்கிய தாகவும் இருந்ததை நன்கு பரிசீலித்து, தேவையற்ற விவரங்களை நீக்கியும் நல்லமுறையில் மாற்றியமைத்து, மாணவர்கள் எளிதில் நிரப்பக் கூடியதாகவும் நான்கு பக்கங்களுக்கு மேற்படாததாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

# கோவில்பட்டி பருத்தி, சிறுதானியப் பரிசோதனை நிலையச் செயல்முறையும், சாதனைகளும்




**கோ**வில்பட்டி பருத்தி, சிறு தானியப் பரிசோதனை நிலையம், கன்னியாகுமரி, காசி நெடுஞ் சாலையில் திருநெல்வேலிக்கும், மதுரைக்கும் இடையில் திரு நெல்வேலியிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ளது. இந்நிலையத்தின் மொத்தப் பரப்பளவு 68.84 ஹெக்டர்கள். இதில் 53.29 ஹெக்டர்கள் மானாவாரியாகவும், மீதி 15.55 ஹெக்டர்கள் தோட் டக்காலாகவும் உள்ளன. மொத்த பரப்பளவான 68.84 ஹெக்டர் களில், 7.54 ஹெக்டர்கள் செம் மண் பாங்கானவை. ஏனையவை கரிசல் நிலமாகும்.

இப்பகுதியில் ஆண்டு சராசரி மழையளவு 751. மி. மீட்டர். இவை 44 மழை நாட்களில் பெய் கிறது. இதில் ஐம்பது சதவீதத் திற்கும் அதிக அளவு மழை 23 மழை நாட்களில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்கிறது. மழையின் அளவு ஒரே சீராகவும், பரவலாகவும் இருப்பதில்லை. சில ஆண்டுகளில் ஒரே நாளில் 100 மி. மீட்டர் மழை பெய்ததும் உண்டு. இவ் வாறு பெய்வதால் கழனிகளில் உடைப்பும் பெரும் மண்ணரிப் பும் ஏற்படுகின்றன. பொதுவாக இப்பகுதியில் உறுதியற்ற மழையை நம்பியே வேளாண்மை அமைந்துள்ளது.

கோவில்பட்டியில் முதன் முதலில் 1901-ஆம் ஆண்டு வேளாண்மை மாதிரிப்பண்ணை யாக வேளாண்மை விளக்குநரின் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இது வேளாண்மை ஆராய்ச்சி நிலையமாக ஒரு வேளாண்மை உதவி ஆராய்ச்சி யாளரின் தலைமையில் இயங்கி வரலாயிற்று. 1948-ஆம் ஆண்டு அரசிதழ் பதவி பெற்ற ஒரு கண்காணிப்பாளரின்கீழ் இவ் வாராய்ச்சி நிலையம் செயல்படத் தொடங்கியது.

இப்பகுதியின் முக்கிய பணப் பயிராகிய பருத்தியில் அபிவிருத்தி காண்பதற்கும், மானாவாரி பகுதிக்கேற்ற புதிய உழவியல் கருவிகளையும் திருந்திய சாகுபடி முறைகளையும் கண்டுபிடிப்பதற் கான குறிக்கோளுடனே ஆரம்ப காலத்தில் இந்நிலையம் செயல் பட்டு வந்தது. இப்பகுதியில் மானாவாரி கரிசல் நிலங்களில் பருத்தியுடன், சிறுதானியங்கள் கலப்புப் பயிராகவும், சுழற் பயிராகவும் சாகுபடி செய்யப் படுகின்றன. இதைக் கருத்திற் கொண்டு, பிற்காலத்தில் முக் கிய சிறுதானியப் பயிர்களாகிய சோளம், கம்பு, ராகி பயிர் களிலும் அபிவிருத்தி ஆரம்பிக் கப்பட்டது.

தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் அவ்வப்போது சாகுபடிக்காகப் புதிய ரகங்கள் அளிப்பதற்கும், அவைகளில் அமோக விளைவு பெற விஞ்ஞான சாகுபடி உத்திகளைப் பரிந்துரைக் கும் நோக்குடன் இந்நிலையம் 1962-ஆம் ஆண்டு மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலைய மாக உயர்நிலை பெற்றது. முன்னரே செயல்பட்டு வந்த பயிர் இன அபிவிருத்திப் பிரி வோடு, உழவியல், வேளாண்மை



வேதியியல், பூச்சி இயல், நோய் இயல் பிரிவுகளும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 1975-ஆம் ஆண்டு முதல் இவ்வாராய்ச்சி நிலையம், பருத்தி, சிறுதானியங்கள் பரிசோதனை நிலையம் எனப்பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இந்நிலைய பயிர் நிபுணர் மாநில பருத்தி, சிறுதானியங்கள் நிபுணராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சோளப்பயிர் இன அபிவிருத்திக்காக 1970-ஆம் ஆண்டு முதல் தனியான ஒரு திட்டம் இயங்கி வருகிறது. இந்தப் பகுதியில் கம்புப் பயிர் பசுங்கதிர் நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, கம்பு சாகுபடி செய்யவே உழவர் பெருங்குடியினர் தயக்க முற்றனர். இந்த அவலநிலை நீங்க கம்புப் பயிரில் பசுங்கதிர் நோய் தாக்காத ரகங்கள் கண்டு பிடிப்பதற்காகத் தனித்திட்டம் ஒன்று 1977-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுகிறது.

எண்ணெய் வித்து உற்பத்தியில் தொடர்ந்து பற்றாக்குறையாக உள்ள நமது மாநிலத்தில், எண்ணெய் வித்து உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்தோடு குசும்பா ஆராய்ச்சித் திட்டம் ஒன்று 1960-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, கே. 1 என்ற புதிய குசும்பா ரகமொன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அதிகரித்து வரும் எண்ணெய்ப் பற்றாக் குறையை நீக்க சூரியகாந்தி ஒரு சிறந்த பயிராகும். இப்பயிர் எல்லா மண்பாங்கு, காலநிலைகளிலும் எளிதில் வளரும் இயல்பினது. ஆனால், இப்பயிரிலும் அதிக விளைவு தரவல்ல புதிய ரகங்கள் கண்டுபிடிப்பதற்கு 1971-ஆம் ஆண்டு சூரியகாந்தி ஆராய்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படுகிறது.

உழவர்களின் விளைநிலங்களிலுள்ள மண்ணின் வளத்தை அறுதியிட்டு அதற்கேற்ப இரசாயன உரபரிந்துரைகள் வழங்கும் நோக்குடன் அரசு மண் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று இவ்வாராய்ச்சி நிலையத்தில்தான் அமைந்துள்ளது. நடமாடும் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்றும் செயல்படுகிறது. பூச்சி மருந்துகளின் தன்மை, தரம் இவைகளைக் கண்டறிய பூச்சி மருந்துகள் தர ஆய்வுக்கூடம் ஒன்றும் இந்நிலையத்தில் உள்ளது.

வேளாண் காலநிலை ஆராய்ச்சியும் 1901-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. அகில இந்திய காலநிலைப் பதிவு நிலையங்களுள் ஒன்றாகச் செயல்படுகிறது. இங்குப் பதிவு செய்யப்படும் பல்வகை காலநிலை விவரங்கள் பூனாவிலுள்ள அகில இந்திய பருவநிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. பூனாவிலிருந்துதான் எல்லா மாநிலங்களுக்குமான பயிர்கள் பருவநிலை அறிக்கை வெளியிடப்படுகின்றது.

அகில இந்திய அளவில் மானாவாரி பருத்தி, சோளம், கம்பு, ராகி, குசும்பா, சூரியகாந்தி ஆகிய பயிர்களில் ஒருங்கிணைந்த பரிசோதனைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. அகில உலக வெப்ப மண்டலப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் ஒருங்கிணைந்த மையங்களுள் ஒன்றாகவும் இந்நிலையம் செயல்படுகிறது.

இந்தப் பரிசோதனை நிலையத்தில் பல பிரிவுகளிலும் 1901 முதல் 1976 முடிய தீவிரமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ள பயிர் ரகங்களாவன :

1. **பருத்தி:-** சி. 7, எ. 10, கே. 1, கே. 2, கே. 5, கே. 6, கே. 7, கே. 8, பாரதி (எம்.சி.யு. 6).

2. **சோளம்:-** கே. 1, (தீவனப் பயிர்), கே. 2 (தானியப்பயிர்) கே. 3 (தானியம், தீவனம்), கே. 4 கோவில்பட்டி நெட்டை (வீரியச் சோளம்).

3. **கம்பு:-** கே. 1.

4. **ராகி:-** கே. 1, கே. 2, சாரதா, பி.ஆர். 202.

5. **குதிரைவாலி:-** கே. 1.

6. **தினை :-** கே. 1.



7. குசும்பா:- கே. 1.

8. சூரியகாந்தி:- கே. 1.

9. மிளகாய்:- கே. 1.

**1977-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ரகங்கள்**

1. சோளம்:- கே. 5.

2. கம்பு:- கே. 2, கே.3.

3. சூரிய காந்தி:- கே. 2.

**1978-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய ரகங்கள்**

1. சோளம்:- கே. 6.

2. ராகி:- கே.5., கே.6.


3. பருத்தி:- கே. 9.

4. தினை:- கே 2.

5. குதிரைவாலி:- கே. 2.

6. பனிவரகு:- கே. 1.

7. மக்காச்சோளம்:- கே.1.



புதிய பலநோக்கு உழவியல் கருவி

பயிர் இன அபிவிருத்தியோடு, புதிய உழவியல் உத்திகள், பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள், உர பரிந்துரைகள் ஆகியவைகளும் உழவர்களின் நிலங்களில் ஹெக்டர் விளைவைக் கணிசமாக உயர்த்த உதவுகின்றன.

சூரியகாந்தி விதையின் முளைப்புத் திறனை அதிகரிக்க விதைகளை 12 மணி நேரம் நீரில் ஊறவைத்து விதைக்க வேண்டும் என ஆராய்ச்சி மூலம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பயிரில் அயல் மகரந்தச் சேர்க்கை விதை கட்டும் திறனை அதிகரிக்கின்றது. இதற்குப் பூக்களைக் கையினால் தடவுவதும், மக்காச்சோளம், கம்புப் பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதும் நல்ல பலனை நல்கி உள்ளது.

சோளச் சாகுபடியில் நாற்று பரவி பின்னர் நடவு செய்தால் குருத்துப்பூச்சி கட்டுப்படுத்தப் படுவதோடு, உயர் விளைவும் கிடைக்கிறது எனக் கண்டுபிடிக்கப்பட்டு உழவர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பிளானோபிக்ஸ் போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கிகளைத் தெளிப்பதன் மூலம் சூரியகாந்தியில் ஹெக்டர் விளைவை அதிகரிக்கலாம் என அறுதியிடப்பட்டுள்ளது. இப்பயிர் வளர்ச்சி ஊக்கி மானாவாரி பருத்தியில் பாங்காக விளைவை அதிகரிக்கின்றது எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மக்காச்சோளப் பயிரிலும், பருத்திப் பயிர்களிலும் ஊடு பயிர்கள் சாகுபடி செய்யின் சாகுபடி திறன் கூடுகின்றது என முடிவு செய்யப்பட்டு உள்ளது.

பூச்சி நோயியல் பிரிவுகளில் பல பயிர்களிலும் தோன்றும் பூச்சி நோய்களை நன்கு கட்டுப்படுத்தும் வழிமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பயிர்ப் பாதுகாப்பில் ஒருங்கிணைந்த அணுகு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. புதியதாக விற்பனைக்கு வரும் பூச்சி, பூஞ்சாண மருந்துகளின் திறன் கழனிகளில் பல பயிர்களில் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் உழவர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

உழவர் பெருங்குடியினரின் விளை நிலங்களில் பயிர்ப் பாதுகாப்பு உழவியல் முறைகளைக் கையாளும்போது அவ்வப்போது எழும் பிரச்சினைகளை உழவர்களே நேரில் இங்கு வந்து தெரிந்து தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் பயிர்க் காப்பகம் ஒன்று இந் நிலையத்தில் செயல்படுகிறது.

பல பயிர்களுக்கும் தேவையான இரசாயன உரத்தேவைகள் வேளாண்மை வேதி இயல் பிரிவில் ஆராயப்பட்டு உழவர் பெருங்குடியினருக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. பயிரியல் இன அபிவிருத்தியில் பல நிலைகளில் இருந்து தானியங்கள் மாதிரி எடுத்து, அவைகளில் அடங்கியுள்ள புரதம், அமினோ அமிலம் இவைகளின் அளவு, வேளாண்மை வேதியியல் பிரிவில் கண்டுபிடிக்கப்படுகின்றது. இஃது எதிர்காலத்தில் வெளியிடப்படும் உயர்விளைச்சல் ரகங்களில் அதிக உணவுச் சத்துக்கள் அடங்கியிருக்கத் துணை புரியும்.

**புதிய பலநோக்கு உழவியல் கருவி:**

1978-ஆம் ஆண்டு இந்நிலையத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த பல நோக்கு உழவியல் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய கருவி நிலம் தயாரிக்கவும், மேட்டுபாத்திகள் அமைக்கவும், உரமிடவும், வரிசையில் விதைக்கவும், விதைகளை மூடவும், பின் செய்நேர்த்தி செய்யவும் ஏற்றது. இக்கருவியின் வடிவமைப்பை மதுரையிலுள்ள தமிழக வேளாண் தொழில் கழகம் ஏற்று அதிக அளவு உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. இதன் விலை ரூ. 550 ஆகும்.

இப்பரிசோதனை நிலையம் தென் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் வேளாண்மைப் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்து வருகின்றது. இப்பகுதியில் தற்பொழுது சாகுபடியில் உள்ள ரகங்களை விடவும் மேலும் அதிக விளைவு அளிக்கும் புதிய புதிய ரகங்களை உருவாக்குவதிலும், புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதிலும் தீவிர ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தென் மாவட்டங்களிலுள்ள உழவர்களின் பொருளாதார வளர்ச்சியில் இக்கோவில்பட்டி பருத்தி, சிறுதானியப் பரிசோதனை நிலையத்திற்குக் கணிசமான பங்கு உண்டு.

# கோவை மாவட்டத்தில் வேளாண்மைத் திட்டங்கள்



**கோ**வை மாவட்டம் வேளாண்மை வளர்ச்சியிலும், அதன் தொடர்பாகத் தொழில் வளர்ச்சியும் சிறந்து விளங்கும் தமிழகத்திலே ஓர் உன்னதமான, மாவட்டம் என்றே கூறலாம். கோவை மாவட்டத்தில் 4 வேளாண்மைக் கோட்டமும் 41 ஊராட்சி ஒன்றியமும் உள்ளன. இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 15,54,916 எக்டர். அதில் நிகர சாகுபடி பரப்பு 6,70,223 எக்டர். இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுகின்றன:

1. கீழ் பவானி அணைக்கட்டுத் திட்டம்.
2. பரம்பிக் குளம் ஆளியாறு திட்டம்.
3. புதிய அமராவதித்திட்டம்.
4. பழைய அமராவதித்திட்டம்.
5. மேல் பவானித் திட்டம்.
6. காளிங்கராயன் வாய்க்கால்.
7. தடப்பள்ளி வாய்க்கால்
8. அரக்கன் கோட்டை வாய்க்கால்.

பாசனத் திட்டங்களின் மூலமும், கிணற்றுப் பாசனம் மற்றும் குளங்களின் பாசனத்தின் மூலம் 2,66,856 எக்டர் நீர் பாய்ச்சப்படுகிறது.

இம்மாவட்டத்தின் சராசரி மழை அளவு 694 மில்லி மீட்டர், நெல், பருத்தி, நிலக்கடலை, சோளம், ராகி, கம்பு, கரும்பு, வாழை, மஞ்சள், பயறு வகைகள், காய்கறி வகைகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. அநேகமாக எல்லாவித பயிர் வகைகளும், எல்லாக் காலங்களிலும் பயிரிடப்படுகின்றன. ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு பயிர் இருந்து கொண்டே இருக்கும். இம்மாவட்டத்தில் பருத்தி நூற்பு ஆலைகளும், பருத்தி விதை பிரிக்கும் ஆலைகளும் அதிகம் உள்ளன. இதனால் பருத்தி ஒரு முக்கிய பயிராகப் பயிரிடப்படுகிறது. இரண்டு கரும்பு ஆலைகள் உள்ளன. கரும்புப் பயிரும் கணிசமான விஸ்தீரணத்தில்பயிரிடப்படுகிறது. நிலக்கடலையும், புகையிலையும் முக்கியப் பயிர்களாக உள்ளன. மலைத் தோட்டப் பயிர்களும் உள்ளன. குளிர் கால காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. உணவுப் பயிர்களில் சிறு தானியப் பயிர்கள் சாகுபடி குறிப்பிடத் தக்க அளவு செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் முக்கியமாகப் பயிரிடப்படும் பயிர்களும், அதன் விஸ்தீரணமும் வருமாறு:

| | | எக்டர் |
|---|---|---|
| நெல் | | 113800 |
| சோளம் | ... | 186740 |
| கம்பு | ... | 47552 |
| மக்காச்சோளம் | ... | 19000 |
| ராகி | ... | 33784 |
| நிலக்கடலை | ... | 105000 |
| பருத்தி | ... | 50000 |
| கரும்பு | ... | 32000 |
| புகையிலை | ... | 13322 |
| தென்னை | ... | 12762 |

இம்மாவட்டத்தில் ஒரு போக நஞ்சைச் சாகுபடியும், இருபோக நஞ்சைச் சாகுபடியும், மூன்று போக நஞ்சைச் சாகுபடியும் செய்யப்படுகிறது. தோட்டக்கால் பூமியில் இரு போகமும், மூன்று போகமும் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களில் பெரும்பாலும் ஒருபோகச் சாகுபடி மட்டுமே செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களிலும் இருபோகச் சாகுபடியை ஊக்குவிக்க குறுகிய கால அமோக விளைச்சல் தரவல்ல சிறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை முதல் பயிராகவும், பயறுவகைகளையும், எள் போன்றவைகளை இரண்டாம் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. இருபோகச் சாகுபடி முறையை மானாவாரி நிலங்களில் செம்மையாகச் செயல்படுத்த இம்மாவட்டத்தில் பெரு விளக்கப் பண்ணைகள் அமைத்து அதன் மூலம் உழவர்களைப் பெருமளவு கடைப்பிடிக்க பரிந்துரை செய்யப்படுகிறது. 182 பெருவிளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் மானாவாரி சோளப்பயிராக ஐ. எஸ். 3541 ரகமும், உரமிடும் பழக்கமும், நெல் நாற்றங்காலில் டை அம்மோனியம் பாஸ்பேட் உரமிடுதலும், நிலக்கடலைப் பயிருக்கு நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் இடுதலும் பிரபலமடைந்து வருகிறது. 361 அனுசரணை ஆராய்ச்சி பாத்திகள் அமைக்கப்பட்டன. அனுசரணை ஆராய்ச்சி முடிவுகளின்படி புதிய ராகி, சோளம்,

மக்காச்சோளம், பயறு ரகங்கள் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1977-78ஆம் நிதியாண்டில் பல்வேறு வேளாண் துறைத் திட்டங்களைத் தீவிர முறையில் செயல்படுத்தியதின் மூலம் 2.98 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் 3.68 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியமும், 2.18 இலட்சம் டன் எண்ணெய் வித்து உற்பத்தியும், 36570 டன் பயறு வகை உற்பத்தியும் ஏற்பட்டுள்ளது. அமோக விளைச்சல் திட்டத்தின் மூலம் அமோக விளைச்சல் தரும் நெல் ரகங்களும், வீரிய சிறுதானிய வித்துக்களும் கீழ்க்கண்ட பரப்பில் 1977-78-ஆம் நிதியாண்டில் சாகுபடி செய்யப்பட்டன.

| | | எக்டர் |
|---|---|---|
| அமோக விளைச்சல் நெல் ரகங்கள் | ... | 108676 |
| வீரிய சோளம் | ... | 11804 |
| வீரிய கம்பு | ... | 26242 |
| வீரிய மக்காச் சோளம் | ... | 19000 |
| அமோக விளைச்சல் ராகி ரகங்கள் | ... | 27634 |



புரோடினியா புழு ஒழிப்பு இயக்கம்

662.2 டன் சான்று பெற்ற நெல் மற்றும் சிறு தானிய விதைகள் வேளாண்மைப் பண்டகசாலை மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**எண்ணெய வித்து உற்பத்தி:** இத்திட்டத்தைச் செயல்படுத்த மூன்று மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் கோபி, கோவை, பொள்ளாச்சியை மையமாகக் கொண்டு பணியாற்றுகின்றனர். வேளாண்மைப் பண்டகசாலை மூலம் 654 டன் பொறுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நுண்ணூட்டச்சத்து 45 டன் விநியோகிக்கப்பட்டுள்ளது.

**பயறு வகைத் திட்டங்கள்:**

இம்மாவட்டத்தில் பயறு வகை உற்பத்தியைப் பெருக்க தரமான பொறுக்கு வித்துக்கள் விநியோகம் செய்ய உழவர்களின் வயலிலும், அரசு விதைப் பண்ணையிலும் 236 எக்டரில் விதைப் பண்ணை அமைத்து விதை சேகரம் செய்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பயறு வகைப் பரப்பை அதிகரிக்கும் பொருட்டு சிறுதானியம், கரும்பு, நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விதை விநியோகத்துடன் அல்லாமல் பயறு வகைப் பயிர்களின் மகசூலை அதிகரிக்கும் பொருட்டு 18308 நுண்ணுயிர் ராசி கலந்து விதைத்த, பருவத்தே பயிர்ப் பாதுகாப்பு மேற்கொண்டு மகசூல் பெருக்கப்பட்டுள்ளது.

சிறு உழவர்களும் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய 26 மெட்ரிக் டன் விதைக்கு ஒரு கிலோவுக்கு ரூபாய் ஒன்று வீதம் மான்யத்துடன் வழங்கி, நுண்ணுயிர் ராசிகளை இலவசமாக விநியோகம் செய்து, 840 எக்டரில் எக்டருக்கு ரூபாய் 7-50 மான்யத்துடன் பயிர்ப் பாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டது. 5 விசைத் தெளிப்பான்கள் ரூ. 500 மான்யத்துடன். வழ்ங்கப்படுகிறது.

**உர விநியோகம்:** கோவை மாவட்டத்தில் சென்ற நிதியாண்டில் 43,055 டன் தழைச்சத்து உரமும், 16,337 மணிச் சத்து உரமும், 16,701 டன் சாம்பல் சத்து உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. உர விநியோகம் இம்மாவட்டத்தில் உள்ள 1,048 சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சில்லரை விற்பனை நிலையத்தில் தரமான உர விநியோகம் செய்ய உரக்கட்டுப்பாட்டுச் சட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**பயிர்ப் பாதுகாப்பு:**

இம்மாவட்டத்தில், நஞ்சை மற்றும் தோட்டக்கால் பூமியில் தொடர்ந்து பயிர்கள் சாகுபடி செய்யப்படுவதால் எல்லாப் பயிர்களையும் பூச்சி நோய்களின் தொல்லை அதிகமாக உள்ளது. பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த இம்மாவட்டத்தில் உள்ள 41 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் வேளாண்மைக் கிடங்குகளிலிருந்து ரூபாய் 90 இலட்சம் மதிப்புள்ள பூச்சி பூஞ்சாள மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையில் உள்ள 787 விசைத் தெளிப்பான்கள் வாடகைக்கு விட்டு 1 இலட்ச ரூபாய் வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது. தனியார் பூச்சி மருந்து 1,414 உரிமம் வழங்கப்பட்டு தரமான மருந்து விற்பனை

செய்ய பூச்சி மருந்து சட்டம் அமல் செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் தொடர்ந்து, தொல்லை தரும் பூச்சிகளான நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் பூச்சி, நெல்லில் புகையான் மற்றும் தண்டுப்புழுவைச் சீரிய முறையில் கட்டுப்படுத்த தரை வழி மருந்து தெளிக்கும் பணியில் நிலக்கடலையில் 1,735 எக்டரிலும், நெல்லில் புகையானைத் தடுக்க 4,500 எக்டரிலும், தண்டுப்புழுவைத் தடுக்க 5,375 எக்டரிலும் வேளாண் துறை மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

நிலக்கடலைப் பயிரில் சிவப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிக்கவும், நெல்லில் தண்டுப்புழுவைத் தடுக்க மருந்து அடிக்கும் செலவில் எக்டருக்கு ரூ. 7.50 மான்யமும் வழங்கப்பட்டுள்ளது.

**புரொடீனியா ஒழிப்பு முகாம்:** சென்ற நிதியாண்டில் பிப்ரவரி மார்ச் மாதத்தில் இம்மாவட்டத்தில் உடுமலைப் பகுதியில் திடீரென மர்மப் புழுவான புரொடீனியா புழுவால் பயிர் இனத்தையே அழிக்கும் அபாயம் தோன்றியது. இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இம்மாவட்டத்தில் பணிபுரியும் விரிவாக்கப் பணியாளர்களைச் சேகரம் செய்து புரொடீனியா ஒழிப்பு இயக்கம் நடத்தி 2,272 எக்டரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்து இப்புழுவை ஒழித்து உழவர்களைத் தொல்லையிலிருந்து பாதுகாக்கப்பட்டது. உழவர்களுக்குப் பூச்சி மருந்து விநியோகத்தில் ரூ. 48,392-ம் மான்யம் வழங்கப்பட்டது.

பயிர்களைப் பூச்சி நோய்த் தொல்லைகளிலிருந்து வருமுன் காக்க 32 இடங்களில் பூச்சி பூஞ்சாள இயல் சர்வே மேற்கொள்ளப்படுகிறது. விளக்குப் பொறி வைத்து வயல்களில் தாய் அந்துப்பூச்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சென்ற நிதியாண்டில் அக்டோபர், நவம்பரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பயிர்கள் பூச்சி நோய்களினின்று தடுக்க உழவர்களுக்கு 25 சதம் மான்யத்தில் பூச்சி பூஞ்சாள மருந்துகள் மான்ய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ரூபாய் 10.126 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

**அரசு விதைப் பண்ணைகள்:**

இம்மாவட்டத்தில் 6 அரசு விதைப் பண்ணைகளும், ஒரு மூல வித்து எண்ணெய் வித்து உற்பத்தி நிலையமும் செயல்படுகிறது. இம்மாவட்டத்திற்குத் தேவையான சான்றிதழ் வித்துக்களையும், வீரிய வித்துக்களையும் பெற அரசு விதைப்பண்ணையுடன் தனியார் வயல்களில் விதைப் பண்ணை அமைத்து விதை சேகரம் செய்யப்படுகிறது. நெல் 382 டன்னும், சிறுதானியம் 257 டன்னும் உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**தென்னை:** தரமான நாற்றுகள் தயாரித்து விநியோகிக்க இம்மாவட்டத்தில் இரண்டு நாற்றங்கால்கள் உள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1.5 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. இரண்டு ஒட்டுண்ணி தயாரிக்கும் நிலையமும் உள்ளன. இதன் மூலம் கருந்தலைப்புழு ஒழிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கரும்பு அபிவிருத்தித் திட்டம், ஒரு தனி மாவட்ட வேளாண்மை அலுவலரை தலைமையாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் மூலம் புதிய தொழில் நுணுக்கங்கள் அறிமுகப்படுத்துவதுடன், செயல் விளக்கங்கள் அமைத்து அதிக மகசூல் எடுக்கும் வழிகள் உழவர்களிடையே புகுத்தப்படுகின்றன. கரும்புக் கரணைகள் தயாரித்து வழங்குகின்றனர்.

பருத்தி சாகுபடிக்குக் கூடுதல் வேளாண்மை இயக்குநர் அவர்கள் கோவை தலைமையிடமாக அமைத்து மூன்று துணை வேளாண்மை இயக்குநர்கள் ஒத்துழைப்புடன் மான்ய திட்டங்களைச் செயல்படுத்துகின்றார். விசைத் தெளிப்பான்கள், பருத்தி விதைகள், நுண்ணூட்டச்சத்து வழங்குதல், விளக்கப் பாத்திகள் அமைத்தல் முதலியன செயல்படுத்தப்படுகின்றன. விளம்பரப் பணிக்காக வானொலி, செய்திப் பத்திரிகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. சுவரொட்டிகள் தயாரித்து விநியோகிக்கப்படுகின்றன. வெளியீடுகள் அச்சடித்து வழங்கப்படுகின்றன.

கிராமக் கூட்டங்கள் போட்டும், விளம்பர ஊர்தியின் மூலம் அறிவிப்புகள் செய்தும், படக்காட்சிகள், ஸ்லைடுகள் காட்சிகள் காண்பித்தும் புதிய சாகுபடி முறைகள் புகுத்தப்படுகின்றன.

எல்லா முயற்சிகளின் மூலமும், உழவர்களின் ஒத்துழைப்பின் மூலமும் சராசரி மகசூல் கீழ்க்காணும் அளவு அடையப்படுகிறது.


| | | டன் |
|---|---|---|
| அரிசி | ... | 1.050 |
| சோளம்-இறைவை | ... | 0.876 |
| மானாவாரி | ... | 0.218 |
| ராகி | ... | 0.741 |
| கம்பு | ... | 1.025 |
| மக்காச்சோளம் | ... | 1.200 |
| நிலக்கடலை-இறைவை | ... | 0.764 |
| மானாவாரி | ... | 0.598 |

**சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம்:**

இம்மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் குறு உழவர்களின் வாழ்க்கைத் தரம் உயர உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் மான்யமாக வழங்கப்படுகிறது. கருவிகள், விதைகள், நிருபணங்கள் மற்றும் கிடங்குகள் வசதிக்காக மான்யம் வழங்கப்படுகிறது.

நில வளம் அறிந்து உரமிட மண் பரிசோதனை நிலையமும், கிணற்றுநீர் தன்மை அறிந்து உபயோகிக்கவும், பரிசோதிக்க ஆண்டு ஒன்றுக்கு 30,000 மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. இது தவிர, விதை மாதிரிகளும், உர மாதிரிகளும், பூச்சி மருந்துகளும் பரிசோதிக்க சோதனைக் கூடங்களும் உள்ளன.





# தருமபுரி மாவட்டத்தில்

# சமூக நலத்துறையின் சாதனை!

**த**ருமபுரி மாவட்டத்தில் சமூக நலத்துறை, மகளிர் முன்னேற்றம், குழந்தைகளின் நல்வாழ்வு கருதி சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

**சிறப்புக் கவனம் :**

மகளிர்க்குச் சிறந்த உலகறிவு புகட்டுதல், மகளிரைச் சிறந்த குடும்பப் பெண்டிராக உருவாக்குதல், கிடைக்கின்ற வருவாயில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துக் குடும்பம் நடத்தக் கற்றுத்தரல், வருங்காலக் குடிமக்களாகிய குழந்தைகளைப் பேணிக் காத்தல், உடல் ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளித்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், சத்துணவுத் திட்டங்களைப் பரப்பி, அதனால் மகளிர் பயன்பெறுதல் போன்றவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

**அடித்தளம் :**

திட்டங்களைச் செயல்படுத்த மகளிர் மன்றங்கள் அடித்தளமாய் செயல்படுகின்றன. மகளிர் மன்றங்களின் மூலமே அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் 466 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் 146 மகளிர் மன்றங்கள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. மகளிர் மன்றங்களில் உள்ள அங்கத்தினர்கள் குறிப்பாக தையற்கலை, சிறப்புச் சத்துணவுத் திட்டம், கல்வி, தொழிற் பயிற்சி முதலியனவற்றில் பயிற்சி பெறுகின்றனர்.

**குழந்தைகள் நலம் பெற !**

குழந்தைகளின் நலன் காப்பதில் குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றும் குழந்தைகள் காப்பாளர் ஒருவரையும், ஓர் ஆயாவையும் கொண்டு பணி புரிகின்றது.

இம் மாவட்டத்தில், குழந்தைகள் காப்பகங்கள் 132 இயங்கி வருகின்றன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தளியில் மட்டும் 100 காப்பகங்கள் செயல்படுகின்றன. இதற்கென ஒரு சமூகநல அலுவலர் தளியினைத் தலைமையிடமாகக் கொண்டு பணி புரிந்து வருகிறார். சித்தேரி மலையில் குழந்தைகள் காப்பகங்கள் 6 இயங்கி வருகின்றன.

**நல்வாழ்வு வழங்கிட !**

மேலும், சமூக நலத்துறையின் மூலம் உடல் ஊனமுற்றோருக்கு 12 தையல் இயந்திரங்களும், 63 மூன்று சக்கர வண்டிகளும், 3 பெட்டிக் கடைகளும், 13 காது கேட்கும் கருவிகளும் வழங்கி நல்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 130 பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் இனமாக வழங்கப்பட்டுள்ளன. அரூர், போச்சம்பள்ளி, காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. மத்திய சமூக நல வாரியத்தின் மூலம் 225 பெண்களுக்கு ரூபாய் 6,30,000 செலவில் கறவை மாடுகள் வாங்கி வழங்கப் பெற்றுள்ளன. மேலும், 70 பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**சிறந்த பணிகள் :**

இம்மாவட்டத்தில் குழந்தைகளின் நலன் காத்திடச் சிறப்புச் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மதிய உணவு 132 மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. சிறப்புச் சத்துணவுத் திட்டம் 75 மையங்களில் அமல்படுத்தப்படுகின்றது.

மேலும், சமூக நலத்துறை, விதவைகளுக்கு மறுமணம் செய்வித்தல், அனாதைக் குழந்தைகளைக் கருணை இல்லங்களில் சேர்த்தல், சிறுசேமிப்பு வளர்ச்சி, குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்தல், பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல், முதியோர்களுக்குக் கல்வி கற்பித்தல் போன்ற சிறந்த பணிகளையும் செய்து வருகின்றது.

**திருமதி கே. விஜயலட்சுமி,**
**மாவட்ட சமூகநல அலுவலர்,**
**தருமபுரி.**



# தென்னைச்சாகுபடிக் குறிப்புகள்



### தென்னை ரகங்கள்

**குட்டை ரகம்:** சுமார் 8 மீட்டர் உயரம் வளரக்கூடியது. 3.5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 25 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

**நெட்டை ரகம்:** சுமார் 20 மீட்டர் உயரம் வளரக்கூடியது. 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 60-70 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். மேற்குக் கடற்கரை நெட்டை சிறந்த ரகம்.

**ஒட்டு வகை:** சுமார் 10-14 மீட்டர் உயரம் வளரக்கூடியது. நான்கு ஆண்டுகளில் பலனுக்கு வந்து 40 ஆண்டுகள்வரை காய்க்கக்கூடியது.

### பயிரிடும் காலம்:

தென்மேற்கு அல்லது வட கிழக்குப் பருவமழை ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நடவேண்டும். கோடை காலத்தில் நடவு செய்யக்கூடாது.

### ஏற்ற மண்வகை:

வடிகால் வசதியுடைய மணல் கலந்த வண்டல்மண், மணற்பாங்கான கடற்கரைப் பகுதிகள், கரிசல் மண் பகுதிகள் ஏற்றவை.

### நிலம் தயாரித்தல்:

நிலத்தை நன்கு உழுது சமப்படுத்தி நடவு செய்யும் ரகத்திற்கேற்றவாறு இடைவெளி விட்டு 3 அடி அகலம், 3 அடி நீளம் மற்றும் 3 அடி ஆழம் உள்ள குழிகள் வெட்ட வேண்டும்.

### இடைவெளி:

நெட்டை மற்றும் ஒட்டுவகை —25 அடிகள்
குட்டை வகை —18 அடிகள்
வரப்புகளில் வரிசையாய் நட —22 அடிகள்

### தேவையான நாற்றுகளின் எண்ணிக்கை:

| இடை வெளி | சதுர முறை | முக்கோண முறை |
|---|---|---|
| 18 அடி | 135 | 155 |
| 25 அடி | 70 | 80 |

### குழி தயார் செய்தல்:

தோண்டிய குழியை 1 மாத காலம் ஆறவிட்டு, பின்பு கழிவுகளை இட்டு எரிக்கவும். நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் எருவைக் குழியின் மேல் மண்ணுடன் கலந்து குழிகளை நிரப்ப வேண்டும். குழிக்கு 0.5 கிலோ உப்பும் சேர்த்து மண்ணுடன் கலக்க வேண்டும்.

### நடவு முறை:

தயார் செய்த குழிகளில் 2 அடி ஆழத்திற்கு மண்ணை எடுத்துவிட்டு, அதில் பி. எச். சி. 10 சதத்தூளைத் தூவி அதில் நாற்றுக்களை நடவேண்டும். காற்றில் நாற்றுக்கள் பாதிக்காதவாறு ஒரு குச்சியை நட்டு அத்துடன் நாற்றைச் சேர்த்துக்கட்ட வேண்டும்.



### உரம் இடுதல்

| வயது | தழை உரம் அல்லது கம்போஸ்ட் | யூரியா | சூப்பர் பாஸ்பேட் | மூரியேட்ஆப் பொட்டாஷ் |
|---|---|---|---|---|
| நட்ட 3வது மாதம் | ... | 100 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| ஒரு வயது | 20 கிலோ | 0.5 கிலோ | 0.5 கிலோ | 0.5 கிலோ |
| 2—வயது | 40 ,, | 0.5 ,, | 0.5 ,, | 0.5 ,, |
| 3—வயது | 50 ,, | 1.5 ,, | 1.5 ,, | 1.5 ,, |
| 4—வயது | 50 ,, | 2 ,, | 2 ,, | 2 ,, |
| 5—வயது | 50 ,, | 2.5 ,, | 2.5 ,, | 2.5 ,, |
| 6—வயதுக்கு மேல் | 50 ,, | 3 ,, | 3 ,, | 3 ,, |



**உரம் இடுதல் :**

உரங்களை முதல் இரண்டு ஆண்டுகளும் குழிகளிலேயே இடலாம். பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்குமுன் மரத்திலிருந்து 4 அடி தள்ளி வட்ட வடிவில் 1அடி ஆழக் குழி வெட்டி அதில் உரங்களை இட்டு மூட வேண்டும்.

**நீர்பாய்ச்சுதல் :**

மண்ணின் ஈரத்தை அனுசரித்து 10-15 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்ச வேண்டும்.

ஊடுபயிர் தென்னை நடவு செய்தது முதல் இரண்டு ஆண்டுகளுக்கு நிலக்கடலை, ராகி, சோளம், நெல், வாழை, மஞ்சள் போன்ற பயிர்களை ஊடுபயிர் செய்யலாம். ஊடுபயிருக்குத் தேவையான உரமிட வேண்டும்.

**இடை உழவு :** பருவமழைக் காலங்களில் ஆண்டிற்கு நான்கு முறை இடை உழவு செய்யவேண்டும். பசுந்தாளுரப் பயிர்களைச் சாகுபடி செய்து உழுதுவிட வேண்டும்.

## தென்னையைத் தாக்கும் பூச்சிகளும்—தடுப்புமுறையும்

**காண்டா மிருக வண்டு:** இவற்றைக் கட்டுப்படுத்த கூர்மையான இரும்புக் கொக்கியாலே துவாரங்களிலுள்ள வண்டுகளைக் குத்தி எடுத்துக் கொல்ல வேண்டும்.

பி.எச்.சி. 10 சதத் தூளையும் மணலையும் சம அளவில் கலந்து மரத்திற்கு 0.5 கிலோ வீதம் மட்டைகளுக்கிடையில்ஆண்டுக்கு மூன்று முறை இடவேண்டும்.

குப்பைக் குழிகளைக் கிளறிப் புழுக்களை அழிக்க வேண்டும். அத்துடன் பி. எச். சி. 10 சதத் தூளையும் இடவேண்டும்.

**சிவப்புக்கண் வண்டு:**

அதிகம் தாக்கப்பட்ட மரங்களை வெட்டி எரித்துவிட வேண்டும்.

ஒரு லிட்டர் நீரில் பைரக்கோன்-இ 10 மில்லி அல்லது 50 சத செவின் 20 கிராம், அல்லது 1 மில்லி நுவான் விட்டுக் கரைத்து தாக்கப்பட்ட பகுதிக்கு மேல் சிறுதுவாரம் செய்து மரத்திற்கு 1.5 லிட்டர் வீதம் புனல் மூலம் ஊற்ற வேண்டும்.

**கருத்தலைப்புழு:**

சிறிய மரங்களில் இப்புழுவைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீரில் 4 கிராம் டிடிடி 5 சதத்தூள், அல்லது 8 கிராம் பி.எச்.சி. 50 சதத்தூள் கலந்து ஓலைகளின் அடிப்பாகத்தில் தெளிக்க வேண்டும். வளர்ந்த மரங்களில் இப்புழுக்களைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை ஏவி அழிக்கலாம்.

## தென்னையைத் தாக்கும் நோய்களும் தடுப்புமுறைகளும்

**தஞ்சாவூர் வாடல்நோய்:**

நோய் தாக்கிய மரத்தின் தூரிலிருந்து 1 மீட்டர் உயரத்தில் இரும்பு ஆக்கர் கொண்டு 0.5 அடி ஆழத்திற்குத் துளை போட வேண்டும். ஆறு கிராம் அரியோ பைஞ்சின்-கால் மருந்தையும் 3 கிராம் மயில் துத்தத்தையும் 6 லிட்டர் நீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். இக்கரைசலில் 1 லிட்டரை குறுகிய வாயுள்ள பாட்டிலில் எடுத்து மரத்திலிட்ட துவாரத்தில் பொருத்திவிட வேண்டும். மீதமுள்ள மருந்தைக்கொண்டு அவர்கள் நனையும்படி கிளறி ஊற்ற வேண்டும். மறுநாளில் மருந்துப்பாட்டிலை எடுத்துவிட்டு சிமெண்டால் துவாரத்தை அடைத்து விட வேண்டும்.

**சாறு ஒழுகல் நோய்:**

நோயுள்ள பகுதிகளை உளியால் செதுக்கியெடுத்து பின் தீப்பந்தத்தால் நன்கு பொசுக்க வேண்டும். பின்னர் சூடான தாரைப் பூசி செதுக்கிய பாகத்தை சிமெண்ட்டால் அடைத்துவிட வேண்டும்.


**இலைக் கருகல் நோய்:**

இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் நீருக்கு 2.5 கிராம் பைட்டலான் அல்லது புளுகாப்பர் வீதம் கலந்து ஓலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

**அறுவடை:**

குளிர்காலங்களில் 45 நாட்கள் இடைவெளியிலும், கோடைக் காலங்களில் 60 நாட்களுக்கு ஒரு முறையும் காய்கள் வெட்டலாம். ஒருமுறையில் ஒரு மரத்திலிருந்து இரண்டு குலைகளுக்குமேல் அறுவடை செய்யக்கூடாது.

**திரு. கே. சந்திரகாந்தன்,**
**இரா. நேதாஜி சீதாராமன்,**
தகவல் தொடர்பு நிலையம்,
வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-





# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை

# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# கடன் நிவாரணம் அவசரச் சட்டம்



பலவீனமான தரப்பினரில் குறிப்பிட்ட வகையினரின் கடன் சுமையை முற்றிலுமாக ரத்து செய்து அல்லது கடன் சுமையைக் குறைத்து தமிழ்நாடு அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. அடகு வைக்கப்பட்ட பொருள்களை அடகுக் கடைக்காரர்கள் விற்கக்கூடாது என்ற தடை இந்த அவசரச் சட்டத்தின் கீழ் மேலும் 6 மாதம் நீடிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் விவசாயிகள் அல்லாதோர் பெற்றுள்ள கடன்களை வசூலிக்கக் கூடாது என்று தற்போதுள்ள கடன் நிவாரணச் சட்டங்களின் கீழ் உள்ள தடை 1978 ஜுலை 15-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இவ்வித நிலைமையில் நிரந்தர நிவாரணம் அளிக்கும் நடவடிக்கையாக இந்த அவசரச் சட்டம் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இந்த அவசரச் சட்டத்தின் விவரம் வருமாறு :**

(1) ஒவ்வொரு தடவையும் அளிக்கப்பட்ட கடன்களில் அசல் தொகை ரூ. 500-க்கு மேற்படாமல்இருந்தால் அவ்விதக் கடன்கள் அனைத்தும் பூராவாக திருப்பி செலுத்தப்பட்டுவிட்டதாக இந்த அவசரச் சட்டத்தின்படி கருதப்படும்.

2. ஒவ்வொரு தடவையிலும் அளிக்கப்பட்ட கடனில் அசல் ரூ. 500-லிருந்து ரூ. 5000க்குள்ளாக இருந்தால் அவ்விதக் கடன்கள் விஷயத்தில் அசலில் பாதியும், வட்டியில் பாதியும், திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதாகக் கருதப்படும்.

3. ஒவ்வொரு தடவையிலும் அளிக்கப்பட்ட கடனில் அசல் ரூ. 5,000லிருந்து ரூ. 10 ஆயிரத்துக்குள்ளாக இருந்தால் வட்டி பூராவும் திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டதாகக் கருதப்படும். அசல் பூராவும் திருப்பிச் செலுத்தப்பட்டாக வேண்டும்.

4. அனுபோக அடமான விஷயத்தில் கடன் கொடுத்தவர்கள் 10 ஆண்டு அனுபவித்திருந்தால் அந்த அடமானம் தீர்க்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும்.

**யார் யார் பலன் பெறுவர் :**

எனினும் இந்த அவசரச் சட்டத்தின் கீழ் சமூகத்தில் பலவீனமான தரப்பினரில் குறிப்பிட்ட வகையினர்தான் பலன் பெறுவர்.

அதாவது 1977 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த, 1978 மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுகளில், வருமான வரி, அல்லது விவசாய வருமான வரி அல்லது விற்பனை வரி விதிப்புக்கு உள்ளாகியவர்கள் இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதி உடையவர்கள் அல்லர்.

அதேபோல, 1978 மார்ச் 1ஆம் தேதிக்கு முந்தைய 4 அரை ஆண்டுகளில் ஒரு கட்டடத்தின் மீது அல்லது ரூ. 1200க்கு குறையாத வருடாந்தர வாடகை மதிப்புக் கொண்ட நிலத்தின்மீது உள்ளாட்சி நிறுவனம் விதித்த சொத்து வரியைச் செலுத்தியவர்களும் இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள்.

1978 மார்ச்சுக்கு முந்தைய 4 அரை ஆண்டுகளில் ரூபாய் 1200-க்கும் அதிகமான அரை பாண்டு வருமானத்துக்கு, தொழில் வரி செலுத்தியவர்களும் இதே போல இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதி உடையவர்கள் அல்லர்.

மேற்கூறிய வகைகளில் வராதவர்களே இந்த அவசரச் சட்டத்தின் கீழ் பலன் பெறத் தகுதி கொண்ட ''பலவீனமான தரப்பினர்'' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு விதவை, அல்லது பெற்றோரை இழந்த மைனர் குழந்தை, தகப்பனை இழந்த மைனர் குழந்தை ஆகியோருக்கு வர வேண்டிய கடன் அல்லது கடன்கள் சம்பந்தப்பட்ட அசல் உட்பட அவர்களுக்கு இருக்கிற சொத்தின் மதிப்பு இந்த அவசரச் சட்டம் பிரசுரிக்கப்பட்ட தேதியில் ரூ. 10 ஆயிரத்துக்கு மேற்படாமல் இருக்குமானால், அவர்களுக்கு வரவேண்டிய கடன் அல்லது கடன்களுக்கு இந்த அவசரச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

**அடகுப் பொருள் :**

அடகுக் கடைக்காரர்கள் தங்களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களை 1978 ஜுலை 15-ஆம் தேதி வரை விற்கக்கூடாது என்று இருந்து வந்துள்ள தடை, மேற்கொண்டு 6 மாத காலத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அடகு வைத்த அனைவரும் தாங்கள் அடகு வைத்த பொருட்களை மீட்க இந்த அவசரச் சட்டத்தின்கீழ் 1979 ஜனவரி 15ஆம் தேதிவரை மேற்கொண்டு கால அவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. அவர்கள் மேலே குறிப்பிட்ட காலத்துக்குள் தங்களது கடனை, தவணைகளில் செலுத்தி அடகுப் பொருட்களை மீட்கலாம்.

தறபோதுள்ள கடன் நிவாரணச் சட்டங்கள் விவசாயிகள், மற்றும் விவசாயிகள் அல்லாதவர்களின் கடன்களை 1978 ஜுலை 15ஆம் தேதி வரை வசூல் செய்யக்கூடாது என்று தடை விதித்திருந்தன.

அச்சட்டங்களின் கீழ் அளிக்கப்பட்ட நிவாரணம் தற்காலிகமானதாக இருந்ததால், பலவீனமான தரப்பினரில் குறிப்பிட்ட வகையினர் மீது சேர்ந்து வந்துள்ள கடன் சுமை காரணமாக அவர்களால் ஒரு நிம்மதியான வாழ்வு பெற முடியவில்லை. எனவே, கடன்களை ஒழித்து அல்லது தகுந்த அளவில் அவற்றைக் குறைத்து நிரந்தரமான நிவாரணமளிக்க முடிவு செய்து இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அரசு அறிவித்துள்ளது.

# எக்ரோமின் கண்கூடான பயனைத் தருகிறது...
# லாபம் 20 சதவீதத்திற்கு மேல் உயர்கிறது



**தாவர உணவுச் சத்துக்கள் சிலேடெட் வடிவில் அடங்கியிருப்பதனால் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.**

- எக்ரோமின் இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பாகும். ஈரப்படுத்தவும், பரப்பவும் உதவும் ஊக்கி, கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது.
- எக்ரோமின் தண்ணீரில் கரைகிறது. மற்ற எக்ரோ கெமிக்கல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் முக்கியமான ரசாயன உரங்களின் உபயோகிப்புத் தன்மையை உயர்த்துகிறது.
- எக்ரோமின் பயிர்களின் மகசூலையும், தரத்தையும் செம்மையாக்குகிறது.




**நிச்சயமான பயனைத் தருவதற்கென எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது**

நியூட்ரியன்டுகள் (ஊட்டச் சத்துக்கள்) படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதை சிலேஷன் உறுதி செய்கிறது ...




**நிரூபணம் இதோ:**

''நெல்... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது''

ஆண்டிப்பாளையம்
தமிழ்நாடு

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்
**ஏரிஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை.லிட்.**
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

Granc.53 TM



# தொழுநோய் சில உண்மைகள்

**தொ**ழுநோய் என்றவுடன் மனத்திலே ஓர் அச்சமும் அருவருப்பும் அளிக்கக்கூடிய ஒரு மானிட உருவம்தான் உருவாகிறது. ஏன்? வாழையடி வாழையாகத் தொழுநோய் என்ருல், அங்கத்தைக் குறைத்துச் செயலிழக்கச் செய்து துன்புறுத்தும் நோய் என்ற பயமிக்க எண்ணம் மனிதனின் உள்ளத்தில் வேரூன்றியுள்ளது. அத்தகைய நோயுடையோரைப் பார்த்தாலோ தொட்டாலோ நமக்கும் வந்துவிடுமோ என்ற ஐயமும் நிலைத்து இருக்கிறது.

ஆனுல் இந்நோயினைப் பற்றிய உண்மைகளை அறிந்தால், நாம் எவ்வளவு கோழைகளாக இருக்கிறோம் என்பது தெரியும். அந்நோய்க்கிருமிகளும் மற்றைய நோய்க்கிருமிகளும் ஆண்டவனுல் படைக்கப்பட்டு ஏனைய உயிரினங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வழியில் உருவாக்கப்பட்டது. மனிதன் தனது அறிவினுல் அநேகமாக நோய் அளிக்கக்கூடிய கிருமிகளின் வளர்ப்பு இரகசியங்களை நன்கு அறிந்து அவைகளை அழிப்பதற்கும் வழிகோலியுள்ளான் நோயினை வராமல் தடுக்கும் முயற்சியிலும் வெற்றி பெற்றுள்ளான். ஆனுல், தொழுநோய்க் கிருமி கண்டுபிடிக்கப்பட்டு 105 ஆண்டுகள் கடந்தும் மனிதனுல் இந்நோய்க் கிருமிகளைப்பற்றிப் பூரணமாக இன்னும் அறிந்து கொள்ள இயலவில்லை.

இந்நோய்க்கிருமியை இதுவரையில் செயற்கை முறையில் வளர்ச்சி செய்ய முடியவில்லை. இது எவ்வாறு மற்றவர்களுக்குப் பரவுகிறது, என்று உறுதியாகக் கூற இயலவில்லை. இந்நோய்க் கிருமிகளைச் சிறிது நாளில் கொன்றிட மருந்துகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆதலின், இந்நோய் ஆண்டவனின் சாபம் என்று கருதாமல், மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அளிக்கப்பட்டுள்ள, ஆண்டவனின் அறைகூவல் என்று கருதிடல் வேண்டும்.

இந்நோய்க் கிருமிகள் காசநோய்க் கிருமியின் குடும்பத்தைச் சார்ந்தன. இந்நோய்க் கிருமிக்கும் மற்றைய நோய்க் கிருமிகளுக்கில்லாத சில தனிப்பட்ட அம்சங்கள் உண்டு. அவையாவன:

1. மற்றைய கிருமிகளெல்லாம் இனப்பெருக்கு குறுகிய காலத்தில் செய்யும். அதாவது காலரா கிருமி $\frac{1}{2}$ மணிக்கு ஒரு முறையும், காசநோய்க் கிருமி 2 மணிக்கு ஒரு முறையும் செய்யும். ஆனுல், தொழுநோய்க் கிருமியோ 14லிருந்து 21 நாட்களுக்கு இனவிருத்தி செய்யும்.

2. மற்றைய கிருமிகளெல்லாம் தொடர்ந்து இனவிருத்தி செய்து கொண்டே இருக்கும். மருந்தின் வீரியத்தாலோ அல்லது உடலில் உருவாக்கப்பட்ட அதி தீவிரத் தன்மையால் இனவிருத்தி தடுத்து நிறுத்தப்படுமேயன்றி வேறு எக்காரணமின்றியும் நிற்காது. ஆனுல், தொழுநோய்க் கிருமியோ செங்கிஸ்கானின் போர்த் திறனை அனுசரித்து சில சமயங்களில் தொடர்ந்து இனவிருத்தி செய்யும். பிற்பாடு இனவிருத்தி செய்யாமல் இருக்கும். அதனுல், அதன் எண்ணிக்கை மெள்ள மெள்ளதான் வளரும். நோயினை உருவாக்கிட தேவையான குறைந்தபட்ச கிருமிகள் வளருவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கப்படுகின்றது. அதனுல் நோய் அறிகுறி காண்பதற்கு நாட்கள் பல ஆகும்.

3. முன்பு கூறியபடி இந்நோய்க் கிருமியைச் செயற்கை முறையில் வளர்த்திடல் முடியாது.

4. இந்நோய்க்கிருமி மனிதனை மட்டுமேயல்லாது மற்றைய எந்தப் பிராணியையும் அணுகுவதில்லை.

5. மனிதனின் உடலில் இருக்கும் நரம்புகளைச் சுற்றி அதனைக் காப்பாற்றிட ஒருவிதமான ஜவ்வு இருக்கிறது. அதனை ஊடுருவிச் செல்ல தொழுநோய்க் கிருமியைத் தவிர மற்றைய எந்தக் கிருமியாலும் முடியாது.

6. மற்றைய நோயினைப் போல இந்நோய் தொடக்கத்தில் உடலிலே எந்தவிதமான உபாதையோ நமைச்சலோ வலியோ ஏற்படுவதில்லை. ஆதலின் இந்நோயினைப் பற்றி யாரும் தொடக்கத்தில் அக்கறை கொள்வதில்லை. இந்நோயின் அறிகுறி இருக்கிறது என்று கற்று அறிந்தவர்கள் கூறினுலும் எள்ளி நகையாடுவார்கள்.

7. இந்நோய்க் கிருமி ஏராளமாக உள்ள நோயாளியின் உடலிலிருந்து ஒரு பகுதியை நோயற்றவர்களின் தோலிற்குள் தைத்து நோய்வருகிறதா என்ற பரிசிலனையில் இதுவரையில் தோல்வியைத்

டாக்டர் சி. எஸ்.
கங்காதர் சர்மா
துணை இயக்குனர் (தொழுநோய்),
நல்வாழ்வுத்துறை.

தான் விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள்.

ஆதலின், இந்நோயினைப்பற்றி நன்கு அறிந்து கொள்வது நன்று. இந்நோய்க்கிருமி எப்படி எவ்வாறு ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது என்று ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. நீண்ட காலம் தொற்று உள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டால்தான்



வரும் என்று முந்தைய கொள்கை இன்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. நோயுள்ளோருடன் நீண்ட நாட்கள் நெருங்கி பழகி தொழுநோய் பணியில் ஈடுபட்டிருப்பினும் அவர்களில் இதுவரையில் யாருக்கும் நோய் வந்ததாக ஆதாரம் இல்லை.

நோயுள்ளோர் மூக்கிலிருந்து வெளியேறும் மூக்குச் சளியுடனும் வெளியே காற்றினாலும் பரவலாம் என்ற விஞ்ஞான உலகம் கண்டறிந்தும் நோய்க் கிருமி உடலில் உள்ளே புகுந்தாலும் இந்நோய் உடலில் உருவாகும் எதிர்ப்புச் சக்தியால் வராமல் தடுத்து நிறுத்தப்படுகின்றது. அப்படியே ஆரம்ப அறிகுறி கண்டாலும் எதிர்ப்பு அணுக்கள் உருவாக்கப்படுவதால் நோயின் அறிகுறி எந்தவித்மான மருந்து உட்கொள்ளாமலும், இயற்கையாகவே மறைகிறது. அல்லது மருந்தின் சேர்க்கையாலும் சீக்கிரம் குணமடைகிறது. ஆதலால் நோய்க் கிருமி உள்ளே புகுந்தாலும் நோயின் அறிகுறி கண்டவர்கள் சமுதாயத்தில் அதிகமாய் இருந்தாலும் நோயினால் அவதியுறுபவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள்.

நோயின் அறிகுறிகள் கண்டவர்கள் அவ்வளவு பேரும் அங்கக் குறைவால் பீடிக்கப்படுவதில்லை. அங்கக்குறைவினால் அவதியுறுபவர் மிகக் குறைவே.

அங்கக் குறைகள் ஏற்படுவதற்கு முன்பாகக் கண்டு அறியும் அறிகுறிகள்:

1. உடலிலே நிமாற்றுமை (காணின்) வெளிர்ந்த அல்லது சிவந்த படை காணுதல். அதில் உணர்ச்சி இழந்திருத்தல். வேர்வை அற்றிருத்தல்.

2. நரம்புகள் பாதிக்கப்படும் போது கை கால்களில் வலியோ அல்லது உணர்ச்சியிழத்தலோ ஏற்படும்.

3. விரல்கள் வலிவிழந்து வளைவுகளும் ஏற்படும்.

4. கால்கள் திடீர் எனத் துவண்டு விழலாம்.

5. கால்களில் ஆறாத புண்கள் கண்டிடலாம்.

6. உடலிலே எண்ணெய் தடவியதுபோல் ஒரு மினுமினுப்போ அல்லது சிவந்த தடித்த படையோ காணலாம்.

நோயைத் தொடக்கத்தில் கண்டு அறிந்து மருந்து உட்கொள்ளத் தொடங்கினால் நோய் முற்றிலும் குணமடையும். நோயினைக் குணப்படுத்த விஞ்ஞான உலகம் புதிய மருந்தினைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தாலும் சல்போன் என்ற மருந்து சிறந்த முறையில் பலன் அளித்து வருகின்றது.

இந்நோயை தொடக்கத்தில் கண்டு அறிந்து விடாமுயற்சியுடன் 3 அல்லது 5 ஆண்டுக்குக் குறையாமல் மருந்து உட்கொண்டு வந்தால் இந்நோய் அறவே மறைந்துவிடும்.

இன்று எதிர்ப்பு அணுக்களை உருவாக்கி நோயினைக் கட்டுப்படுத்தி நிறுத்திட தடுப்பு மருந்து வாக்சின் ( Vaccine ) இல்லாமையால் நோயுள்ளோரைக் கண்டு அறிந்து அவர்கள் ஒழுங்கு முறையாக மருந்து உட்கொள்ளத் தொடங்கினால் அவர்களது உடலில் இருக்கும் கிருமிகள் கொல்லப்பட்டு அவர்களால் மற்றவர்களுக்கு நோய் வராமல் காப்பாற்றிட முடியும்.

ஆதலின், இத்தொழுநோய் திட்டத்தில் கற்றறிந்த பணியாளர்கள்சமுதாயத்தில் நோயுள்ளோரைக் கண்டு அறிய கணக்கு எடுக்கும்போது அவர்களை உதாசீனப்படுத்தி விரட்டி அடிக்காமல் அவர்களுடன் ஒத்துழைத்து நோயுள்ளோரைத் தெரிந்து கொண்டு அவர்களை ஒழுங்கு முறையில் மருந்து உட்கொள்ள ஊக்குவிக்க வேண்டியது இன்றைய சமுதாயத்தில் முதற்பணியாகும்.

நோயுள்ளோரைச் சமூகத்திலிருந்து அகற்ற முயற்சித்தாலோ அவர்களைப் புண்படும்படி செய்தாலோ, நோயுள்ளவர்கள் பரிசீலனை செய்து கொள்ள வரமாட்டார்கள். நோயினை மறைக்கத் தொடங்குவார்கள். அவர்கள் மறைப்பதால் சமுதாயத்தில் நோய் பரவிக் கொண்டேதான் இருக்கும்.



ஆதலின் தொழுநோய்த் திட்டம் வெற்றி பெற, பொது மக்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டு இதில் பணிபுரியும் ஊழியர்களுடன் ஒத்துழைத்து நோயுள்ளவர்களை மருந்து உட்கொள்ள ஊக்குவித்தால் இந்நோயினை நமது நாட்டிலிருந்து சீக்கிரமே விரட்டிடலாம்.

முன்னேற்றமடைந்த, நாகரிகம் அடைந்த நாட்டிலெல்லாம் இந்நோயினை விரட்டிவிட்டார்கள். நமது நாட்டையும் நாகரிகம் அடைந்த நாடு என்று கூற வேண்டுமாயின் இத்திட்டத்தை வெற்றிகாணும் முயற்சியில் ஈடுபடுத்தல் வேண்டும்.

இந்நோய்க்கு மருந்து எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும் இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசும் தனியாரும் நடத்தும் கட்டுப்பாட்டு நிலையங்களிலும் இலவசமாகக் கிடைக்கும்.



# பெருந்தலைவர் காமராஜ் பிறந்த நாள் விழா

முதன் முதலில் நடக்கும் எதுவுமே வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதுண்டு. அந்த வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 76-வது பிறந்தநாள் விழாவினைத் தமிழக அரசு முதன்முதலாகக் கொண்டாடுவது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதாகும்.

1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்த நாளன்று சென்னை, தியாகராயநகர், 8, திருமலைப் பிள்ளை சாலையில் **காமராஜ் நினைவு இல்லத்** திறப்பு விழா மாலையில் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

**பொருட்காட்சி :**

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்ந்த இந்த இல்லத்தை, தமிழக அரசு ரூ. 3 இலட்சம் கொடுத்து வாங்கி நாட்டுடைமையாக்கியிருக்கிறது.

இந்த இல்லத்தில் ஒரு பொருட்காட்சியை அமைத்து திரு காமராஜ் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய பல்வேறு பொருள்கள், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுப் புகழ்பெற்ற—பல வரலாறுகள் உருவாகக் களமாகத் திகழ்ந்த அந்த இல்லத்தினுள் நுழைகிறோம், நினைவுகள் அசைபோட!

திரு. காமராஜ் அவர்கள் படித்த ஏராளமான நூல்களைப் பார்க்கிறோம்.

கலைக்களஞ்சியங்கள், திருக்குறள், திருவாசகம் முதலான இலக்கிய நூல்களும், புராண நூல்களும், ஆங்கில நூல்களும் காணப்படுகின்றன. இவற்றுள் தேர்தல் முடிவுகள் அடங்கிய 1971 மார்ச் திங்கள் 'தமிழரசு' இதழொன்றும் உள்ளது.

ஒரு அலமாரியில் திரு. காமராஜ் அவர்களின் 'சோதிடக் குறிப்புகள்' காணப்படுகின்றன.

**டெல்லியில் இருந்த போது....**

திரு காமராஜ் அவர்கள் டெல்லியில் இருந்தபோது பயன்படுத்திய பொருள்கள் ஒரு மேசையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

பீங்கான் தட்டுகள், பிளாஸ்க், குக்கர், பாட்டரி, கண்ணாடித் தம்ளர்கள், டூத் பிரஷ், ஷேவிங் செட், சோப்புப்பெட்டி, காலிங் பெல், கத்தரி ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டே செல்கிறோம். திரு காமராஜ் அவர்கட்கு அமெரிக்க அரசின் அழைப்பும்—அவரது பதிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு காமராஜ் அவர்கள், டெல்லியில் இருக்கின்றபோது அமருகின்ற சோபாவும் இங்கே உள்ளது.

**புகைப்படக் காட்சி :**

அடுத்து, அரிய அழகிய புகைப்படக் காட்சியைப் பார்க்கிறோம்.

அன்னையுடன் காமராஜ், ஐந்து வயதில் காமராஜ் புகைப்படங்கள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன.

1935-ஆம் ஆண்டு நடந்த அரசியல் மாநாட்டில், கவிக்குயில் சரோஜினி நாயுடு, தீரர் சத்தியமூர்த்தி ஆகியோரோடும், 1946-ல் காந்தியடிகளுடன் ஆவடி ரயில் நிலையத்திலும் உள்ள காமராஜர் அவர்களின் திருவுருவப் படங்களைப் பார்த்து மகிழ்கிறோம்.

புகைப்படக் காட்சியில் முதல்வராகப் பதவியேற்கும் காமராஜ் அவர்களையும், 1954-ல் அமைக்கப்பட்ட திரு காமராஜ் அவர்களின் முதல் அமைச்சரவையையும் பார்த்துப் பரவசமடைகிறோம்.

தந்தை பெரியாருடன், பேரறிஞர் அண்ணாவுடன், தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர்.

அவர்களுடன், பத்திரிகையாளர்களுடன் பெருந்தலைவரைப் பார்க்கிறோம்.

*1965*-ல் திரு. காமராஜ் அவர்கள் ரஷ்ய நாட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கு எடுக்கப்பட்ட புகைப்படங்களும், அங்கு அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள்களும், பொன்னாடைகளும், கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன.

**கடிதங்கள்-கணக்குகள்!**

பொருட்காட்சி இதோடு முடியவில்லை.

*1933*-ல் திரு காமராஜர் அவர்கள் தம் கைப்பட எழுதிய கடிதங்கள் பல இங்கு வைக்கப்பட்டுள்ளன. சுப்பிரமணிய சிவம், வ. வே. சு. ஐயர், திரு. வி. க. பற்றிய அவரது குறிப்புகளும் நம்மைக் கவர்கின்றன.

திரு காமராஜர் அவர்கள் உணவு அருந்தும் மேசை, தட்டு, தம்ளர் முதலானவற்றைப் பார்க்கிறோம். அவர் பயன்படுத்திய வெண் கதராடைகள் ஒரு பக்கம் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம்.

*1923* ஆம் ஆண்டில் நடந்த சாத்தூர் அரசியல் மாநாட்டுக் கணக்குகளைத் திரு காமராஜர் அவர்களே தம் கைப்பட எழுதி வைத்திருந்ததை இங்கே பார்க்கலாம்.

**அது என்ன பெட்டி?**

அதோ, ஓர் கண்ணாடிப் பேழையில், ஒரு பெட்டி திறந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது, திரு காமராஜ் அவர்கள் வெளியூர் பயணம் செல்லும் போது பயன்படுத்தி வந்த பெட்டி என்று தெரிந்து கொள்கிறோம்.

திரு காமராஜ் அவர்களின் படுக்கையையும், அவர் படிக்கும் அறையையும் பார்க்கிறோம்.

இவை மட்டுமா? அவருக்கு அன்புடன் வெள்ளிப் பேழையில் வைத்து வழங்கப்பட்ட ஏராளமான வாழ்த்து மடல்கள், அன்பளிப்புகள், அவர் பயன்படுத்திய காலணிகள், கைத்தடி ஆகியவையும் பொருட்காட்சியில் உள்ளன.

**விழாக்கோலம்!**

வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வனப்புடைய மேடை! வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காமராஜ் நினைவு இல்லம்! சாலை இருமருங்கும் நிறைந்து வழிந்த மக்கள் கூட்டம்! மேடையில் காமராஜ் அவர்களின் அருமைத் தங்கையார் **திருமதி நாகம்மாள் அவர்கள்** அமர்ந்திருக்கிறார். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். விழா துவங்குகிறது.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மறைந்தும் மறையாமலும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிற பெருந்தலைவருக்கு இன்று நாம் விழா எடுக்கிறோம். இந்திய வரலாற்றில் பல குறிப்பிடத்தக்க சம்பவங்களை உருவாக்கக் காரணமாக இருந்த இந்த இல்லம் இன்று அரசுடைமையாக்கப்படுகிறது.



**முதன் முறையாக சிறை சென்று திரும்பியபோது**

**சிறந்த எடுத்துக்காட்டு!**

"பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே, அல்லது குடும்பப் பெருமை உள்ளவர்கள் மட்டுமே அரசியலில் நுழைய





முடியும் என்றிருந்த நிலையினை மாற்றிக் காட்டியவர் காமராஜர். பட்டம் பெருதவர்களும், ஏழைகளாய்ப் பிறந்தவர்களும் உண்மையாகவும் சுயநலமின்றியும் உழைத்தால் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டும் அவரே.

''நாட்டுக்கு உழைத்த உத்தமர்களின் பிறந்தநாள் அல்லது நினைவு நாட்களைக் கொண்டாடுவது என்று தமிழக அரசு கொள்கை பூர்வமாக முடிவெடுத்தது. அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா, பாரதி, நேரு, காந்தி, முத்துராமலிங்கத் தேவர், வள்ளுவர், காயிதேமில்லத், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு விழாக்களை எடுத்து வருகிறது.

''பெருந்தலைவர் காமராஜர் வாழ்ந்த இல்லத்தை விலைக்கு வாங்கி தேசியச் சொத்தாக மாற்றியிருக்கிறோம். ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக முதல்வராக இருந்தாலும் தனக்கென சொந்த இல்லம் இல்லாமல் வாழ்ந்த தலைவர் காமராஜர்!''

**பண்புத் தலைவர் !**

**கேரள மாநில ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வெங்கடாசலம்** கிளென்றால், அதற்குக் காரணம் காமராஜர் வகுத்த கல்வித் திட்டம்தான். அறிவுக்கண்ணைத் திறந்தவர் அவர். அவர் தனக்கென வாழாதவர். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்; இந்திய ஒற்றுமைக்கு இறுதி மூச்சு வரை பணியாற்றியவர்.''

**கர்ம வீரர் :**

திரு காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து **தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்** பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''காமராஜருடன் இருபது ஆண்டுக் காலம் தொடர்பு கொண்டிருந்தவன் நான். சாதி, ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு, அரிசன முன்னேற்றம், மது ஒழிப்பு ஆகிய இலட்சியங்களை உயிர்க் கொள்கைகளாகக் கொண்டு செயல்பட்ட கர்மவீரர் காமராஜர்.

''அதிகாரிகளுடன் நட்புறவுடன் வாழ்ந்த காமராஜர்-ஏழை எளியவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சரியான முடிவை உரிய நேரத்தில் எடுக்கும் திறன்படைத்த ஆற்றலாளர். சுருங்கப் பேசி நிரம்பக் காரியங்களைச் செய்தவர்.


முன்னுதாரணமாகத் தமிழகம் விளங்குகிறது. காமராஜர் வழியை-அரசியல் நெறியை-இன்று தமிழக அரசு பின்பற்றுகிறது. ஊழலை ஒழிப்பதிலும், கிராமப்புற முன்னேற்றத்திலும் எதிர்ப்பைச் சமாளித்து தமிழக அரசு வீறுநடை போடுகிறது.''

**டெல்லியில் காமராஜர் சிலை !**

பொருட்காட்சியைத் திறந்து வைத்து **இந்திய அரசு மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு பா. இராமச்சந்திரன் அவர்கள்** பேசுகையில், ''இந்திய நாட்டின் பெருமையை உயர்த்திய மாபெரும் தலைவர் காமராஜர்'' என்ற அவர், ''காமராஜர் வீட்டை நினைவு இல்லமாக மாற்றியதற்குத் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறேன். இந்தியத் தலைநகரிலே விரைவில் அவருக்கு ஒரு சிலையை வைக்க இருக்கிறோம். அந்தப் பகுதியிலே உள்ள அந்த வீதிக்குக் காமராஜர் பெயரிடக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்'' என்றும் தெரிவித்தார்.

**வழிகாட்டி !**

**தமிழக மேலவைத் தலைவர் மாண்புமிகு திரு ம. பொ. சிவ**



**ஞானம் அவர்கள்** சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகையில், தஞ்சையில் ராஜராஜன் எடுத்த கோயில் எவ்வளவு சிறப்பானதோ அதைப்போல தியாகராய நகரிலே தேசபக்தருக்கு எடுத்த இந்தக் கோயிலும் சிறப்பு வாய்ந்தது'' என்ற அவர், ''காமராஜர் அடக்கத்துடன் வாழ்ந்த ஒரு பெருந்தலைவர். ஒழுக்கத்துக்கு-அடக்கத்துக்கு-எளிமைக்கு அவர் வழிகாட்டி'' என்றும் குறிப்பிட்டார்.

**அவர்கள்,** விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''காமராஜ் அவர்கள் நம்முடைய அன்புத் தலைவர்; பாசத் தலைவர்; பண்புத் தலைவர். அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்வதில் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. இன்று கிராமத்திலே படித்தவர்கள் நிறையபேர் இருக்கிருர்

''காமராஜரின் நேர்மை, எளிமை, நெறி தவரு வாழ்க்கை ஆகியவற்றைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்கு எழுப்பும் நினைவுச் சின்னம். 9 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்து நேர்மை, நாணயத்துக்கு உதாரண புருஷராக விளங்கினர்.

''ஏழ்மை, வறுமை, அறியாமை ஆகியவற்றை அகற்றி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பேசினார்கள்.

**திரு அப்துல் வகாப் எம்.எல்.சி. அவர்கள்** பேசுகையில், ''காமராஜர் சிறந்த செயல்வீரர். மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மல். அவர் தலைவருக்கெல்லாம் தலைவர் வைரத்திலே ஜொலிக்கும் வைரமாக விளங்கியவர்'' என்றார்.

**திரு. பி. மாணிக்கம் எம்.எல்.சி. அவர்கள்** பேசுகையில், ''அவரது வாழ்வில் பல்வேறு படிப்பினைகள் உள்ளன. அவற்றையெல்லாம் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளும் வகையில் இந்த விழா அமைந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

**கல்விக் கண் திறந்தவர்!**

**திரு. திருவாரூர் தங்கராசு அவர்கள்** பேசுகையில், 'கல்விக் கண்ணைத் திறந்தவர் காமராஜ், காமராஜர் என்றால், 'செயல் வீரர்' என்று பொருள்' என்றார்.

**திரு கருப்பையா மூப்பனார், எம். பி. அவர்கள்** பேசுகையில், ''பெருந்தலைவருக்கு நினைவு இல்லம் அமைத்தது தமிழக முதல்வரின் உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகிறது. எனவே, தமிழக அரசையும், முதல்வரையும் மனதாரப் பாராட்டுகிறேன்' என்றார்.

**திரு பி. இராமமூர்த்தி, எம். பி. அவர்கள்** பேசுகையில், 'கருத்து வேறுபாடு நிலவிய போதிலும், எதிரி எனக் கருதாமல் எதிரியின் கருத்தையும் ஏற்றுச் செயல்பட்டவர் காமராஜ்'' என்றார்.

**காலக் கண்ணாடி!**

**திரு ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., அவர்கள்** பேசுகையில், ''ஏழைகளின் இதயங்களில் வாழ்ந்தவர், வாழ்பவர் காமராஜர். இந்த நினைவாலயம் வருங்காலத்தில் புனித யாத்திரை ஸ்தலமாக விளங்கும். காமராஜர் அரசியல்வாதிகளுக்கு எல்லாம் அகராதி போன்றவர்; வருங்கால மாணவர்களுக்கோ அவர் காலக் கண்ணாடி'' என்றார்.

**இலக்கியமாக வாழ்ந்தவர்!**

**முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள்** பேசுகையில், ''எளிய தொண்டனாகப் பணியாற்றியவர். பதவிக்கு ஆசைப்படாதவர்; பதவி



**ஐந்து வயதில் காமராஜர்**

அவரைத் தேடிவந்தது. கடைசி மூச்சுவரை கட்சிக்காகவும், ஏழை மக்களின் நலனுக்காகவும்-நல்வாழ்வுக்காகவும் ஓய்வில்லாமல் உழைத்தார்'' என்றார்

**நாவலர் திரு இரா நெடுஞ்செழியன் அவர்கள்** பேசுகையில், ''காமராஜர் அவர்கள் எல்லார் உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற பாங்கைப் பார்க்கிறோம். அவர் தமக்கென வாழாதவர். அவர் ஓர் இலக்கியமாகவே திகழ்ந்தார். அவர் வாழ்ந்ததால் இந்த வீடு பெருமைப்படுகிறது. ஏன், இந்தத் தெரு பெருமைப்படுகிறது; இந்த நாடே பெருமைப்படுகிறது'' என்றார்.

பெருந்தலைவர் காமராஜ் நினைவு இல்லத்தினைத் திறந்து வைத்து, **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள்** பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். அந்த அடிப்படையில் காமராஜா இல்லத்தை அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கும் பணியை இங்குத் தொடங்கி இருக்கிறோம்.

''காமராஜர் எப்போதும் தன்னிடம் ஒரு சிறிய பெட்டியை வைத்திருப்பாராம். அதை யாரையும் திறக்க அனுமதிப்பதில்லையாம். இப்போது அதைத் திறந்து பார்த்தபோது, அதில் இருந்த முக்கியமான பொருள் என்னவென்றால், அது அவரது தாயாரது படம்தான்!

''அந்தத் தாய் நோய்வாய்ப்பட்டபோதுகூட அவர் போய்ப் பார்க்கவில்லை. பாசம், கடமை, உரிமை, உணர்வு அத்தனையும் அவருக்கு இருந்த போதிலும் பிறருக்காக, நாட்டுக்காகத் தொண்டு செய்யும் பண்பு இருந்ததே-அதுதான் தியாகம்.

**மக்களுக்காகச் சட்டம்!**

''போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். இன்றைக்கு நான் பல கோப்புகளைப் பார்க்கிறேன். காமராஜர் முதல்வராக இருந்தபோது வீணாகச் சட்டப் பிரச்சினையை வைத்து, அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை; **மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.**

''தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் நல்லவர்களின் தியாக உணர்வைப் போற்றிப் பாராட்டக் கடமைப் பட்டவர்கள். தியாக உள்ளம் படைத்தவர்களின் நினைவை எல்லார் உள்ளத்திலும் நிரந்தரமாக இடம்பெறச் செய்ய தமிழக அரசு ஆவன செய்யும்.

**காமராஜர் பல்கலைக்கழகம்:**

**''கல்லூரிக்குக் காமராஜர் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்துக்குக் காமராஜர் பெயர் சூட்டப்படும் என்று நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

''ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வர, செயல்பட்ட காமராஜருக்குப் பல்வேறு வகையில்-நினைவுகூரத்தக்க வகையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த ஆவன அனைத்தையும் அரசு செய்யும்.''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி நவில, விழா இனிது நிறைவுற்றது.

அல்லும் பகலும் அயராது பாடுபட்ட அமரர் காமராஜர் அவர்களுக்கு, அரசு எடுத்த இந்த முதல் விழா-முத்தான விழாக் கண்டு நம் நெஞ்சமெல்லாம் இனிக்கின்றது. நெஞ்சார அஞ்சலியும் செலுத்துகின்றது!

**—நிகழ்ச்சித் தொகுப்பு:**

**பி. வி. கிரி.**



# அரசவைக் கவிஞருக்கு விருதுவழங்கும் விழா

தமிழ்ப் பண்பாட்டைச் செழிக்க வைக்கும் வகையிலும் எங்கும்தமிழ் எதிலும்தமிழ் என்ற கொள்கை கொண்டு தமிழை வளர்க்கும் பணியிலும் முனைப்பாக ஈடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு **எம். ஜி. ஆர்.** அவர்கள் 15-1-'78 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் பிறந்தநாள் விழாவில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குரிய பல் வேறு திட்டங்களை அறிவித்தார்.

''நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களைப் போன்று திறமை வாய்ந்த ஒருவருக்கு அரசவைக் கவிஞர் விருதினை இந்த அரசு வழங்க இருக்கிறது''—என்று முதல்வர் அவர்கள் அவ்விழாவில் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் பல்வேறு மேடைகளில் அரசவைக் கவிஞர் நியமனம் குறித்து முதல்வர் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். அவரது அறிவிப்புகளைத் தொடர்ந்து, 28-3-'78 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு **செ. அரங்கநாயகம்** அவர்கள், ''கவிஞர் **கண்ணதாசன்** தமிழக அரசின் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பெற்றிருக்கிறார்'' என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு தமிழக மக்களுக்குத் தேனாக இனித்தது.

அரசவைக் கவிஞருக்கு விருது வழங்கும் விழா 9-7-'78 அன்று மாலையில் ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு **செ. அரங்கநாயகம்** அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ச் சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், திரையுலகப் பிரமுகர்களும் பொதுமக்களும் இந்த விழாவிற்கு அணி திரண்டு வந்திருந்தனர்.

கல்வித்துறைச் செயலர் திரு **சி. ஜி. ரெங்கபாஷ்யம்**, ஐ.ஏ.எஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அதன்பின்னர், கல்வி அமைச்சர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''ஒவ்வொரு துறையிலும் தமிழன் முன் நிற்பான் என்று உறுதி எடுத்துக் கொள்ளும் நாளாக-இந்த நாளை நான் எண்ணுகிறேன்.

''கண்ணதாசன் அவர்களைச் சிறப்பிப்பதற்காகத்தான் இந்த அரசவைக் கவிஞர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அவரது கருத்துக்களுக்குத் தடை விதிப்பதற்கு அல்ல! அவரது சொந்தக் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதை இந்தப் பதவியின் மூலம் நாங்கள் கட்டுப் படுத்தவில்லை!''

பின்னர், முதல்வர் அவர்களால், அரசவைக் கவிஞருக்கு வழங்கப்பட்டிருந்த தகுதி உரையைப் படித்தார் தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் **திரு டி. வி. நாராயணசாமி** அவர்கள்.

## அரசவைக் கவிஞர்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் சாத்தப்பச் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24-6-1927-ல் பிறந்த கவியரசு கண்ணதாசன், தமது 16-வது வயதிலிருந்து கவிதைகளை எழுதி வருகிறார்.

பல இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், இதுவரை 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளையும் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியிருக்கிறார். தமிழ்த் திரைப்பட உலகில் பாடல்களுக்கு ஒரு சிறப்பு இவரால் உருவாகியது எனக் கூறலாம்.

இலக்கியத் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் திறம் பெற்ற இவர், கவிதை, காவியம், நவீனம், கட்டுரை என 60-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், மேதகு **தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி** அவர்கள், தமிழக அரசின் சின்னமான கோபுரம் பதித்த தங்கச் சங்கிலியை, அரசவைக் கவிஞருக்கு அணிவித்து, தகுதி உரையை அளித்து, பொன்னாடை போர்த்துச் சிறப்பித்து உரையாற்றினார். ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''அரசுக் கவிஞர் என்னும் பட்டமும் பதவியும் தமிழ்ப் பண்பாட்டின் மரபாகும். கவிஞர்களின் கவிதைகளை ஏற்றுக் கொண்டு, அவர்களைச் சிறப்பிப்பது, தமிழ் மன்னர்களின் மரபாகும். அந்த மரபையொட்டி தமிழ்நாடு அரசும், கண்ணதாசனை அரசுக் கவிஞராக நியமித்துள்ளது. இதன் மூலம் இந்த அரசு தமிழைப் பெருமைப் படுத்தியுள்ளது.

''தத்துவம் போன்ற கடினமான விஷயங்களைச் சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளும் வகையிலே கவிதையாக வடிக்கக் கூடிய திறமை-கண்ணதாசனுக்கு உண்டு.''

ஆளுநரின் உரைக்குப் பின்னர் **உவமைக் கவிஞர் சுரதா** அவர்கள் அரசவைக் கவிஞரைப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''பொறுமை மிகுந்த இந்த பூமியில், கண்ணதாசன் மிகச் சிறந்த கவிஞர் என்று பெருமையுடன் சொல்கிறேன். சங்க காலத்திற்குப் பின்னர், மிகச் சுருக்கமான வரிகளில், பெரிய கருத்துக்களைச் சொல்லுபவர் கண்ணதாசன் ஒருவர்தான்.

''இவரது வரலாறு மாணவர் படிக்கும் பாடப் புத்தகமாகப் பள்ளிகளில் இடம் பெற வேண்டும். இவரை அரசு, வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்து, அந்நாடுகள் குறித்து அறிந்துவரச் செய்ய வேண்டும்.''

உவமைக் கவிஞரையடுத்துப் பேசிய மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. **வி. சி. குழந்தைசாமி** அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கவிதை என்பது மக்களைக் கவரத் தக்க ஆற்றல் படைத்தது; இனிய-அரிய கருத்துக்களை எடுத்துரைப்பது. அந்தக் கவிதை-கண்ணதாசன் அவர்களுக்குக் கைவந்திருக்கிறது. எளிய இனிய கவிதை வரிகளால் பொதுமக்களின் இதயங்களைத் தொடுவதிலே கண்ணதாசன் அவர்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு''

பின்னர், மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு பு. ரா. **கோகுலகிருஷ்ணன்** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''கவிஞர் கண்ணதாசனை அரசவைக் கவிஞராக நியமித்த இந்த ஆட்சியைப் போற்றாமல் இருக்க முடியாது. தமிழுக்குத் தரப்பட வேண்டிய இடத்தைத் தந்திருக்கிறார்கள்.''

பின்னர், பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு **ஆர். எம். வீரப்பன்** அவர்கள் குறிப்பிட்டார்:

''கவிஞர் கண்ணதாசன், முன்பு, தம்மைப் பற்றி என்ன பேசினார் என்பதைப் பற்றிக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் அவருக்கு இருக்கும் தகுதியை எண்ணிப் பார்த்து, இந்தப் பதவியை அவருக்கு அளித்திருக்கிறார் தமிழக முதல்வர்.''

அவருக்குப் பின்னர், மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. **மனோகரன்** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.:

''கவிஞர் கண்ணதாசன் குழந்தையுள்ளம் கொண்டவர். பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு ஒப்பற்ற கவிஞராகத் திகழ்கிறார், கண்ணதாசன். இவரது கவிதைகளைத் தொகுத்துக் கல்லூரி மாணவர்களுக்குத் தருவது நியாயம் ஆகும். கண்ணதாசனின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நோபெல் (Nobel) பரிசுகூடப் பெற முடியும். தமிழ் மக்கள் அவருக்கு நோபில் (Noble) பரிசு வழங்கியிருக்கிறார்களே!''

மாண்புமிகு நிதியமைச்சரின் உரைக்குப் பின்னர், மாண்புமிகு மேலவைத் தலைவர், சிலம்புச் செல்வர் திரு **ம.பொ.சி.** அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''அதியமான் என்ற மன்னனுக்கு நெல்லிக் கனி கிடைத்தது; அதைத் தின்றால் நெடுங்காலம் உயிர் வாழலாம். அப்படிப்பட்ட நெல்லிக் கனியை அவன் உண்ணவில்லை. தமிழ் மீதுள்ள பற்றினால் அதனைத் தமிழ்ப் புலவரான ஔவையாருக்கு வழங்கினான். அதைப் போலவே, மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்ப்பற்றின் காரணமாக, கண்ணதாசனை ஆயுட்காலக் கவிஞராக நியமித்திருக்கிறார். இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. தமிழர்கள் தோள்தட்டி, நெஞ்சு நிமிர்ந்து இதைப் பாராட்ட முடியும்.''

பாராட்டுரைகளுக்குப் பிறகு, அரசவைக் கவிஞர் திரு. **கண்ணதாசன்** அவர்கள் ஏற்புரையாகத் தெரிவித்ததாவது:

''இந்தப் பதவியை, என் தகுதிக்குக் காட்டிய மரியாதையாக தமிழுக்குக் காட்டிய மரியாதையாக-நான் எண்ணிக் கொள்கிறேன்.

''அரசவைக் கவிஞர் என்ற முறையில் எனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. கார் கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் விட மகிழ்ச்சியானது ஒன்று உள்ளது. அது, என் சாவின்போது பீரங்கி வண்டி வரும் என்பதுதான்!''

இறுதியில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு **கொண்டல் சு. மகாதேவன்** அவர்கள் நன்றியுரை நவில, விழா இனிது நிறைவேறியது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**
**எஸ். சண்முக சுந்தரம்.**

# வளர்ச்சிப் பாதையில் தமிழகம்

பி.சி.கணேசன்

ஜனநாயகத்தில் பழைய அரசுகள் மாறிப் புதிய அரசுகள் பொறுப்பேற்பது ஓர் இயற்கையான நிகழ்ச்சி தான் என்றாலும் பழைய அரசை மாற்றி, புதிய அரசை மக்கள் ஏன் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படை விஷயமாகும்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் பதவிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது. தமிழக மக்கள் அதனுடைய கொள்கைகளிலும், வேலைத் திட்டத்திலும் நம்பிக்கை வைத்து ஆட்சிப் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தார்கள். தேர்தல் அறிக்கையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், லஞ்ச ஊழலற்ற நிர்வாகத்தை மக்களுக்கு அளிப்பதாக உறுதி மொழி கொடுத்து இருந்தது.

ஆகவே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் ஆட்சியாளர்கள் இந்த உறுதி மொழியைக் காப்பாற்றும் வகையில் நடந்து கொள்ள முயற்சிக்கிறார்களா என்று மக்கள் எதிர்பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

தேர்தல் நேரத்தின் போதும் சரி, அதற்குப் பிறகும் சரி ஊழலற்ற ஓர் ஆட்சியைக் கொடுப்பது ஒரு பெரிய லட்சியமாகி விட முடியுமா என்கிற கேள்வி பலராலும் கேட்கப்பட்டது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தக் கேள்வி நியாயமானது போலக் கூடத் தோன்றலாம். ஆனால் ஊழலற்ற ஆட்சி என்ற சொல்லுகிற போது எதைக் குறிப்பிடுகிறோம் என்பதையும், அதனால் மக்களுக்கு விளையக் கூடிய பலன் என்ன என்பதையும், தெரிந்து கொண்டால், ஊழலற்ற ஆட்சி என்பது எவ்வளவு இன்றியமையாதது என்கிற விஷயம் தெளிவாகப் புலனாகும்.

உதாரணமாக ஒரு காரியத்திற்கு 100 ரூபாய் செலவு செய்வதாக வைத்துக் கொள்வோம். அந்த 100 ரூபாயின் கடைசிப் பைசா வரை அந்தக் காரியத்திற்கே செலவழிக்கப்படுமானால் 100 ரூபாய் செலவழித்ததற்கான முழுப் பலனும் கிடைக்க வாய்ப்பு உண்டு. மாறாக 100 ரூபாயை நான் ஒருவரிடம் கொடுக்க, 30 ரூபாய் அவர் எடுத்துக் கொண்டு, 70 ரூபாயை, வாங்க உத்தேசிக்கப்பட்ட பொருளை வாங்குவதற்குக் கொடுத்து அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த 70 ரூபாயை, பொருளை வாங்குவதற்காகக் கடைக்கு எடுத்துச் செல்லுகிறவன் 5 ரூபாயைத் தன் சொந்தச் செலவுக்கு வைத்துக் கொண்டு 65 ரூபாயைக் கடைக்காரரிடம் கொடுத்து அந்தப் பொருளை வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கடைக்காரரும் நாணயம் இல்லாத வியாபாரியாக இருப்பாரேயானால் அமித லாபம் பெற எண்ணி 45 ரூபாய் மதிப்புள்ள பொருளை 65 ரூபாய் என்று கூறி, வாங்கவந்தவனிடம் ஒப்படைத்து விடக் கூடும்.

இப்போது சிந்திப்போம். பொருள் வாங்குவதற்காக நாம் ஒதுக்கிய ரூபாய் 100. வாங்கப்பட்ட பொருளின் உண்மையான விலை 45 ரூபாய். ஆனால் நடைமுறையில் 100 ரூபாய் மதிப்புள்ள பொருளைப் பெற்றது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி 45 ரூபாய்பெறுமானமுள்ள பொருளைப் பெறுகின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பொருளை 100 ரூபாய் கொடுத்து நாம் வாங்க முடிவு செய்ததன் நோக்கமே 100 ரூபாய் கொடுத்தால்தான் நீடித்து உழைக்கக் கூடிய நல்ல பொருள் கிடைக்கும் என்பதாகும்.

ஆனால் 45 ரூபாய் மதிப்புள்ள பொருள் 100 ரூபாய் என்கிற போலி மதிப்பைத் தாங்கிக் கிடைக்கின்றபோது, அது நீடித்துப் பயன்படாததாகி, பொருள் வாங்கப்பட்ட நோக்கத்தையே வீணாக்கி விடுகிறது.

கணக்கில் 100 ரூபாய் செலவு எழுதப்படுகிறதே தவிர அதற்கு உரிய பலன் கிடைக்காமலே போய்விடுகிறது.

நிர்வாகத்தில் ஊழல் என்று சொல்லுகிறபோது — பொறுப்பில் உள்ளவர்களிடம் லஞ்சம் என்று சொல்லுகிறபோது — அவைகளைத் தனி மனிதர்களின் சொந்த பலவீனங்களாகக் கருதி ஒதுக்கி விட முடியாது. ஏனென்றால் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணம் முழுவதும் மக்களுக்காகவே, சிக்கனமாக, பயனுள்ள வகையில் செலவழிக்கப்பட வேண்டும் என்பது நிர்வாகத்தின் பால பாடம்.

வளர்கின்ற சமுதாயத்தில் வரிகள் அதிகமாக விதிக்கப்படுவது தவிர்க்க முடியாத விஷயம் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். காரணம்,வளர்ச்சிக்குத் தேவையான நிதியை அதிகப்படியான வரி விதிப்பதன் மூலம் பெறுவது அவசியமாகிறது. இப்படி வரிப் பளுவை மக்கள் மேல் சுமத்தி வசூலித்த தொகையை, ஊதாரித் தனமாகச் செலவழிப்பதும், ஒரு சிலர் தங்களைக் கொழுக்க வைத்துக் கொள்ள அதைக் கையாள்வதும், நிர்வாகத்திலும் பொதுவாழ்க்கையிலும் மன்னிக்க முடியாத குற்றங்கள் ஆகும்.

மக்களின் வரிப் பணம் முழுவதும் மக்களுக்காகவே செலவழிக்கப்படும்போது கூட மக்களுக்கு முழுப் பலன் கிடைப்பது சந்தேகம் என்கிற நிலையில், கிடைத்த பணத்தைச் சுருட்டிய வரையில் லாபம் என்ற ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் செயல்படுவார்களேயானால் அது மிகப் பெரிய சமூக விரோதச் செயல் என்பது பற்றி இரண்டு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது.

ஜப்பான் நாட்டில் மழைக் காலங்களில்மக்களுக்குப்பயன்பட வேண்டும் என்பதற்காகப் பொது இடங்களில் குடைகள் வைக்கப்பட்டு இருக்குமாம். தேவையானவர்கள் எடுத்து உபயோகித்து விட்டு திரும்பவும் எடுத்த இடத்திலேயே கொண்டு வந்து வைத்து விடுவார்களாம்.

அங்குள்ள பொது இடங்களில் மக்களின் உபயோகத்திற்காக வைக்கப்படும் பொருள்கள் திருட்டுப்போவதுகிடையாது.காரணம், அங்குள்ள திருடர்கள் கூடத் தனிப்பட்டவர்களின் உடைமைகளைத்தான் களவாடுகிறார்களே தவிர பொதுச் சொத்தினைத் திருடுவது தங்களைத் தாங்களே திருடிக் கொள்வது போன்ற ஒரு காரியம் என்று எண்ணிப் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆக, எல்லோருக்கும் பயன்படும் பொதுச் சொத்தை, திருடர்களே கூட, திருடக்கூடாது என்று எண்ணி ஒழுக்கத்துடன் நடந்து

கொள்கிற நாடுகளும் உலகில் இருக்கின்றன.

அப்படி இருக்க, மக்களின் வரிப் பணம் என்கிற, பொது மக்களின் பணத்தை லஞ்சமாகப் பெறுவதும், ஊழல் முறையில் ஒதுக்கிக் கொள்வதும், எவ்வளவு பெரிய சமூகக் குற்றங்கள் என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஊழலின் தன்மையை விளக்க ரஷியநாட்டில் நடைபெற்றதாக கதை ஒன்றைச் சொல்வார். அந்தக் கதை இதுதான் :

ரஷியாவை ஆண்ட ஒரு மன்னன், மக்களுக்குப் பெருமளவில் பணத்தைக் கஜானாவிலிருந்து செலவழித்தும், மக்கள் ஏன் திருப்தி அடையாமல் அரசைக் குறை கூறுகிறார்கள் என்று புரியாமல் குழப்பம் உற்றான். அதுபற்றித் தன்னுடைய அமைச்சரிடம் விளக்கம் கேட்டான். அமைச்சருக்கு நிலைமை புரிந்தது. ஆனால் ஆட்சித் தலைவரிடம் அதை எப்படி எடுத்துச் சொல்வது என்று அவருக்குத் தயக்கம். மன்னனிடம் விஷயத்தை விளக்க நேரம் கருதிக் காத்து இருந்தார் அமைச்சர்.

ஒரு நாள் மன்னன் விருந்து ஒன்று நடத்தினான். மன்னனும் பிரபுக்களும் அமைச்சரும் விருந்து அருந்திக் கொண்டு இருக்கும் போது, மன்னன் அமைச்சரைப் பார்த்து, அவருக்கு அருகிலுள்ள ஐஸ் கிரீமைத் தன்னிடம் அனுப்பி வைக்கச் சொன்னான். அந்தச் சந்தர்ப்பத்தைச் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய அமைச்சர், ஐஸ் கிரீமைக் கையிலேயே வழித்து அருகிலிருந்தவரிடம் கொடுத்து, அப்படியே ஒவ்வொருவராக வாங்கி, அதை மன்னனிடம் சேர்ப்பிக்கும்படி செய்தார். ஐஸ் கிரீம் ஒவ்வொருவரது கையிலும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போய் மன்னனைச் சென்று அடைந்த போது சிறு துளி ஆயிற்று.

மன்னன் விஷயம் புரியாமல் அமைச்சரை ஆச்சரியத்தோடும் கோபத்தோடும் பார்த்தான். அப்போது அமைச்சர் ''கஜானாவில் உள்ள பணத்தை மக்களுக்குச் செலவழித்தும் மக்கள் ஏன் திருப்தியற்று இருக்கிறார்கள் என்று ஒரு முறை என்னைக் கேட்டீர்கள். கஜானாவில் இருந்து செலவழிக்கப்படும் பணமும் பல கைகளுக்கு மாறி, மக்களை அடையும்போது ஐஸ் கிரீமுக்கு ஏற்பட்ட கதியையே அடைகிறது'' என்று விளக்கம் சொன்னார்.

இந்தக் கதையை அறிஞர் அண்ணா அடிக்கடி மேடைகளில் கூறி, நிர்வாகத்தில் லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடுகிற போது எத்தனை வரிகள் போட்டாலும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் போய்விடும் என்று எடுத்துச் சொல்வார். ஆகவேதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே ஊழல் அற்ற ஆட்சியை மக்களுக்குக் கொடுப்பதாகத் தெள்ளத் தெளிவாக வாக்குறுதி கொடுத்தது.

புதிய திட்டங்கள் போடுவதைவிட ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் முறையாகச் செயல்பட்டு மக்களுக்குப் பலன் தர வேண்டுமானால் லஞ்ச ஊழல் அற்ற நிர்வாக அமைப்பைக் காண்பது இன்றியமையாதது ஆகிவிடுகிறது. ஆகவே வளர்ச்சிப் பாதையில் தமிழகம் பீடு நடை போட வேண்டுமானால் ஊழல் அற்ற ஆட்சியினை அமைப்பதைத் தன்னுடைய தலையாய கடமை என்று தமிழக முதல்வர் கருதி இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

தமிழக அரசும் ஊழலற்ற ஆட்சியை உருவாக்குவதற்கு எத்தகைய இருதய சுத்தியோடு பாடு படுகிறது என்பதை மேதகு தமிழக ஆளுநர் பட்வாரி அவர்களும் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகப் பாராட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஆட்சியில் ஊடுருவிவிட்ட ஊழலைக் களைந்து எறிய, பல நிர்வாக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டது. அவற்றை மத்திய அரசில் உள்ளவர்களும் மனம் உவந்து பாராட்டி இருக்கிறார்கள்.

—தொடரும்

# பிறந்த ஊரில் பெருந்தலைவர் விழா !

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் 76-வது பிறந்த நாள் விழா அத்தலைவரின் பிறந்த ஊரான விருதுநகரில் 15-7-'78 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் வணிகர்கள் கலந்து கொள்ளும் வகையில் கடைகளுக்கு அன்று விடுமுறை விடப்பட்டிருந்தது. காமராஜ் இல்லம் மலர்களாலும், வண்ணத் தோரணங்களாலும் அழகுபடுத்தப்பட்டிருந்தது.

முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சா. சுப்பிரமணியம் அவர்கள் காமராஜ் இல்லத்தில் உள்ள காமராஜ் சிலைக்கு மாலை அணிவித்து நூற்பு இயக்கத்தையும், இசை நிகழ்ச்சியையும் துவக்கி வைத்தார்.

விழாவையொட்டி க்ஷத்திரியா பெண்கள் உயர்நிலைப்பள்ளி—எஸ். எஸ். அண்ணாமலை கலையரங்கத்தில் முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

## காமராஜ் நகர்

சென்னை திருவான்மியூர் புறநகர்த் திட்டப் பகுதிக்குக் 'காமராஜ் நகர்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

காமராஜரின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசு இவ்வாறு அறிவித்துள்ளது. இந்தப் பெயர் மாற்றம் அவரது பிறந்த நாளான ஜூலை 15 முதலே அமலாகிறது.

'தனி மனிதன் தத்துவமாகலாம்' என்ற தலைப்பில் கருத்தாழம் நிறைந்த சொற்பொழிவு ஒன்றினை ஆற்றி திரு குமரி அனந்தன் அவர்கள் பெருந்தலைவருக்குப் புகழாரம் சூட்டினார்.

விருதுநகர் கல்வி மாவட்டத்தில் உள்ள கல்லூரி-உயர்நிலைப் பள்ளிகளிடையே பெருந்தலைவர் காமராஜ் பற்றிய பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தால் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் ரூ. 780 மதிப்புள்ள நூல்களைப் பரிசாக வழங்கினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!




"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

– அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

– பேரறிஞர் அண்ணா




வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

கனி வளம் கொஞ்சும் சேலம்
கலை நலம் கொஞ்சும் கோலம்
ஆடித் திருவிழாக் காலம்!

# அரசுப் பொருட்காட்சி '78

## சேலம்

(1978 ஆகஸ்ட் 6 முதல் செப்டம்பர் 19 வரை)

சேலம் நகரில்
போஸ் மைதானத்தில்

இலட்சக் கணக்கான
மக்களைக்
கவர்ந்திடும் வகையில்
அமைந்திடும்
பொருட்காட்சி

முதன் முறையாக அரசுப் பொருட்காட்சி!
மத்திய - மாநில அரசுத்துறைகள்
பொதுத்துறை நிறுவனங்கள்—
தனியார்துறை நிறுவனங்கள் பலவும்
பங்கேற்கின்றன.

தனிப்பட்ட கேளிக்கைப் பகுதிகளில்
நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள்!
திரைப்படக் காட்சிகள்!

எல்லாரும் மகிழ — நல்லதொரு வாய்ப்பு



